DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

BIG
Great Coverage.
BIG Savings.
Home - Auto - Life - Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

உதயம் 1457 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday March 8, 2024

# தமிழ்நாட்டில் உயிரிழந்த சாந்தனின வித்துடல் 04.03.2024 அன்று எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல மயானத்தில் புதைக்கப்பட்டது



சாந்தனின் உடல் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல மயானத்தில்
04-03-2024
அன்று தலைவர் பிரபாகரனின் வீட்டில் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.
பெருமளவிலான மக்களின் கண்ணீர் கதறலுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.
இந்தியாவின் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு முப்பது வருடங்களுக்கு மேலாக சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட போதும் தொடர்ந்து சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு தாயகம் திரும்ப இருந்த நிலையில் உடல் நிலை மோசமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் திடீரென உயிரிழந்திருந்தார்.
(உள்ளே விபரமான செய்தி 14ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

# Mass Killing in Ottawa : 6 dead including 4 children and their mother . Murderer is a 19 year old Sri Lankan International student Febrio De-Zoysa.

# கனடாவின் ஒட்டாவாவில். 6 இலங்கையர்களைக் கொலை செய்த இலங்கையிலிருந்து வந்திருந்த சர்வதேச மாணவன்



கனடாவின் ஒட்டாவா தலை நகரில் 06-03-2024 புதன்கிழமை அன்று இடம்பெற்ற பயங்கரமான கொலைச் சம்பவம் ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் அவரது நான்கு குழந்தைகள் உட்பட ஆறாம் நபரான ஆண் ஒருவரும் 19 வயதான இலங்கை சர்வதேச மாணவர் **Febrio De-Zoysa** என்பவரால் கொலை செய்யப்பட்டார்கள் என்ற நெஞ்சை உருக்கும் சம்பவம் தொடர்பாக அந்த இளம் கொலையாளி கைது செய்யப்பட்டுள்ளதாக ஒட்டாவா பொலிஸ் பிரிவு அறிவித்துளளது.
இந்த துயரம் தரும் சம்பவத்தில் இளம் தாயின் கணவரும் கொல்லப்பட்ட நான்கு பிள்ளைகளின் தந்தையுமான தனுஸ்கா விக்ரமசிங்க என்பவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உள்ளே விபரமான செய்தி 24ம் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

Uthayan International Awards Festival – 2024
உதயன் சர்வதேச விருது விழா-2024
Dance, Music and Awards Presentation
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
மண்டபம்:- The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் தென்னை மரங்களை தாக்கி வரும் "வெண் ஈ தாக்கம்" – ஏனைய தாவரங்களுக்கும் பரவும் அபாயம்



(07-03-2024)

மன்னார் மாவட்டத்தில் கடந்த தை மாதத்தில் இருந்து தென்னை செய்கையில் "வெண் ஈ யின்" தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் வெண் ஈ யின் பரவலை கட்டுப்படுத்த முடியாத நிலையை எட்டியுள்ளதாக தெரிய வருகின்றது.

இலைகளின் பின்புறம் இச் சிறிய ஒரு சோடி இறக்கை கொண்ட கொசு அளவில் உள்ள ஈக்கள் வாரம் 100 முட்டையிட்டு தென்னை ஓலையின் பச்சயத்தை சாப்பிடுவதால் ஓலைகள் காய்ந்து கொக்கு,காகம் எச்சம் பட்டது போல வெண்மையாக காணப்படுகின்றது.

இதன் எச்சங்கள் நாவல்,கருப்பு நிறமாக தென்னையின் கீழுள்ள மரங்களின் இலைகளில் விழுவதனால் அவை முதலில் கரும்புள்ளியாக மாறி பின்பு பூஞ்சன நோயின் தாக்கத்தினால் மண்ணிறமாக காய்ந்து காணப்படும்.

சிலர் வெண்ணிற ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஓலைகளை முழுமையாக வெட்டி எரித்து விடுகின்றனர். ஆனால் ஒரு பாலையும் ஓலையும் ஒரு மாதத்தில் உருவாகிறது. தென்னை காய்ப்பதற்கு குறைந்தது 10-15 ஓலைகள் அவசியம் எனவே ஓலைகளை வெட்டுவது பெரும் பாதிப்பையும் நட்டத்தையும் ஏற்படுத்தும்.

குறிப்பாக தென்னை மரங்களில் அதிகம் பரவியிருந்த வெண் ஈக்கள் தற்போது அனைத்து வகையான தாவரங்களிலும் பரவியுள்ளதோடு அதிகளவு இனப்பெருக்கத்தையும் மேற்கொள்கின்றது.



எனவே வெண் ஈக்களின் பரவல் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு ஓய்வு பெற்ற விவசாய சிரேஷ்ட அதிகாரி பீற்றர் சிங்கிலயர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஈக்கள் வாகனங்கள், மற்றும் மனிதர்கள் மூலம் பரவக்கூடியது. எனவே அரசாங்கம் இந்த நோய் தாக்கத்தை சாதாரண ஒன்றாக கடந்து செல்லாது தேசிய அனர்த்தமாக கருதி கட்டுப்படுத்த முன்வர வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மன்னார் தீவு பகுதியில் மக்களை பாதிக்கும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்

**மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ்.மாக்கஸ் அடிகளார்.**
(எஸ்.றொசேரியன் லெம்பேட்) (07-03-2024)

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் இந்திய மீனவர்களின் அத்து மீறிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்ற நிலையில், மன்னார் தீவு பகுதியில் மக்களை பாதிக்கும் வகையில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் மக்களின் எதிர்ப்பையும் மீறி ரகசியமாக இடம்பெற்று வருகின்றது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 07-03-2024 வியாழன் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியமீனவர்களின் அத்து மீறிய வருகையின் காரணமாக கடல் வளம் சுறண்டப்படுவதினால் எமது மீனவர்கள் வாழ முடியாத நிலை காணப்படுகிறது.கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நாங்கள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்த போதும் இதற்கு எவ்வித முடிவும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாங்கள் முன் நின்று குரல் கொடுத்து வருகிறோம்.

இலங்கை கடற்பரப்பினுல் ஆயிரக்கணக்கான இந்திய இழுவைப்படகுகள் வந்து மீன் வளங்களை அழிப்பதோடு, மீனவர்களின் சொத்துக்களும் அழிக்கப்படுகின்றது.




இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் இந்திய மீனவர்களின் அத்து மீறிய நடவடிக்கை இடம் பெறுகின்றது.

மன்னார் தீவை பாதுகாக்க மன்னார் மாவட்ட மக்கள் எம்முடன் கைகோர்த்துள்ளனர்.

வளம் நிறைந்த மன்னார் மண்ணை வளமற்ற நிலமாக மற்ற அந்நிய சக்திகள் முயற்சிக்கின்றது.

கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் மக்களின் எதிர்ப்பையும் மீறி ரகசியமாக இடம்பெற்று வருகின்றது.

எனவே மக்களை பாதிக்கும் குறித்த நடவடிக்கைகள் மன்னார் தீவு பகுதியில் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் முன்னெடுத்த போராட்டம்

(எஸ்.றொசேரியன் லெம்பேட்) (06-03-2024)

மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க கோரி குறித்த கிராம மக்களை புதன்கிழமை (6) காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பள்ளிமுனை புனித லூசியா மீனவர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் புதன்கிழமை (6) காலை 9.30 மணியளவில் பள்ளிமுனை மீன் சந்தை கட்டிடத் தொகுதிக்கு முன் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமானது.

குறித்த போராட்டத்தில் பள்ளிமுனை பங்குத்தந்தை,குறித்த கிராம மீனவர்கள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் மாவட்டச் செயலகம் வரை அமைதியான முறையில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.



இதன் போது பள்ளிமுனை கிராம மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தையும் தமக்கான இடங்களையும் தக்கவைப்பதில் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்தனர்.

மேலும் மன்னார் சௌத்பார் மீன்பிடி துறையில் மீனவர்கள் மீனவர்கள் வாழ்வாதாரம் மற்றும் மீன் பிடி எல்லை பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.



மேலும் குறித்த மீனவர்கள் முந்தல் காணி எல்லை மற்றும் பாரம்பரிய வழிபாட்டு உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளமை மற்றும் சிறு தொழில் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாக அமைக்கப்பட்டுள்ள கரையோர கடலட்டை பண்ணை போன்றவற்றை அகற்றுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த பிரச்சினைகள் குறித்து ஏற்கனவே மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் ஆராயப்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என குறித்த கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த கிராம மக்கள் முன்வைத்துள்ள பிரச்சினைகளுக்கு துரித கதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய தீர்வை வழங்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.போராட்டத்தின் பின் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

# மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள 250 மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2ஆம் கட்ட நடவடிக்கைக்கான மக்களின் அபிப்பிராயங்கள் கையளிப்பு

(எஸ்.றொசேரியன் லெம்பேட்) (06-03-2024)



மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள 250 மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2ஆம் கட்ட நடவடிக்கைக்கான மக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் கோரிக்கைகள் மன்னார் பிரதேசச் செயலகத்தில் புதன்கிழமை(6) மதியம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கடந்த மாதம் முன் வைக்கப்பட்ட 250 மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டத்தின் 2 ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் இறுதி சுற்றறிக்கை இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையிலான குழுவினர் கையளித்துள்ளனர்.

குறித்த காற்றாலை மின் உற்பத்தியினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான மக்களின் கருத்துக்கள் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின் உற்பத்தியினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான மக்களின் கருத்துக்கள் மற்றும் குறித்த திட்டத்திற்கு மக்களின் எதிர்ப்புகள் தொடர்பாகவும், அவர்களின் கடிதம் மற்றும் கையெழுத்துக்களும் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை மக்கள் எதிர்க்க வில்லை எனவும், இத்திட்டத்தை மக்களை பாதிக்காத வகையில் மன்னார் தீவில் இருந்து பிறிதொரு இடத்தில் முன்னெடுக்குமாறு மக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

# உதயன் கதிரோட்டம்

## கல்வி பயில 'விசா' பெற்று கனடாவில் கால்பதித்து கொல்லத்தான் வந்தானோ அந்த மாணவக் கொலைஞன்

கனடாவிற்கு உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வேறுபட்ட 'விசாக்களை'ப் பெற்று பறந்து வரும் ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் விமான நிலையங்களில் 'இறங்கிய' வண்ணமே உள்ளார்கள். கனடிய விமானங்களின் செயற்பாடுகள் இன்றிலிருந்து ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது போல அன்றி தற்போது பல மாற்றங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான மாற்றங்கள் கனடாவில் என்ன வகையான மாற்றங்களைக் கொண்டு வரப்போகின்றன என்பதை திட்டமிட்ட வகையில் நோக்காமல் அவசரத்தில் 'காரியங்கள்' இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

கனடாவின் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விடுகின்ற தொகை 500 பில்லியன் டாலர்கள் என்று 'பெருமையோடு' பேசியுள்ளார் தற்போதைய அரசாங்கத்தின் நிதி அமைச்சர் கிறிஸ்டினா பிரிலேண்ட் அவர்கள்.

இவ்வாறான பல அரசியல் பொருளாதார நெருக்கடிகள் தோன்றியுள்ள கனடாவில் அதுவும் அதன் தலைநகரமான ஒட்டாவாவில் நேற்று முன்தினம் 'அரங்கேறியுள்ள' அறுவர் கொலைகள் நாட்டையும் உலகத்தையும் ஒரு 'உலுக்கு' உலுக்கியுள்ளதை விட ஒட்டாவா படுகொலைகளை நடத்தியவனும் கொலை செய்யப்பட்டவர்களும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான படுகொலைகளை எவ்விதமான அச்ச உணர்வோ அன்றி தயக்கமோ இன்றி இளம் வயதில் நடத்துவதற்குரிய கொடிய சிந்தனை அந்த 19வயது மாணவக் கொலைஞனை பற்றிக் கொண்டது கூட எமக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

நான்கு அழகிய குழந்தைகளின் மத்தியில் அவர்கள் வாழ்ந்த வீட்டிலேயே வாழந்து வந்த அந்த மாணவக் கொலைஞனின் நடவடிக்கைகள் பற்றி அக்கறை கொள்ளாமல் இருந்ததன் விளைவுதான் இந்த 'அநியாயமான படுகொலைகள்' என்று நாம் எண்ணிக் கொண்டிருக்க வேண்டுமா? என்ற கேள்வியும் நமக்குள் எழுகின்றதல்லவா?


கல்வி என்னும் அறிவாயுதத்தை கையில் எடுக்க வேண்டிய ஒரு இளம் மாணவன். அதுவும் கனடா என்னும் பல்கலாச்சாரக் கொள்கையை கடைப்பிடிக்கும் ஒரு அற்புதமான தேசம் தனக்கு வழங்கிய அரிதான சந்தர்ப்பம் பற்றியும் அந்த மாணவன் கொலைஞனை சிந்திக்க விடாமல் தடுத்தது எது என்பதை சமூகமும் காவல் துறையும் கண்டறிய வேண்டும். குற்றங்கள் பல இழைத்த குற்றவாளிகளை நாட்டுக்குள் அனுமதிக்க மறுப்பதும், அல்லது கனடாவிற்குள் கால்பதித்த பின்னர் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்களை கைது செய்து விசாரித்து பின்னர் அவர்களின் பிறந்த நாடுகளுக்கே அனுப்பிவிடும் நடவக்கையை நேர்த்தியாகச் செய்துவருகின்ற கனடிய அரசும் அதன் காவல்துறையும் குடிவரவுத் துறையும் தங்கள் கண்களை கொஞ்சம் விரித்துப் பார்க்க வேண்டிய நேரம் வந்துவிட்டதைத் தான் இவ்வாரத்தில் இடம்பெற்ற ஒட்டாவாப் படுகொலைகள் எமக்கு காட்டியுள்ளன என்றே நாம் கருதுகின்றோம்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.ca




உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

Painting
Bathrooms
Kitchens
Decks
Flooring
Basements
Pot lights
Accent Walls

Contact us | 416.706.8160

**அறைகள் அல்லது முழுமையான வீடுகள் வாடகைக்கு உண்டு**

1. **Brampton** ல் **Creditview & Mayfield** சந்திப்புக்கு அருகில் **Room for Rent or Full House for Rent**

2. **Mississauga** வில் **Britannia & Creditview** சந்திப்புக்கு அருகில் **Room for Rent or House for Rent.**

அனைத்து வசதிகளும் உண்டு.
விபரங்களுக்கு அழைக்கவேண்டிய இலக்கம்:- **416-825-7785**

**அறையும் Basement உம் வாடகைக்கு உண்டு**

**Brampton- Woodbridge** அருகில் **Hwy 27 & Langstaff Road** சந்திப்புக்கு அருகில் ஒரு வீட்டின் மேல் தளத்தில் அறை ஒன்றும் மற்றும் அதே வீட்டில் முழுமையான **One Bed Room Basement** உம் உடனடியாக வாடகைக்கு உண்டு.
அனைத்து வசதிகளும் உண்டு
விபரங்களுக்கு அழைக்கவேண்டிய இலக்கம்:- **416-428-2141**

**Brand New Basement for Rent**

**Brand New Basement for Rent in Pickering with 3 bedrooms and 2 full washrooms. Separate walk-up entrance. Separate Laundry in basement and 1 parking included. Close to schools. 5 mins drive to Pickering Town Centre. grocery stores, Go transit and shopping.
For more information please call:
416-305-9119**

**ROHINI TAILORS & DESIGNS**

**Saree Blouse, Skirt & Blouse** மற்றும் மணமகளுக்கான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும்.
அத்துடன் கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கான தையல் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இடம்:- **Pickering**
**தொடர்புகளுக்கு:** 647 569 4794
**அல்லது** 416 438 2552

**தமிழர் நிறுவனம் ஒன்றுக்கு தொண்டு அடிப்படையில் பணியாற்றுவதற்கு ஆண் – பெண் பணியாளர்கள் தேவை**

ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய தமிழர் நிறுவனம் ஒன்றுக்கு தொண்டு அடிப்படையில் பணியாற்றுவதற்கு ஆண் மற்றும் பெண் விண்ணப்பதாரிகள் வரவேற்கப்படுகின்றார்கள்.
ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் அலுவலகப் பணி மற்றும் மொழிபெயர்ப்பு செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மேலும் கொம்பியுட்டர் அனுபவம் அதில் கணக்கியல் தொடர்பாக வேலைகள் **( Excel and Word Processing)** மற்றும் அலுவலக மேற்பார்வை ஆகியவற்றில் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
தற்போது தற்காலிக விசா பெற்று இலங்கையிலிருந்து வந்துள்ளவர்களும் வரவேற்கப்படுகின்றார்கள்.
தெரிவு செய்யப்படுகின்றவர்களுக்கு பிரயாணப்படி **(Travelling Allowance)** மற்றும் உணவுப்படி **(Food Allowance**) ஆகியன வழங்கப்படும். மேலும் ஒப்பந்த அடிப்படையில் **(Contract Basis)** சில பணிகளைச் செய்தால் அதற்குரிய சன்மானமும் வழங்கப்பெறும்.
மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்க **info@cyecs.org** என்னும் மின்னஞ்சலைப் பயன்படுத்தவும்.
தொலைபேசி மூலம் அழைப்பவர்கள் 647 762 9512 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பெண் அதிபர் நியமனம் இரத்து – கல்வி அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் அறிவிப்பு

பு. கஜிந்தன்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிதாக நியமன கடிதம் வழங்கப்பட்ட பெண் அதிபராக திருமதி. செல்வ குணபாலனின் நியமனத்தை தற்காலிகமாக இடம் நிறுத்துவதாக கல்வி அமைச்சின் செயலாளர் வசந்த பெரகரா எழுத்து மூலமான கடிதத்தை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது செயலாளரினால் 22-02-2024 அன்று இடப்பட்ட Ese/App/SLps/04/11/2023 கடிதத்தின் பிரகாரம் மத்திய கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்ட உங்கள் நியமனத்தை தற்காலிகமாக இடை நிறுத்துவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் கீழ் நிறுவப்பட்ட கல்வி சேவை குழு வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரம் கல்வி அமைச்சின் செயலாளர் குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

# தலைவர் மேதகு பிரபாகரன் பிறந்த மண்ணான வல்வெட்டித்துறையில் முதியோர் இல்லத்தில் இடம்பெறும் கொடுமைகள்



தனியார் அமைப்பு ஒன்றினால் நடத்தப்பட்டு வரும் வல்வை முதியோர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கு கொடுமைகள் இடம்பெறும் வீடியோ காட்சிகள் வெளியாகி உள்ளன.

ஒரு முதியவரை குறித்த நிறுவனத்தில் அனுமதிக்க வேண்டுமானால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அறவிடப்படுவதுடன் மாதம் ஒன்றுக்கு ஒருவரிடம் எழுபது ஆயிரம் ரூபா பணம் அறவிடப்படுகிறது.

ஆனால் குறித்த முதியோர் இல்லத்தில் ஆலயங்களில் சமைக்கப்படும் உணவுகளை குளிர்சாதனப் பட்டியில் வைத்து மறுநாள் சூடாக்கி முதியோர்களுக்கு வழங்கும் காணொளிகளும் அம்பலமாகியுள்ளது.

குறித்த முதியோர் இல்லத்தில் பல முதியவர்கள் பல்வேறு நோய்களுடன் காணப்படும் நிலையில் அவர்களுக்கு பழைய உணவுகளை பரிமாறி அவர்களின் உயிர்களுக்கு உலை வைக்கும் செயற்பாடுகள் இடம் பெற்று வருகிறது.

அதுமட்டுமல்லாது குறித்த இல்லத்தில் கடமையாற்றுபவர்களுக்கு நிக நுவுகு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை.

வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகள் தமது பெற்றோர்கள் குறித்த இல்லத்தில் நலமுடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் குறித்த இல்லத்தில் இடம்பெறும் சம்பவங்கள் அவர்களின் பெற்றோர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்காத நிலையில் காணப்படுகிறது.

குறித்த வல்வை முதியோர் இல்லமானது பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படாத இல்லம் என தகவல்கள் வெளியாகி உள்ள நிலையில் இவர்களின் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக பிரதேச செயலகம் பதிவை வழங்கவில்லை என்ற தகவலும் வெளியாகி உள்ளது.

# உயிர் சேதம் ஏற்பட்டாலும், இந்திய எல்லைக்குள் போராட்டம் நடத்துவதே அடுத்த இலக்கு

## சம்மேளன உப தலைவர் ரட்ணகுமார் தெரிவிப்பு!



இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளினால் எமது மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை உலகத்திற்கு வெளிப்படுத்தும் ஊடகங்களின் மூலம் எமது போராட்டத்திற்கு கிடைக்கும் என யாழ்ப்பாண மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் தெரிவித்தார்.

03-03-1014 ஞாயிற்றுக்கிழமை பருத்தத்துறை பகுதியில் இருந்து இலங்கை கடல் எல்லை வரை இடம் பெற்ற இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிரான கறுத்தக்கொடி போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அத்துமீறிய இந்திய மீனவர்களினால் தொடர்ச்சியாக எமது வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு வரும் நிலையில் எமது கண்டனத்தையும் எமது ஆதங்கங்களையும் வெளிப்படுத்தும் முகமாக இலங்கை கடல் எல்லை வரை எமது கறுத்தக்கொடி போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இதற்கு முன்னரும் அத்துமீறிய இந்திய கடற்தொழிலாளர்களை கட்டுப்படுத்துமாறு கோரி பல போராட்டங்களை முன்னெடுத்தோம் ஆனால் தொடர்ந்தும் அவர்களது வருகை இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் முகமாக கடல் வழியாக இலங்கை எல்லை வரை எமது கறுத்தக் கொடிப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இந்தப் போராட்டம் ஒரு ஆரம்பப் போராட்டமாகவே பார்க்கிறோம். ஏனெனில் நாம் எமது கடல் எல்லை வரை போராட்டத்தை முன்னெடுத்தோம் இந்திய எல்லைக்குச் செல்லவில்லை.

இந்தியா எல்லைக்கு செல்வோமாயின் என்ன நடக்கும் என்பதும் எமக்குத் தெரியும், அது பற்றி நாம் கவலைப்பட மாட்டோம்.

எமது கோரிக்கைகளை இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தவறும் பட்சத்தில் எமது அடுத்த போராட்டம் உயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் இந்தியா எல்லைக்குள் நுழைந்து எமது எதிர்ப்பை வெளியிடுவதே அடுத்த இலக்கு என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் கணவனால் கைவிடப்பட்ட இளம் தாய் மற்றும் மகன் பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பி வைப்பு




வவுனியாவில், கணவனால் கைவிடப்பட்ட நிலையில் நிர்கதிக்குள்ளான இளம் தாய் மற்றும் விசேட தேவையுடைய 07 வயது மகன் ஆகியோர் தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் அபயம் பிரிவுக்கு முறைப்பாடு கிடைத்தது.

இந்த முறைப்பாடு தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் அவர்களால் ஆராய்ந்து வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய அபயம் பிரிவினரால், வவுனியா பிரதேச செயலாளருக்கு தகவல் வழங்கப்பட்டது.

உடனடியாக செயற்பட்ட வவுனியா பிரதேச செயலாளர், குறித்த சிறுவனையும், இளம் தாயையும் பாதுகாப்பு இல்லத்தில் தங்கவைப் பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். சமூக நலன் விரும்பி ஒருவரால் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் அபயம் பிரிவினர் துரித நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் விழா – விமானப்படை தளபதி உதேனி ராஜபக்ஷ தெரிவிப்பு



இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ் முற்றவெளியில் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் விழா விளம்பர உள்ளதாக இலங்கை விமான படையின் தளபதி எயார் மாஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள இலங்கை விமானப் படையின் 73 ஆவது ஆண்டு நிறைவு விழா தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை விமான படை 73 வருட கால வரலாற்றை கடந்து வந்ததை இட்டு நான் பெருமை அடைகிறேன். ரோயல் விமானப்படையாக ஆரம்பிக்கப்பட்ட எமது விமானப்படை ஆரம்ப உறுப்பினர்களாக 6 உத்தியோகத்தர்களையும் ஏனைய தரத்திலான 24 உத்தியோகத்தர்களை கொண்டதாக இருந்தது.

தற்போது நமக்கு சுமார் 20 பிராந்திய கிளைகள் காணப்படுவதுடன் அதற்கு மேலாக சுமார் 73 தொழில்வான்மை பிரிவுகளும் காணப்படுகின்றது.

கல்வி மற்றும் சமூக சேவை வேலை திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து 73 வது ஆண்டு விழாவை கௌரவமான முறையில் சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கிறோம்.


அந்த வகையில் கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் வட மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 73 பாடசாலைகளில் 100 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி வேலை திட்டங்களும் ,வடக்கிற்கு என்னால் புத்தகம் என்ற வேலை திட்டத்தின் கீழ் 73ஆயிரம் தமிழ் ஆங்கில மொழி புத்தகங்களும் 73 ஆயிரம் மரக்கன்றுகளும் நடப்பட உள்ளது.

மேலும் வட மாகாணத்தில் தல புனரமைப்பு வேலை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிலையில் பிரிவினைகளுடன் நாம் முன்னோக்கி பயணிக்க முடியாது.

ஆகவே நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு நாம் எங்களது சக்தியை பயன்படுத்துவதோடு நாட்டு மக்களிடையே இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு நமது பங்களிப்பை வழங்குவதோடு சமூக அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காந்தி தேசத்தின் அநீதியால் பலியான சாந்தன் அவர்களுக்கு "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின்" இறுதி வணக்கங்கள்



பல்லாண்டு காலமாக பிரிந்திருந்த தாயக மண்ணில் காலடி பதிக்க ஆவலுடன் காத்திருந்த சாந்தன் அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு ஆறாத்துயரும் மனவேதனையும் அடைந்தோம். பல வருட காத்திருப்பின் மகனை காண ஆவலாக காத்திருந்த தாயாரின் ஆற்ற முடியா துயரத்திலும், உறவுகளின் வேதனையிலும் நாமும் பங்கு கொள்கிறோம்.

சாந்தன் அவர்கள் அநீதியான நீதி பொறிமுறையால் மரண தண்டனை விதிக்கப்பட்டு 33 வருடங்கள் தொடர்ச்சியாக சிறை கொடுமையை அனுபவித்த பின், உச்ச நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட ஒரு ஆண்டுக்கு மேலாக சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டமை கொடுமையின் உச்சம். இது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையே அவமதிக்கும் செயலாகும். இந்திய வல்லாதிக்கத்தினால் ஈழத்தமிழர் மீது தொடர்ந்தும் நடாத்தப்படும் இவ்வன்செயலைக் கண்டிப்பதுடன், இந்த "சிறப்பு முகாம்கள்" மூடப்பட்டு தொடர்ந்தும் அரசியல் கைதிகளாக இருக்கும் ஈழத்தமிழர்கள் சுதந்திரத்தினை அனுபவிக்க வழி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம். குறிப்பாக இதே வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட போதும் தொடர்ந்தும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ராபர்ட் பயஸ், முருகன் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் அவர்களின் உறவுகளுடன் சேர்ந்து தமது மிகுதி வாழ்நாளை கழிக்க உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாயக கனவுடன் மீளா துயில் கொண்ட சாந்தன் அவர்களுக்கு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தனது இறுதி வணக்கங்களை செலுத்துவதுடன் இன்று நடைபெறவுள்ள அன்னாரின் இறுதி பயணத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு எமது தேசத்தின் உணர்வு நிலையை வெளிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்.



எமது தேசத்தின் விடுதலைக்காய் தொடர்ந்தும் போராடுவோம் என உறுதி எடுத்து கொள்கிறோம்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்.

# திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்பாட்டம்



**(கனகராசா சரவணன்)**

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற இல்மனைட் அகழ்வினைத் தடைசெய்யக்கோரி வெள்ளிக்கிழமை (1) பிரதேச பொதுமக்கள் பிரதேச செயலகத்தின் முன்னால் ஆர்பாடத்தில் ஈடுபட்டனர்.

இல்மனைட் அகழ்வுக்கு தடைசெயயப்பட்டிருந்த நிலையில் தடையை மீறி மீண்டும் அகழ்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதை அறிந்த மக்கள் ஆர்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இதனையடுத்து இன்று காலை திருக்கோவில் மணிக்கூட்டு கோபுரத்தின் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், தவராசா கலையரசன் மற்றும் முள்ளாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடிஸ்வரன், உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் ஒன்றினைந்தனர்.

இதன் போது இல்மனைட் அகழ்வினை உடன் நிறுத்து, எங்கள் வளம் எமக்கு வேண்டும், எங்கள் வளங்களைச் சுரண்டாதே, கொள்ளையர்களே வெளியேறு, இல்மனைட் அகழ்வைத் தடை செய் போன்ற சுலோகங்கள் ஏந்திவாறு கோசங்களை எழுப்பி அங்கிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமாக பிரதேச செயலகத்திற்கு முன்னால் சென்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து அங்கு சென்ற பிரதேச செயலாளரிடம் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு மேற்கொள்ளப்பட இருந்த நிலையில் பிரதேச மக்களின் எதிர்ப்பின் காரணமாக பிரதேச அபிவிருத்திக் குழு மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தீர்மானங்களுக்கு அமைய தடை செய்யப்பட்டிருந்தது.

தற்போது அத்தீர்மானங்களை மீறி மீண்டும் இவ் அகழ்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதை நிறுத்தவேண்டும். என கோரி மகஜர் ஒன்றை கையளித்தனர். இதன்போது பிரதேச செயலாளர் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நிலவுகின்ற இந்த பிரச்சனை தொடர்பில் பிரதேச சபையோ, பிரதேச செயலகமோ எவ்வித அனுமதியும் இதுவரை வழங்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் இதற்கு முன்னரும் மக்களால் மகஜர் வழங்கப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இன்று வழங்கப்பட்ட மகஜர் தொடர்பிலும் மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பிரதேச செயலாளரின் உறுதிமொழியையடுத்து ஆர்பாட்ட காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.







இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வவுனியா பழைய பேரூந்து நிலையத்தில் வைத்து சாந்தனின் புகழுடல் தாங்கிய ஊர்தியின் சாரதியை கைது செய்ய முயற்சி

மன்னார் நிருபர்



(03-03-2024)

வவுனியா பழைய பேரூந்து நிலையத்தில் 03-03-2024 காலை சாந்தனின் புகழுடல் தாங்கிய ஊர்தியை மறித்த போக்குவரத்து பொலிஸார் சாரதியையும் கைது செய்ய முயற்சித்த மையினால் அவ்விடத்தில் சற்று பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த சாந்தன் உடல் நலக்குறைவு ஏற்பட்டதை அடுத்து கடந்த ஜனவரி மாதம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி அதிகாலை அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

சாந்தனின் புகழுடல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக நீர்கொழும்பு அரச வைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

பின்னர் பிரேச பரிசோதனை முடிவின் பின்னர் 03-03-2024 காலை வவுனியாவிற்கு சாந்தனின் புகழுடல் எடுத்து வரப்பட்டது

சாந்தனின் புகழுடல் தாங்கிய ஊர்தி வவுனியா பழைய பேரூந்து நிலையத்தினுள் உள்நுழைந்த சமயத்தில் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த மையுடன் ஊர்தி அருகே சென்ற வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ஊர்தியை இவ்விடத்தில் தரித்து நிறுத்த முடியாது.

அவ்வாறு தரித்து நிறுத்தினால் சாரதியை கைது செய்வோம் எனவும் ஊர்தி சாரதியினை வாகனத்தினை விட்டு கீழே இறங்குமாறு தெரிவித்த மையினால் அவ்விடத்தில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது.

அதன் பின்னர் ஏற்பாட்டு குழுவினர் பழைய பேரூந்து நிலையத்திலுள்ள வாகன தரிப்பிடத்தில் ஊர்தியினை தரித்து நிறுத்தி அஞ்சலி நிகழ்வினை மேற்கொண்டனர்.

# மடுவில் தேக்கு மரங்களை வெட்டி சென்ற மர்ம நபர்கள்: போக்குவரத்தும் பாதிப்பு!



(04-03-2024)

மன்னார் மடுவில் வீதியோரம் இருந்த வளர்ந்த தேக்கு மரங்களை மர்ம நபர்கள் வெட்டி குற்றிகளாக ஏற்றிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

04-03-2024 தினம் நள்ளிரவு மடு தேவாலயம் - மடு ரோட் சந்தி வீதிக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள தேக்கு மரங்களை மர்ம நபர்கள் வெட்டி வாகனத்தில் ஏற்றி சென்றுள்ளதாக தெரிய வருகின்றது.

இவ்வாறு அவர்களால் வெட்டப்பட்ட மரத்தின் குற்றிகளை மர்ம நபர்கள் ஏற்றி சென்ற நிலையில் கிளைகள் வீதியிலேயே போடப்பட்டுள்ளது.

04-03-2024 அன்று காலை குறித்த வீதியில் வாகனங்கள் பயணிக்க முடியாமல் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

மடு தேவாலயத்திற்கு சில கிலோ மீற்றர் தூரத்தில் வீதி ஓரம் வளர்ந்திருக்கும் பெறுமதியான தேக்கு மரங்கள் இவ்வாறு பல தடவைகள் மர்ம நபர்களால் வெட்டி எடுத்து செல்லப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மர்ம நபர்கள் தேக்கு மரங்களை வெட்டிய பகுதியில் இருந்து சில மீற்றர் தூரத்தில் இராணுவ முகாம் இருப்பதாகவும், சில கிலோ மீற்றர் தூரத்தில் மடு வீதி சந்தியில் மடு பொலிஸ் நிலையம் இருப்பதாகவும், அதற்கு அருகில் மடு ரோட் சந்தியில் இராணுவ சோதனை சாவடி இருப்பதாகவும் மறுபுறம் சில கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் மடு தேவாலய சந்தியில் பொலிஸ் காவலரணும் அமைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் தான் வீதியோரம் இருக்கும் பெறுமதியான தேக்கு மரங்கள் நள்ளிரவில் வெட்டப்பட்டு குற்றிகளாக இவ்வாறு பல தடவைகள் ஏற்றி செல்லப்பட்டுள்ளது. இராணுவம், பொலிஸ் உள்ள நிலையில் வீதியோரம் இருக்கும் மரத்தை வெட்டிச் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மடு தேவாலயத்தை அண்மித்த பெரியபண்டிவிரிச்சான் காட்டு பகுதிகளிலும் மற்றும் மடு - பரப்புக்கடந்தான் வீதிக்கு அருகில் இருக்கும் காட்டு பகுதிகளிலும் பெறுமதி வாய்ந்த மரங்களான முதிரை, பாலை போன்ற மரங்கள் வெட்டப்பட்டு குற்றியாக்கி கடத்தி செல்லப்படுகிறது.

பெரும்பாலும் இவ்வாறு வெட்டப்படும் குற்றிகள் வவுனியாவிற்கு கொண்டு செல்லப்படுகின்றது.

இதற்கு பொலிஸார் உட்பட யாரும் இதுவரை பெரிய அளவில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகிறது.

எனவே இந்த மரக்கடத்தல் காரர்களிடம் இருந்து வளங்களை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் தியாகி சாந்தனுக்கு மலர் அஞ்சலி



(4-03-2024)

மன்னார் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் தியாகி சாந்தனுக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றது.

குறித்த அஞ்சலி நிகழ்வு மன்னாரில் உள்ள அலுவலகத்தில் திங்கட்கிழமை (04) காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில்ன் இடம்பெற்ற குறித்த அஞ்சலி நிகழ்வில் மத தலைவர்கள், தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்க உறுப்பினர்கள், முன்னால் நகர சபை பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ் தேசிய உணர்வாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது சாந்தனின் திருவுருவப் படத்திற்கு மாலை அனுவிக்க பட்டு மலர் தூவி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.



# மன்னார் அடம்பன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் அருட்தந்தை டிலான் உயிரிழப்பு



(05-03-2024)

மன்னார் - அடம்பன் பொலிஸ் பிரிவில் உள்ள அடம்பன் நாற்சந்தியில் 04-03-2024 திங்கட்கிழமை மாலை 5.45 மணி அளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த சலேசியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மரிசால் டிலான் (வயது-34) உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது 04-03-2024 திங்கட்கிழமை (04) மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருகையில், வடக்கு கிழக்கு தமிழ் மறைமாவட்ட குருக்களுக்கான தவக்கால தியானம் மன்னார் மடு தேவாலயத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு விட்டு மாலை திரும்புகையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

மன்னார் - அடம்பன் பகுதியூடாக அருட்தந்தை டிலான் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதுண்டதில் விபத்து சம்பவித்துள்ளது.

இதன் போது படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் விபத்து தொடர்பான விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள 250 மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2ஆம் கட்ட நடவடிக்கைக்கான மக்களின் அபிப்பிராயங்கள் கையளிப்பு



(எஸ்.றொசேரியன் லெம்பேட்)
(06-03-2024)

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள 250 மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2ஆம் கட்ட நடவடிக்கைக்கான மக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் கோரிக்கைகள் மன்னார் பிரதேசச் செயலகத்தில் புதன்கிழமை(6) மதியம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கடந்த மாதம் முன் வைக்கப்பட்ட 250 மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டத்தின் 2 ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் இறுதி சுற்றறிக்கை இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையிலான குழுவினர் கையளித்துள்ளனர்.

குறித்த காற்றாலை மின் உற்பத்தியினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான மக்களின் கருத்துக்கள் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின் உற்பத்தியினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான மக்களின் கருத்துக்கள் மற்றும் குறித்த திட்டத்திற்கு மக்களின் எதிர்ப்புகள் தொடர்பாகவும், அவர்களின் கடிதம் மற்றும் கையெழுத்துக்களும் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை மக்கள் எதிர்க்க வில்லை எனவும், இத்திட்டத்தை மக்களை பாதிக்காத வகையில் மன்னார் தீவில் இருந்து பிறிதொரு இடத்தில் முன்னெடுக்குமாறு மக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "அண்ணா வாறார் யாரும் அழ வேண்டாம்" என கூறி சாந்தனின் புகழுடல் ஆராத்தி எடுத்து வரவேற்பு



04-03-2024

**சாந்தனுடைய புகழுடல் உடுப்பிட்டியில் உள்ள அவரது சகோதரியின் வீட்டிற்கு ஆராத்தி எடுத்து கொண்டு வரப்பட்டது**

இதன்போது அனைவரது நெஞ்சையும் கனக்க வைக்கும் வகையில், "அண்ணா வாறார் யாரும் அழ வேண்டாம்" என கூறிய சாந்தனுடைய சகோதரி ஆராத்தி எடுத்து வரவேற்றார்.

இதன்போது கனத்த இதயத்துடன் யாரும் அழாது இருந்த நிலையில் ஓம் நமசிவாய சொல்லி ஆராத்தி எடுக்கப்பட்டது.

மறைந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா வின் (சாந்தன்) புகழுடல் ஊர்தி யாழ்ப்பாணம் வடமராட்சியை வந்தடைந்து நெல்லியடி மற்றும் தீருவிலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

வவுனியாவில் காலை 8.00 மணியளவில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட சாந்தனின் புகழுடல் ஊர்தி, ஏ-9 வீதி ஊடாக மாங்குளம் - கிளிநொச்சி ஊடாக நகர்ந்து அஞ்சலிக்கு வைக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில், சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் கடந்த 28ம் திகதி மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார்.

# ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி








ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்தந்தை அன்ரன் அமலதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை வங்கி ஊர்காவற்துறை கிளையின் முகாமையாளர் திருமதி. பிரமிளா ரமணகிறிஸ்ணா அவர்கள் பிரதம விருந்தினராகவும் ஊர்காவற்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. சத்தியசீலன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவனும் அன்னை புத்தகசாலை முகாமையாளருமான திரு. செவ்வேள் விஜிதரன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தார்கள்.

# வடக்கில் சுகாதார துறையினர் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் சுகாதார அமைச்சருக்கு, வடக்கு மாகாண ஆளுநர் எடுத்துரைப்பு



சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரனவை, வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள், கொழும்பு சுவசெரிபாயவில் அமைந்துள்ள சுகாதார அமைச்சில் 05.03.2024 இன்று சந்தித்து கலந்துரையாடினார்.

வடக்கு மாகாணத்தில் சுகாதார துறைக்கான ஆளணி பற்றாக்குறை காணப்படுவதால் சுகாதார துறையினர் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுனரால், சுகாதார அமைச்சருக்கு எடுத்துக்கூறப்பட்டது. வடக்கில் இதுவரை நிரப்பப்படாத ஆளணி மற்றும் ஆளணி வெற்றிடங்களுக்கான மாற்றீடுகள் தொடர்பில் எதிர்வரும் சில மாதங்களுக்குள் தீர்வு பெற்றுத்தரப்படும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநரிடம், சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன இந்த சந்திப்பின்போது உறுதியளித்தார்.

மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பி.ஜி. மஹிபாலவும் இந்த சந்திப்பில் கலந்துக்கொண்டிருந்தார்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சமாதானம் நல்லிணக்கம் அடக்குமுறை சட்டங்களால் பெற முடியாது: ஆணையாளரின் கருத்து வரவேற்கத்தக்கது – முரளி வல்லிபுரநாதன் தெரிவிப்பு

பு. கஜிந்தன்

55வது மனித உரிமை கூட்டத்தொடரின் போது ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க் நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் அடக்குமுறை சட்டங்களினால் பெற முடியாது என தெரிவித்த கருத்து ஆனது இலங்கையில் தொடர்ந்தும் அடக்குமுறை சட்டங்கள் நடைமுறையில் உள்ளமையை எடுத்துக்காட்டுவதாக சமுதாய மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வெளியிட்ட கருத்து தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பிய அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது இலங்கையில் புதிய பெயரில் தொடரும் பயங்கரவாத தடை சட்டம் மற்றும் இணைய சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சட்டங்கள், அதிகரிக்கும் ஆயுதப்படையினரின் அதிகாரங்கள் மற்றும் வறுமை நிலை அதிகரிப்பு தொடர்பாக தனது கரிசனையை வெளிப்படுத்தி இருக்கிறார்.

“15 வருடங்கள் ஆகியும் 10000 க்கு மேற்பட்ட காணாமல் போனவர்கள் தொடர்பாக எந்த முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை” என்றும் “காணமால் போனவர்கள் மற்றும் உள்நாட்டு போரில் இறந்தவர்களை நினைவு கூர்பவர்கள் மீது நிகழ்த்தப்படும் அடக்குமுறை” பற்றியும் கவலை வெளியிட்டு இருக்கிறார்.

இறுதியாக 2010ம் ஆண்டு உச்ச நீதிமன்றினால் தனிநபர் மீது சித்திரவதை மேற்கொண்டதனால் குற்றவாளியாக இனம் காணப்பட்ட நபர் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டதை கண்டித்துள்ளதுடன் ஒட்டுமொத்தமாக இலங்கையில் வீழ்ச்சி அடைந்து வரும் மனித உரிமைகள் நிலைமையையும் தொடரும் தமிழர்கள் மீதான அநீதியையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.

“கடந்த வருடமும் ஆயுதப்படையினரால் பிரதானமாக வடக்கு கிழக்கு பகுதியில் பாலியல் வன்முறைகள் உட்பட பல வன்முறைகள் இடம்பெற்றன” என ஐ.நா மனித உரிமைகளுக்கான ஆணையாளர் கூறுகிறார். அத்துடன், “நிலையான சமாதானமும் நல்லிணக்கமும் அடக்குமுறை சட்டங்கள் மூலம் பெறப்பட முடியாது” என அவர் எச்சரித்து உள்ளார்.

ஆனால் தமிழ் தலைவர்கள் என்று கூறிக்கொள்வோர் நாட்டிலும் புலத்திலும் இவைகள் தொடர்பில் வாய்மூடி மௌனிகளாக உள்ளனர்.

முன்பெல்லாம் ஒவ்வொரு வருடமும் ஈழத்தமிழரின் பிரச்சினைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் எடுக்கப்படும் போதெல்லாம் நாட்டிலும் புலத்திலும் வாழும் தமிழ் தலைவர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஜெனீவா சென்று கோவில் திருவிழா போலப் பல விதமான போராட்டங்களை முன்னெடுப்பார்கள்.

மூன்று தசாப்த உள்நாட்டு போரின் பின்னர் 2009இல் ஆயுத போராட்டம் மௌனமாக்கப்பட்டதன் பின்னர் முதன்முறையாக தமிழரின் ஒட்டுமொத்த உரிமைப் போராட்டமும் மௌனிக்கப்பட்டது போன்ற ஒரு நிலை தற்போது உருவாகியுள்ளது.

ஒருபுறம் கடந்த காலங்களில் வெளிவேடம் போட்டுகொண்டு புலம்பெயர் தமிழரை உசுப்பேற்றிப் பெறப்பட்ட நிதியில் ஜெனீவாவில் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த உலகத் தமிழர் பேரவை மற்றும் கனேடிய தமிழ் காங்கிரஸ் உட்பட பல அமைப்புகளின் உண்மை முகம் வெளிப்பட்டு அவர்கள் இப்போது “தமிழர் அதிகம் வாழும் வடக்கு கிழக்கு பகுதியில் இருந்து ஆயுதப்படையினரை அகற்ற வேண்டாம்” என்று கூறும் பௌத்த மத குருக்களுடன் இணைந்து மக்களைத் தெளிவுபடுத்தும் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றனர். மகிந்தவுடன் இணைந்து மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயல்பவர்களுக்கு மகிந்தவுக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளைத் தொடர்வது கடினமாக உள்ளது போலும்.

மறுபுறம் தமிழரசு கட்சி மீண்டும் தலைவர் தேர்தலை நடத்தத் தயார் என நீதிமன்றத்தில் தெரிவித்திருப்பதன் ஊடாகக் கடந்த காலங்களில் யாப்பை மீறி செயல்பட்டு இருப்பதை ஒப்புக்கொண்டிருப்பதுடன் உட்கட்சி குழப்பங்களால் அந்த கட்சி ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

ஆனால் ஏனைய தமிழ் கட்சிகள் மௌனமாக இருப்பதும் இந்திய தூதுவரினால் நடத்தப்படும் உபசாரங்களில் கலந்துகொண்டு “13ம் திருத்தத்தை தமிழ் மக்கள் சார்பில் இந்தியாவே கொண்டுவந்தது” என்று கூறும்போது கைதட்டி வருவதும் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இந்த கட்சிகள் முழுமையாக கொண்டுவரப்பட்டு இருப்பதற்கான ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாமோ என எண்ணத் தூண்டுகிறது. அதாவது “ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை இனப்படுகொலை போன்ற விடயங்களை கதைத்து ரணில் -மோடி கூட்டமைப்பின் திட்டங்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த இவர்கள் விரும்பவில்லை” என்று எடுத்துக் கொள்ளலாம்.

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் மௌனமாகியுள்ள இந்த நேரத்தில் தமிழ் புத்திஜீவிகளும் சிவில் சமூகமும் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகங்களும் என்ன செய்யப்போகிறார்கள் என்பதிலேயே ஈழத்தில் தமிழர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

# விபத்தில் உயிரிழந்த சாவகச்சேரி மாணவனின் இறுதி அஞ்சலி



கடந்த வெள்ளிக்கிழமை மீசாலை ஐயா கடைச் சந்திப் பகுதியில் விபத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவனான செல்வன் சி. பரணிதரனுக்கு பாடசாலை மாணவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.





கடந்த வெள்ளிக்கிழமை காலை மேற்படி மாணவன் பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டுப் பயிற்சியை முடித்து விட்டு வீடு நோக்கி துவிச்சக்கரவண்டியில் செல்லும் போது இ.போ.ச பேருந்து மோதி உயிரிழந்திருந்தார்.

மாணவனின் மரணச்சடங்கு 05-03-2024 செவ்வாய்க்கிழமை அவரது வீட்டில் இடம்பெற்று தனங்கிளப்பு வீதியில் உள்ள கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்பட்ட சந்தப்பத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் டிறிபேர்க் கல்லூரி மாணவர்கள் அஞ்சலி செலுத்தி வழியனுப்பி வைத்தனர்.

சக மாணவர்கள் அன்னாரது உடலை தோளில் சுமந்துகொண்டு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுழிபுர புத்தர் சிலையை அகற்றா விட்டால் பாரிய போராட்டம் வெடிக்கும் – சுகாஷ் எச்சரிக்கை!



சுழிபுரத்திலே புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டதாக எங்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நாங்கள் இங்கே வந்திருக்கின்றோம். அந்த தகவல் உண்மையானது. சவுக்கடி பிள்ளையார் கோவிலுக்கு பின்பாகவும் இராணுவ முகாமிற்கு முன்பாகவும் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்ட ஒரு ஆக்கிரமிப்பு என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிக்கு சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோயிலை ஆக்கிரமிக்கின்ற வகையிலே இந்த புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இதை நாங்கள் அனுமதிக்க முடியாது. ஏனென்றால் தமிழர் தாயகம் எங்கும் தற்சமயம், அதுவும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் ஆக்கிரமிப்புகள் மிகத் தீவிரம் பெற்றுள்ளது. அதனுடைய அடுத்தகட்ட பரிமாணம் தான் இந்த புத்தர் சிலை.

இந்த புத்தர் சிலையை உடனடியாக அகற்றும்படி நாங்கள் இராணுவத்தினரிடம் கூறுகின்றோம். நீங்கள் அதனை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க விட்டால் நாங்கள் வெகு விரைவில் இந்தப் பிரதேசம் மக்களோடும், இராணுவ முகாமை சுற்றியுள்ள அமைப்புகளுடனும் கதைத்து விட்டு, விசேடமாக மீனவர் அமைப்புகளுடன் கதைத்து விட்டு இதற்கு எதிராக பாரிய போராட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம். அப்போது அந்தப் போராட்டங்கள் என நாங்கள் மக்களுக்கு அறிவிப்போம்.

மக்கள் அனைவரும் இந்த இடத்திற்கு வர வேண்டும். இல்லையேல் தமிழர் தாயகம் பறிபோகும் இதை எவராலும் தடுக்க முடியாது. நாங்கள் கதைப்பதை கூட இராணுவம் அச்சுறுத்தி படம் எடுக்கின்றார்கள். தங்களைக் கதைக்க வேண்டாம், படம் எடுக்க வேண்டாம் என அச்சுறுத்தல் செய்கின்றார்கள். அச்சுறுத்தலை தாண்டித்தான் நாங்கள் இந்த இடத்தில் நிற்கின்றோம். ஏனென்றால் இது நமது மக்களின் எதிர்கால இருப்புடன் சம்பந்தப்பட்ட விடயம். மக்களே வெளிப்படையுங்கள் அல்லது இந்த நாட்டில் தமிழர்கள் வாழ முடியாத நிலை ஏற்படப் போகின்றது - என்றார்.

# விமானியாக விரும்பிய யாழ்ப்பாண மாணவி – ஆலோசனைகளை வழங்கிய இலங்கைவிமானப்படை தளபதி!



இலங்கை விமானப் படையின் 73வது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் கல்விக் கண்காட்சியும், விமானப்படை வீரர்களின் சாகச நிகழ்வுகளும் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

அந்தவகையில் 07-03-2024 தினம் குறித்த கண்காட்சியை பார்வையிட்ட மாணவி ஒருவர் தனக்கு விமானி ஆக விருப்பம் உள்ளதாகவும், அதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் இலங்கை விமானப்படையின் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அவர்களிடம் கேட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவிக்கு தேவையான ஆலோசனைகளையும் நினைவுச் சின்னம் ஒன்றினையும் இலங்கை விமானப்படையின் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அவர்கள் வழங்கி வைத்தார்.

# இந்திய இழுவை மடி படகையும் உள்ளூர் இழுவைமடி படகுகளையும் தடுக்க கோரி யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் போராட்டம்!



இந்தியன் இழுவை மடி படகையும் உள்ளூர் இழுவைமடி படகுகளையும் தடுக்க கோரி யாழில் மீனவர்கள் போராட்டம் செவ்வாய்கிழமை முன்னெடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பித்த போராட்டம் ஆளுநர் அலுவலகம் முன்பாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு ஆளுநர் அலுவலகத்தில் மகஜர் ஒன்றை கையளித்த பின்னர் இந்திய துணை தூதரகம் வரை பேரணியாக சென்று மகஜர் ஒன்றை கையளிக்கச் சென்றவேளை அங்கு போலீசாரால் தடுக்கப்பட்டு ஐவர் மட்டும் தூதாக அதிகாரிகளை சந்திக்க அனுமதிக்கப்பட்ட நிலையில் இந்திய துணை தூதரகத்தில் மகஜரும் கையளிக்கப்பட்டது.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் ஏற்பாடு செய்த இப் போராட்டத்தில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க அமைப்பாளர் கேர்மன் குமார, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க மகா சபை தலைவர் இ. முரளிதரன், வடமாகாண மீனவர் அமைப்பு பிரதிநிதிகள், வட மாகாண கடற்றொழிலாளர் இணைய பிரதிநிதிகள், பூந்தளிர் பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள், கிராமிய உழைப்பாளர் சங்க பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கைப் பெண்கள் இருவருக்கு கிடைத்த சர்வதேச கௌரவம்

தெற்காசியாவில் தடைகளைத் தாண்டி சாதித்து, ஏனைய பெண்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும், பெண் ஆளுமைகள் குறித்து உலக வங்கியின் பட்டியலில் இலங்கையர் இருவர் இடம்பிடித்துள்ளனர்.

11 பேர் அடங்கிய பட்டியலில் இடம்பிடித்துள்ள இருவரும் தமிழ் பேசும் பெண்கள் என்பது விசேட அம்சமாகும்.

தொழில்முனைவோர், ஊடக நிர்வாகிகள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் உள்ளிட்ட மிக முக்கிய பதவிகளை வகிப்பதில் சிறந்த ஆளுமைகளை கிளிர் ஹேர் பாத் (#ClearHerPath) என்ற ஹேஷ் டெக்குடன் உலக வங்கி வெளியிட்டுள்ளது.

விழுது என்ற சிவில் சமூக அமைப்பிற்கு தலைமைத்தாங்கும் மைத்ரேயி ராஜசிங்கம் மற்றும் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி வில்சன் ஆகியோரே இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

தெற்காசியாவில், நான்கு பெண்களில் ஒருவர் மாத்திரமே பணிபுரிவதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல மில்லியன் பெண்கள் வீட்டிற்கு வெளியே தொழில் அல்லது வேலையில் ஈடுபட்டு தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் வருமானம் ஈட்டி, தங்கள் சமூகங்கள் மற்றும் பொருளாதாரங்களுக்குப் பங்களிக்கும் வாய்ப்பைப் பெறவில்லை என்பதே இதன் அர்த்தமென அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



பாரபட்சமான சட்டங்கள் மற்றும் கொள்கைகள், கல்வி மற்றும் பயிற்சிக்கான அணுகல் இல்லாமை மற்றும் ஊதியம் இல்லாத வேலை மற்றும் குடும்ப பராமரிப்புப் பொறுப்புகளின் நேரத்தைச் செலவழிக்கும் சுமை உள்ளிட்ட பல தடைகளை தெற்காசியப் பெண்கள் தொழிலில் ஈடுபடுவதில் எதிர்நோக்குகின்றனர்.

எனினும், அந்தத் தடைகளைத் தகர்த்தெறிந்து, வேலை செய்ய விரும்பும் பெண்களுக்கான பாதையைத் உருவாக்குவதற்கு, அரசாங்கங்கள், கல்வி நிறுவனங்கள், பணியிடங்கள், சமூகங்கள் மற்றும் குடும்பங்கள் பங்களிக்க முடியுமென உலக வங்கி தெரிவிக்கின்றது.

# வடக்கு மாகாணத்தில் தற்காலிக பணி இணைப்பிலுள்ள 388 பேருக்கான நிரந்தர நியமனங்களை பெற்றுத்தருமாறு பிரதமரிடம், வடக்கு ஆளுநர் கோரிக்கை

வடக்கு மாகாணத்தில் தற்காலிக, பதிலீட்டு, சாதாரண மற்றும் தினக்கூலி அடிப்படையில் சேவையாற்றும் 388 பேருக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள், பிரதர் தினேஷ் குணவர்தனவிடம் நேரடியாக சென்று கோரிக்கை விடுத்துள்ளார். பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்தில் இன்று (07.03.2024) இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சில் பணியாற்றும் 67 பேருக்கும், உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் கடமையாற்றும் 321 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என கௌரவ ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அவசர மற்றும் அத்தியாவசிய தேவைக்கருதி சேவையில் இணைக்கப்பட்டவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், இவர்களின் அனுபவம் மற்றும் துறைசார்ந்த திறன், அறிவை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதனூடாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அவசர நிலைகளை ஈடுகொடுக்க கூடியதாக அமையும் எனவும் கௌரவ ஆளுநர், பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள், நிரந்தர நியமனங்களை பெற்றுக்கொள்ள காத்திருப்பதாக தெரிவித்த கௌரவ ஆளுநர், அவர்களின் பெயர்பட்டியல் அடங்கிய கோரிக்கை கடிதத்தையும் பிரதமரிடம் சமர்பித்துள்ளார். விசேட திட்டத்தின் கீழ் இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு கௌரவ ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



இதேவேளை, ஒரு இலட்சம் வேலைவாய்ப்பின் அடிப்படையில் வழங்கப்பட்ட சிற்றூழியர் நியமனங்கள் வடக்கு மாகாணத்தில் முழுமையாக நிரப்பப்படவில்லை எனவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். இதனால் வடக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த வெற்றிடங்களை நிரப்பி, சிறந்த பொதுச் சேவையை வழங்குவதற்கு ஆவணம் செய்யுமாறும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் கோரிக்கை கடிதத்தை பெற்றுக்கொண்ட பிரதர் தினேஷ் குணவர்தன, இந்த விடயம் தொடர்பில் விரைவில் சாதகமான பதிலை வழங்குவதாக உறுதியளித்தார்.


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHT BROKER = RIGHT MORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



# சாந்தனின் ஆன்மா எப்பொழுது அமைதியுறும்?

## யாழ்ப்பாணத்திலிருந்து விதைக்கப்பெற்ற சாந்தன் பற்றி நிலாந்தன் எழுதுகின்றார்

**சா**ந்தனின் உடல் இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும். திராவிட கட்சிகளுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான பகையுணர்வை மேலும் அதிகப்படுத்தியிருக்கிறது. சாந்தன் உயிரோடு நாடு திரும்பி அதன் பின் உயிர் நீத்திருந்திருந்தால் அவருடைய சாவு இவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்காது. ஆனால் அவர் உயிரிழந்த பின் தன் தாயிடம் ஒப்படைக்கப்பட்டமை என்பது பரவலாக உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. 33 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டுத் தன் தாயைக் காண வந்த கடைசி நாட்களில் அவர் உயிர் நீத்தமை அவர் மீதான அனுதாபத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக திரண்ட மக்கள் கூட்டம் அதை உணர்த்துகின்றது.

தாயகத்தில் அதிகம் மக்கள் திரண்ட ஒரு சாவீடாகவும் உணர்ச்சி கொந்தளிப்பான ஒரு அது அமைந்தது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியைப் போலவே வவுனியாவில் இருந்து தீருவில் வரையிலும் மக்கள் தாமாகத் திரண்டார்கள். போராளிகள் நலன்புரி அமைப்பும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அமைப்பும் சாந்தனின் இறுதி ஊர்வலத்துக்கான ஏற்பாடுகளை செய்திருந்தன. இறுதி ஊர்வலம் வந்த வழியெங்கும் பொதுமக்கள் அமைப்புகள் தன்னார்வமாக அஞ்சலி செலுத்தின. குறிப்பாக வடமராட்சியில் சனசமூக நிலையங்கள் அதிகம் பங்களிப்பை நல்கின. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணிக்கு பின்னர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தொகை மக்கள் பங்குபற்றிய ஓர் ஊர்வலமாக, மிகக் குறுகிய காலத்துக்குள் அதாவது ஒரு நாளில் அதிகரித்த தொகையினர் பங்குபெற்றிய ஒரு இறுதி ஊர்வலமாக அதைக் கூறலாம்.

அதேசமயம் சாந்தனுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது அதோடு முடியவில்லை. சாந்தனோடு சிறையில் இருந்தவர்கள் இப்பொழுதும் சிறப்பு முகாமில் இருக்கிறார்கள். அவர்களையும் விடுவித்தால் தான் சாந்தனின் ஆன்மா மகிழ்ச்சி அடையும்.

சாந்தனோடு சிறப்பு முகாமில் இருந்த மூவரும் இப்பொழுதும் அங்கேதான் இருக்கிறார்கள். அவர்களை முதலில் சிறப்பு முகாமில் இருந்து வெளியே கொண்டு வர வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள சட்டச் செயற்பாட்டாளர்கள் கேட்கின்றார்கள். அவர்கள் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்கள். அவர்களிடம் உரிய பயண ஆவணங்கள் இல்லை; அவர்களை வெளியே விட்டால் அது அவர்களுடைய பாதுகாப்புக்கு ஆபத்தாக அமையலாம் அல்லது அவர்கள் தமிழகத்தின் பாதுகாப்புக்கு குந்தகமாக அமையலாம் போன்ற காரணங்களைக் கூறி தமிழக அரசு அவர்களைத் தொடர்ந்தும் சிறப்பு முகாம்களில் வைத்திருக்கின்றது. மாறாக அவர்களை வெளிப்பதிவு அகதிகளாக சிறப்பு முகாம்களுக்கு வெளியே எங்காவது தங்க அனுமதித்தால், அதுவே அரைவாசி விடுதலை தான். அதன்பின் அவர்கள் தங்களுக்குரிய ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு நாடு திரும்பலாம். சாந்தனின் விவகாரத்தில் இலங்கை அரசு எப்படி நடந்து கொண்டது என்பது ஏனைய மூவருக்கும் அப்படியே பின்பற்றப்படும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. சாந்தனைத் தவிர மற்றைய மூவரிடமும் உத்தியோகபூர்வ பயண ஆவணங்கள் கிடையாது. சாந்தனிடம் பாஸ்போர்ட் இருந்தது. மற்றைய மூவரிடமும் பாஸ்போர்ட் இல்லை. எனவே அவர்களுக்கு தமிழகத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் தற்காலிக பயண ஆவணங்களை வழங்க வேண்டியிருக்கும்.

எனவே சாந்தனோடு சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த மூவருக்கும் முதலில் சிறப்பு முகாமில் இருந்து விடுதலை கிடைக்க வேண்டும். நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்களை மீண்டும் சிறப்பு முகாம்களில் அடைப்பது என்பது அந்த நீதிப் பொறிமுறைக்கு முரணானது.

சாந்தனை சிறப்பு முகாமில் இருந்து விடுவித்து தன்னுடைய பாதுகாப்பில் வைத்துக் கொள்வதற்கு மறைந்த சட்டத்தரணி தடா சந்திரசேகர் முயற்சித்தார். அப்பொழுது இரத்த உருத்துச் சொந்தக்காரர்கள் அவ்வாறு பொறுப்பெடுத்தால் மட்டுமே சிறப்பு முகாம்களில் இருப்பவர்களை விடுவிக்கலாம் என்று கூறி தமிழக அரசு அதற்கு மறுத்துவிட்டது. இப்பொழுது ஏனைய மூவரின் விடயத்தில் அவ்வாறு சிறப்பு முகாம்களை விட்டு அவர்களை வெளியே கொண்டு வந்து குறைந்தபட்சம் வெளிப் பதிவு அகதிகளாக அவர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு தமிழக அரசு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவாளர்களும் முன் வைக்க வேண்டும். தாயகத்தில் உள்ள தமிழ் தேசிய அரசியல் சமூகமும் முன் வைக்க வேண்டும். சாந்தனின் இறப்பை முன்வைத்து அவ்வாறு கேட்கும்போது அந்தக் கோரிக்கைக்கு அரசியல் அடர்த்தி அதிகமாக இருக்கும்.

தாயகத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக காணப்படுகின்றவர்களும் அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் அது தொடர்பாக தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று அங்குள்ள சட்டச் செயற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.



சாந்தன் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பின் 15 மாதங்களாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரும்பாலான அரசியல்வாதிகள் மந்தத்தனமாக நடந்து கொண்டார்கள். சாந்தனின் மரணம் ஒரு வகையில் அந்த மந்தத்தனத்தின் விளைவுதான். மிஞ்சிய மூன்று பேரின் விடயத்திலாவது அவர்கள் வினைத்திறனோடு செயல்படுவார்களா?

பாரதூரமான குற்றச்சாட்டுகளின் பேரில் தண்டிக்கப்பட்டு அதன் பின் நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட இலங்கை தமிழர்கள் இதற்கு முன்னரும் நாடு திரும்பியிருக்கிறார்கள். 2022ஆம் ஆண்டு அவ்வாறு ஒருவர் விடுவிக்கப்பட்ட பின் நாடு திரும்பினார். அவர் நாட்டில் ஒரு செக்யூரிட்டி நிறுவனத்தில் வேலை செய்வதாக தகவல். எனவே சிறப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களும் நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டவர்களும் நாடு திரும்பும் நடைமுறை ஏற்கனவே உண்டு.

மேலும் தற்பொழுது சிறப்பு முகாமில் உள்ள ரோபேர்ட் பயஸ் என்பவரின் மனைவி நாட்டில் வசிக்கின்றார். அவர் தன் கணவரை சென்று சந்திக்க விரும்புகின்றார். ஆனால் எட்டு ஆண்டுகளாக அவருக்கு விசா வழங்கப்படவில்லை என்று தமிழக சட்டச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அவர் ஏற்கனவே இந்தியாவில் தங்கியிருந்து தன் கணவரை சிறையில் சென்று பார்த்து வந்தார். அவருடைய விசா காலாவதியாகிய பின்னரும் அவர் அங்கே தங்கி இருந்த காரணத்தால், அதாவது "ஓவர் ஸ்டே" என்பதனால், அவருக்கு மீண்டும் விசா வழங்கப்படவில்லை என்று தமிழக சட்டச் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றார்கள். அந்தப் பெண் தன் கணவனை 8 ஆண்டுகளாக சந்திக்க முடியாதவராக இருக்கிறார்.

எனவே, இந்தியச் சிறைகளிலும் தமிழகச் சிறப்பு முகாம்களிலும் வைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்கள் தொடர்பாக ஈழத்து அரசியல்வாதிகள் கூட்டாகச் செயற்பட வேண்டியுள்ளது. சிறப்பு முகாம்களை மூடி அங்கிருக்கும் அரசியல் கைதிகளையும் சிறு குற்றம் புரிந்தவர்களையும் ஒன்றில் அகதி முகாம்களுக்கு மாற்ற வேண்டும், அல்லது வெளிப்பதிவு அகதிகளாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக முன்வைக்க வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழகத்திற்கும் இந்தியாவுக்கும் சென்று வருகிறார்கள். அங்கு தமிழகத் தலைவர்களையும் மத்திய அரசாங்கத்தில் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகிறார்கள். இவர்களில் எத்தனை பேர் சிறப்பு முகாம்களுக்கும் அகதி முகாம்களுக்கும் சென்றிருக்கிறார்கள்? இவர்களில் எத்தனை பேர் சிறைகளில் வாடும் ஈழத்து அகதிகளை கண்டு கதைத்திருக்கிறார்கள்? இங்கிருந்து போகும் பிரமுகர்கள் அங்கே உள்ள பிரமுகர்களைக் கண்டு படம் எடுத்து அதை ஊடகங்களில் பிரசிப்பதற்குமப்பால் அங்கு யாராலும் பொறுப்பேற்கப்படாமல் சிறப்பு முகாம்களிலும் சிறைகளிலும் இருக்கும் ஈழத் தமிழர்களைக் காண்பதே இல்லை.

சாந்தனின் மரணத்தை முன்வைத்து ஈழத்து அரசியல்வாதிகள் இனிமேலாவது தமிழகத்தில் உள்ள சிறப்பு முகாம்களின் மீதும் கைதிகளின் மீதும் கவனத்தைக் குவிக்க வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்காக ஈழத் தமிழர்கள்தான் போராட வேண்டும். ஈழத் தமிழர்களின் நலன்களை ஈழத் தமிழர்கள் தான் பாதுகாக்க வேண்டும். உலகெங்கிலும் உள்ள ஈழத் தமிழர்களுக்கு துன்பம் ஏதும் ஏற்பட்டால் ஈழத் தமிழர்கள்தான் குரல் கொடுக்க வேண்டும். இது தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர்களுக்கும் பொருந்தும். தமிழகமும் சேர்ந்து குரல் கொடுத்தால் அது பன்மடங்கு பலம்.

சாந்தனின் மரணத்தைத் தொடர்ந்து தமிழக முதல்வர் இந்த விடயத்தில் அதிகம் அக்கறை காட்டுவதாகத் தொலைக்காட்சிச் செய்திகள் கூறுகின்றன. சாந்தனின் மரணம் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளுக்கும் ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். தமிழகத்தில் உள்ள சிறப்பு முகாம்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையில் அதிகரித்து வரும் முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும். சாந்தனுக்காக போராடியது தமிழகத்தில் உள்ள வழக்கறிஞர்கள்தான். சாந்தனின் உடலை நாட்டுக்குள் கொண்டுவர ஏற்பாடுகள் செய்ததும் தமிழகத்தைச் சேர்ந்த ஈழ உணர்வாளர்கள்தான்.

எனவே சாந்தனின் நினைவுகளை கௌரவிப்பது அல்லது சாந்தனுக்கு மெய்யாக அஞ்சலி செலுத்துவது என்பது, சிறப்பு முகாம்களை மூடுவதுதான். சிறப்பு முகாம்களில் இப்பொழுதும் அடைபட்டிருக்கும் ஈழத் தமிழர்களை நாட்டுக்குள் கொண்டு வருவதுதான். அல்லது குறைந்தபட்சம் அவர்களை வெளிப்பதிவு அகதிகளாக அங்கே தங்க வைப்பது தான்.

---

### மகளீர் தின வாழ்த்துக்கள்

உன்னை விட உயர்ந்தோர்
யாரும் உண்டோடி பெண்ணே?
இவ்வுலகில் நீ இன்றி
ஓர் அணுவும் அசையுமோ
கண்ணே?
நீ யார் என்பது உனக்கே
தெரியுமோடி பெண்ணே?
மந்தையில் ஆடல்ல
மேய்ந்து கிடக்க,
சீறிடும் சிறுத்தையும் நீயே
பலர் பார்த்து மிரள,
சிந்தையில் உதிப்பதை
தெளிவுபட உன் செயலிலே
காட்டுபவள், சிதறிய
எண்ணங்களை ஒன்றாய்
மாலையாய் கோர்ப்பவள்,
அன்புக்கு மட்டுமே பெண்
என்பதை மாற்றி,
உலகை ஆட்சி செய்பவளும்
பெண்ணே என ஏட்டில்
பதித்தவளும் நீயே தாயே,
பெண் என்ற பெருமைக்குள்
நீயும் நானும் அடங்க,
வேறு வரம் ஏதும்
வேண்டுமா இனி எமக்கு.

வீணாவின் கவிக்கணை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரவிற்கும் 06 நாடுகளின் தூதுவர்களுக்கும் இடையிலான சந்திப்பு



(கனகராசா சரவணன்))

06 வெளிநாடுகளின் தூதுவர்களுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு 06-03-2024 புதன்கிழமை பிற்பகலில் ம.வி.மு. தலைமையகத்தில் இடம்பெற்றது.

பாலஸ்தீனத்தின் தூதுவர் கலாநிதி திரு. Zuhair M.H. Dar Zaid, துருக்கி குடியரசின் தூதுவர் திருமதி. R. Demet Sekercioglu, பங்களாதேஷ் குடியரசின் உயர்ஸ்தானிகர் திரு. Tareq M.D. Ariful Islam, இந்தோனேசிய குடியரசின் தூதுவர் திருமதி. Dewi Gustina Tobing, மேற்படி தூதரகத்தின் பிரதம கொன்சல் திரு. Heru Prayitno, மலேசிய உயர்ஸ்தானிகர் திரு. Badli Hisham Bin Adam மற்றும் மாலைதீவு குடியரசின் பதில் தூதுவர் திருமதி. Fathimath Ghina ஆகிய இராஜதந்திரிகள் அந் நாடுகளைப் பிரதிநிதித்துவம்செய்து இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.



தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ, தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் டாக்டர் நிஷ்வி சாலி மற்றும் தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் முதித்த நாணாயக்கார ஆகியேர் கலந்து கொண்டனர்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளால் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி இராஜதந்திரிகள் விழிப்புணர்வூட்டப்பட்டதோடு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் பற்றியும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் நாடுகளுடன் பரஸ்பர நன்மதிப்பு மற்றும் ஒத்துழைப்பினை அடிப்படையாகக்கொண்டு செயலாற்றுவதற்கான தேசிய மக்கள் சக்தியின் தயார்நிலை பற்றியும் இந்த சந்திப்பின்போது தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் இராஜதந்திரிகளுக்கு எடுத்துரைத்தார்கள்.

# இலங்கையின் தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் புதிய கல்வி எல்லைகளை தொடும் சிறார்கள்

வடமேற்கு மாகாணத்தில் உள்ள தமிழ்முஸ்லிம் கிறிஸ்தவ பாடசாலைகள் பௌதிக மற்றும் மனித வளம் குறைவானதாகவும் அதன்காரணமாக கல்வி மேம்பாடு குறைவாக காணப்படுகின்றன, இவ்வகையில் 75க்கு அதிகமான மாணவர்களைக்கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு டிஜிட்டல் ஸ்மார்ட் போர்ட் ஊடாக கற்பிக்கும் முறைமையை வழங்கி மனிதவள இழப்பை ஈடு செய்ய IMHO நிறுவனமும் Ratnam Foundation நிறுவனமும் இணைந்து வலயகல்விப்பகுதியினரின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்த செயற்றிட்டம் வெற்றிகரமாகவும் முன்னேற்றகரமாகவும் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

இம்மாதம் 1ம் திகதி புத்தளம் நகரில் இருந்து ஏறத்தாள 50 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கல்பிட்டியில் உள்ள அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் மகாவித்தியாலயத்திற்கு IMHO வதிவிட பிரதிநிதி திரு. முத்து இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குழு விஜயம் செய்தது. இப்பாடசாலையில் 320 மாணவர்கள் கல்விகற்கின்றனர். இப்பாடசாலை மிகவும் பின்னடைவான கல்விபற்றிய அடிப்படைகள் குறைந்த சமூகத்தை பிரதிபலிக்கும் சூழலில் இருக்கின்றது.மாணவர் வரவு மிக குறைவு. இத்தகைய சவால்களைக்கொண்ட இப்பாடசாலை செயற் திட்டத்தில் உட்படுத்தப்பட்டு இப்பாடசாலைக்கு IMHO - USA மற்றும் Ratnam Foundation - UK ஆகியநிறுவனங்களால் வழங்கப்பட்ட Smart board கற்றல் தொகுதி உத்தியோகபூர்வமாக அன்று திறந்து வைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது ஆசிரியர்களுக்கு முன்னரே வழங்கப்பட்ட பயிற்சியின்காரணமாக மாணவர்களுக்கு smart board ஊடாக கற்பித்து மாணவர்களும் smart board ஐ கையாளப்பழக்கப் பட்டிருந்தனர். இதனை ஆசிரியர்கள் கற்பித்தபோது மாணவர்களின் ஈடுபாட்டையும் உற்சாகத்தையும் பார்த்து விளங்கக்கூடியதாக இருந்தது.





Smart board மூலமாக மாணவர்கள் கற்றபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஒவ்வொரு மாணவனும் செயற்படுவதற்கு முண்டியடித்தனர். உற்சாகமாகவும் ஒரு ஆரோக்கியமான வகுப்பாகவும் இயங்கியது.

# கல்வி அமைச்சரின் "கலாநிதி" பட்டத்தை "தூக்கிய" மாகாண கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ்



இலங்கை கல்வி அமைச்சரின் கலாநிதிப் பட்டத்தை நீக்கி வடமாகாண கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரேஸ் கடிதம் ஒன்றை எழுதிய சம்பவம் கல்வித் திணைக்களத்தில் பேசு பொருளாக மாறியுள்ளது.

இலங்கை கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் கலாநிதி பட்டத்தை நீக்கி திரு. சுசில் பிரேமஜயந்த என வட மாகாண கல்வி பணிப்பாளர் குயின்ரேஸ் அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் காணப்படுகிறது.

இலங்கை கல்வி அமைச்சரின் சுசில் பிரேமஜயந்த ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி மட்டுமல்லாது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர்.

இவ்வாறான நிலையில் ஒரு அமைச்சரை திரு என எழுதியது மட்டுமல்லாது குறித்த கடிதத்தில் வழுக்கள் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்த கல்வி அமைச்சர் ஏற்றிய தேசியக் கொடியும் தலைகீழாக ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# "எங்கு எமக்கும் இந்தியாவிற்குமான உறவுநிலை கைவிட்டுபோனதோ அங்கிருந்துதான் அவ்வுறவு நிலை தொடங்கப்பட வேண்டும்"

## ஜனநாயக போராளிகள் கட்சி வெளியிட்ட அறிக்கை

அதன் தலைவர் வேந்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

தசாப்தங்கள் கடந்தும் ஈழத்தமிழர்களது, நியாயங்களையும் அறைகூவல்களையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என தமிழினம் கருதுகிறது.

ஈழத்தமிழர்களதும் இந்தியாவினதும் சமூக அரசியல் பொருளாதார பாதுகாப்பு உறவுநிலைகள் பன்னெடுங்கால வரலாற்றுக்கு உரியவை.

அந்த உரித்தின் அடிப்படையில்தான் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவானது.

இந்தியா தனது பிராந்தியத்தின் நலன் மற்றும் ஈழத்தமிழினத்தின் பாதுகாப்பு அரசியல் உரிமை என்பவற்றை கருத்தில் கொண்டே தனது முழுமையான பலத்தின் திரட்சியின் அடிப்படையில்தான் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் இலங்கையில் தனது படைத்தரையிறக்கத்தையும் நிகழ்தியிருந்தது.

அதற்கு பின்னரான சில கசப்பான அசாதாரணமான நிகழ்வுகள் இந்திய ஈழத்தமிழர்களது உறவு நிலைகளில் இடைவெளியினை ஏற்படுத்தி இறுதியில் சிறிபெரும் புத்தூரில் ஏற்படுத்தப்பட்ட துன்பியல் நிகழ்வினை அடுத்து ஈழத்தமிழர்களை இந்தியா முற்றுமுழுதாக கைவிட்டுவிட்டது.

எங்கு எமக்கும் இந்தியாவிற்குமான உறவுநிலை கைவிட்டுபோனதோ அங்கிருந்துதான் அவ்வுறவு நிலை தொடங்கப்பட வேண்டும் என நாங்களும் எமது மக்களும் கருதுகிறோம்.



சிறீபெரும்புதூரின் வழக்குகளில் தண்டனைபெற்று இந்திய நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்ட ஈழத்தமிழர்களான முருகன் றொபேட், டயஸ் ஜெயக்குமார் ஆகியோர் விரைந்து சிறப்பு முகாம்களில் இருந்து விடுவித்து தாயகம் திரும்ப ஆவன செய்ய வேண்டும் என இந்திய மத்திய மாநில அரசுகளை எமது மக்களின் சார்பில் கேட்டுகொள்கிறோம் என்றுள்ளது.

# பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட த 415 கிராம அலுவலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையும், டெங்கு பெருகும் இடங்களை இல்லாதொழித்தலும்



பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட j 415 கிராம அலுவலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையும் டெங்கு பெருகும் இடங்களை இனங்கண்டு அதனை உடனடியாக தூய்மைப் படுத்தும் செயற்பாடும் 05-03-2024 செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை சுகாதா வைத்திய அதிகாரி பணிமனை பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறைப் கிளை நிர்வாகிகள், தொண்டர்கள், கடற்படை, பொலிசார் ஆகியோர் இணைந்திருந்தனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாத்தறையிலிருந்து மட்டக்கப்பிற்கு ஒருகோடி ரூபா பெறுமதியான வலம்புரி சங்கு கடத்தி வந்த பௌத்த தேரர் ஒருவர் உட்பட இருவர் மட்டு கல்குடாவில் கைது

(கனகராசா சரவணன்)

மாத்தறையில் இருந்து மட்டக்களப்பு விற்பனைக்காக கடத்தி கொண்டுவரப்பட்ட ஒருகோடி ரூபா பெறுமதியன வலம்புரிசங்கு ஒன்றுடன் பௌத்த தேரர் ஒருவர் உட்பட இருவரை வியாழக்கிழமை (7) இரவு மட்டு கல்குடா பிரதேசத்தில் வைத்து விசேட அதிரடிப்படையினர் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக கல்குடா பொலிசார் தெரிவித்தனர்.

தாண்டியடி விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய அம்பாறை மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் பணிப்பாளர் வாவிடவிதானவின் வழிகாட்டலின்கீழ் தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் சம்பதினமான நேற்று இரவு கல்குடா தபால் கந்தோருக்கு அருகாமையில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் அங்கு பௌத்த தேரர் உட்பட இருவர் வலம்புரிசங்கு ஒன்றை விற்பனைக்காக கடத்தி வந்ததை அவதானித்த விசேட அதிரடிப்படையினர் அவர்களை சுற்றிவளைத்து மடக்கிபிடித்து கைது செய்ததுடன் ஒரு கோடி ரூபா பெறுடதியான வலம்புரி சங்கு ஒன்றை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் சான்று பொருளான வலம்புரிசங்கையும் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளதாவும் இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பு வாகரையில் வீடொன்றில் குண்டுவெடிப்பு – ஒருவர் படுகாயம்



மட்டக்களப்பு வாகரை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள வீடு ஒன்றில் குப்பைக்குள் இருந்து குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் வியாழக்கிழமை (07) பகல் 12 தணிக்கு இடம்பெற்றுள்ளதாக வாகரை பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் சம்பவதினமான இன்று பகல் காணியை துப்பரவு செய்து அதன்குப்பைகளை தீயிட்டு எரித்துக் கொண்டிருந்தபோது அதில் இருந்த கைக்குண்டு ஒன்று பாரிய சத்தத்துடன் வெடித்து சிதறியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடப்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு முஸ்லிங்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு ஆளுநர், கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் பங்கேற்றனர்




ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்த கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்களுக்கிடையிலான சந்திப்பு 6ம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

இந்த சந்திப்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், ஏ.எல்.எம். அதாஉல்லா, எம்.சி. பைசால் காஸிம், செய்யத் அலிஸாஹிர் மௌலானா, சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுனபின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது கிழக்கு மாகாண முஸ்லிங்களின் பிரதான பிரச்சினைகள் தொடர்பில் இங்கு நீண்டநேரம் ஆராயப்பட்டதுடன் கிழக்கில் அண்மைய இடம்பெற்ற இடமாற்றத்தில் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் பிரச்சினைகள், சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளின் நியமன விடயங்கள், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட முஸ்லிங்களின் காணி பிரச்சினைகள், மூடப்பட்டுள்ள காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகைக்கு அனுமதி வழங்கும் விவகாரம், மட்டக்களப்பு மாவட்ட கல்வி மேம்பாட்டு விடயங்கள், எனப்பல சமூக நல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு ஆராயப்பட்டது.

இவற்றில் பல விடயங்களுக்கு முழுமையான தீர்வும், சில விடயங்களுக்கு துறைசார்ந்த அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதாக தீர்வு எட்டப்பட்டுள்ளது. இதுவிடயமாக கிழக்கு மாகாண ஆளுநருக்கும் - முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான சந்திப்புக்கள் ஊடாக முஸ்லிங்களின் பிரச்சினைகளை பேசி தீர்க்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தார். மேலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு தேவையான போதுமான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கும் விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



# ரணில் ராஜபக்ஸ ஆட்சியை விரட்டிக்க பெண்கள் அணிதிரளுமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அழைப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களின் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டு நில ஆக்கிரமிப்பு தொடர்கிறதுடன் அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் ரணில் ராஜபக்ஸ அரசாங்கம் ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளிலேயே இறங்கியிருக்கிறது எனவே இந்த நாட்டை அழிக்கின்ற ரணில் ராஜபக்ஸ ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதற்கு எதிராக பெண்கள் அணிதிரளுமாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் அழைப்புவிடுததுள்ளர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி 113 ஆவது சர்வதேச மகளிர் தினத்யிட்டு கொழும்பிலுள்ள தேசிய மக்கள் சக்தியின் கட்சி பிராதன காரியாலயத்தில் 06-03-2024 புதன்கிழமை (6) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி 113 ஆவது சர்வதேச மகளிர் தினத்தை தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பாகிய நாங்கள் கொண்டாடவிருக்கிறோம். இத்தருணத்தில் பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ள நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யமுடியாது, மருத்துச் செலவைத் தாங்கிக்கொள்ள முடியாது நெருக்கடியான வாழ்க்கைக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக 70 இலட்சம் பேர் அதாவது, இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் அடுத்தவேளை உணவை பெற்றுக்கொள்வதற்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கான பிரதான காரணம் 2022 ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியாகும். இந்தப் பொருளாரதார நெருக்கடியின் காரணத்தால் கடந்த இரு வருடங்களில் 15 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களுக்கு தொழில்வாய்ப்புகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. இம்மக்களின் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. நில ஆக்கிரமிப்பு தொடர்கிறது. விவசாயக் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அதைப்போல, இளைஞர்கள் போதைப்பொருள் பாவனையில் சிக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் காணிப்பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் கணவனை இழந்த பெண்கள், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு கிட்டவில்லை. இவற்றுக்கு எவ்வித பதிலையும் வழங்காது அரசாங்கம் கள்ள மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது.

அதேவேளை அரசாங்கமோ கூத்துக்களை காண்பித்து மக்களை திரட்டுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. தற்போது 24 குடும்பங்களுக்கு அஸ்வெசும எனும் பெயரில் நிவாரணம் வழங்கும் முயற்சி முன்னெடுக்கப்படுகிறது. சமுர்த்தி கொடுப்பனவு பெற்ற 16 இலட்சம் குடும்பங்கள் தற்போது அஸ்வெசும திட்டத்தில் 24 இலட்சமாக அதிகரித்திருக்கின்றது. எனவே, மேலும் 8 இலட்சம் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளமை தெளிவாகின்றது.

அதுமட்டுமன்றி, தற்போதைய விலைவாசியுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற 1000 ரூபா சம்பளம் நாளாந்த வாழ்க்கைக்கு போதாமல் இருக்கிறது. இந்த மக்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையை எடுக்க வேண்டும். மலையகத்தில் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்த வேண்டும். அந்த மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியாகிய நாங்கள் வலியுறுத்துகிறோம்.

நாளுக்கு நாள் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படுகிறது. அநீதிக்கு எதிராக போராடுகின்ற மக்களை இந்த அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் ஒடுக்கி வருகிறது. ரணில் ராஜபக்ஸ அரசாங்கம் ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளிலேயே இறங்கியிருக்கிறது. இதற்கு எதிராக நாங்கள் பெருந்திரளான பெண்களை அணித்திரட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றோம்.

எனவே நாட்டை அழிக்கின்ற இந்த ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதற்காக பொதுமக்கள் அனைவரும் ஒன்றுணையுமாறு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம் என்றார்.

கனடிய செய்திகள்
Canadian News

# Deepak Talreja who is seeking nomination to be the official candidate for Conservative Party of Canada for Markham -Thornhill riding met with Journalists from 10 Chinese Media outlets




மார்க்கம் தோர்னிஹில் தொகுதியில் கொன்சர்வேட்டிவ் கட்சி சார்பாக மத்திய பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் தேர்தலில் நிற்கும் தீபக் தல்ரேஜா சீன மொழி சார்ந்த ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

இவரை மார்க்கம் தோர்ன்ஹில் தொகுதியின் மத்திய பாராளுமன்றத் தேர்தலின் வேட்பாளராக தேர்ந்தெடுப்பதற்கு மேற்படி தொகுதியில் வாழும் தமிழ் ஆதரவாளர்களும் அவருக்கு தங்கள் ஆதரவை வழங்கியுள்ளதாக அறியப்படுகின்றது.




## கனடா வாழ் "தமிழழகன் மதியழகனின்" "சொற்கோ வி.என். மதிஅழகன் – தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப்பதிவு" நூல் அறிமுக விழா




கனடா வாழ் "தமிழழகன் மதியழகன்" அவர்களின் "சொற்கோ வி.என். மதிஅழகன் - தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப்பதிவு" நூல் அறிமுக விழா கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் ஸ்காபறோ நகரசபை மண்டபத்தில் எதிர்வரும் இருபத்திமூன்றாம் திகதி சனிக்கிழமை (23-03-2024) நண்பகல் ஒன்று முப்பதுக்கு (1.30) தேநீர் விருந்துடன் விழா ஆரம்பமாகும்.

பல்கலை வித்தகர் அகணி சுரேஷ் அவர்கள் விழாவுக்கு தலைமை தாங்குவார்.

இலங்கை சுயாதீன பத்திரிகா சமாஜம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை சுயாதீன தொலைக்காட்சிச் சேவை, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், கனடா ரி.வி.ஐ தொலைக்காட்சி ஆகியவற்றில் 50 ஆண்டு காலத்துக்கும் மேலான சேவைக்கால அனுபவமுள்ளவர் "சொல்லாயன்" வி.என். மதிஅழகன்.

இலங்கை ஒலிபரப்புத்துறை அதன் ஒரு நூற்றாண்டு காலப் பூர்த்தியை அடுத்த ஆண்டில் கொண்டாட ஆயத்தமாகி வரும் அதே வேளையில் "சொற்கோ வி.என். மதிஅழகன் - தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப் பதிவு" நூல் சென்னை காந்தளகம் பதிப்பகத்தால் வடிவமைக்கப்பட்டு வெளியானது.

வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஆறாந் திகதி சிறப்பாக இடம் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்காபறோ சிவிக் சென்ரர் நூல் அறிமுக விழாவில் எழுத்து - மின்னியல் ஊடகர்கள், பல்துறைக் கலைஞர்கள், கல்விமான்கள், அறிஞர்கள், பாடசாலைப் பருவகால நண்பர்கள், மூத்த குடிமக்கள், சமூகத் தலைவர்கள், வானொலி - தொலைக்காட்சி நேயர்கள், தமிழ் உணர்வாளர்கள் என பலதரப்பட்டவர்கள் பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் நீண்ட காலமாக சிறப்பாக இயங்கிவரும் யாழ்ப்பாணம் கந்தர் மடம் மக்கள் ஒன்றியத்தின் இவ்வருடத்தின் ஒன்றுகூடல்

நூற்றுக்கணக்கான அங்கத்தவர்களைக் கொண்டு நெருக்கமான ஒற்றுமையுடன் ஒன்று பட்ட நோக்கங்களோடு கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் யாழ்ப்பாணம் கந்தர் மடம் மக்கள் ஒன்றியத்தின் இவ்வருடத்தின் ஒன்றுகூடல் கடந்த 24-02-2024 அன்று மாலை 7 மணியளவில் 2648 Eglinton Ave E. என்னும் விலாசத்தில் அமைந்துள்ள East Town Banquet மண்டபத்தில் இடம் பெற்றது.



இந்த வைபவம் குளிர்கால ஒன்று கூடல் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஒன்றுகூடல் நிகழ்விற்கு கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட குடும்பத்தினர் நண்பர்கள் மாத்திரமல்ல. அங்கத்தவர்களின் நட்பு வட்டாரங்களிலிருந்தும் பல நண்பர்கள் கலந்து கொண்டனர். அந்த வகையில் வர்த்தகப் பிரமுகர் கேதா நடராஜா அவர்களின் நட்பு வட்டாரத்தைச் சேர்ந்த பல அன்பர்கள் அங்கு அழைக்கப் பட்டிருந்தனர்.





கலை நிகழ்ச்சிகளும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் கலந்து வந்திருந்தவர்களை மகிழ்வித்த இந்த நிகழ்வு அனைவரில் மனங்களில் நன்கு இடம்பிடித்தது என்றால் அது மிகையாகாது.



**- சத்தியன்**

## "முன்னாள் வர்த்தகரும் அமரருமான சண்முகம் தியாகராஜா மனிதநேயமிக்க ஒருவராக எம் மத்தியில் விளங்கினார்". நினைவஞ்சலி நிகழ்வில் சமய. சமூகச் செயற்பாட்டாளர் சோம. சச்சிதானந்தன் புகழாரம்



யாழ்ப்பணம் ஊர்காவற்றுயை பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் தனது வாழ்நாளில் பெரும்பகுதியைக் கழித்தவருமான முன்னாள் வர்த்தகரும் அமரருமான சண்முகம் தியாகராஜா மனிதநேயமிக்க ஒருவராக எம் மத்தியில் விளங்கினார். அத்துடன் அவரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் இங்குள்ள சமய மற்றும் சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்வது மற்றும் தங்கள் ஆதரவை வழங்குவது போன்ற விடயங்களில் முன் நின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அமரத்துவம் அடைந்த இலங்கை வர்த்தகர் சண்முகம் தியாகராஜா அவர்கள் தனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களோடு மட்டுமல்லாது. ஊரவர்கள் மற்றும் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என அனைத்து அன்பர்களையும் மரியாதையோடு வரவேற்று அவர்களை உபசரிக்கும் பண்பு கொண்டவர். அத்துடன் இவர் சார்ந்த உறவுகள் மீது அன்பு காட்டி அக்கறையோடு அவர்கள் மீது கவனம் செலுத்தும் பண்மையும் தன்னோடு கொண்டவராக விளங்கினார்.



இவ்வாறு கடந்த 02-03-2024 சனிக்கிழமையன்று கனடா கந்தசாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற அமரர் சண்முகம் தியாகராஜா அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய சமய. சமூகச் செயற்பாட்டாளர் சோம. சச்சிதானந்தன் புகழாரம் சூட்டினார்.

அங்கு இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா அமைப்பின் முன்னாள் தலைவர் திரு. செல்லத்துரை கிருஸ்ணகோபால். "உதயன்" லோகேந்திரலிங்கம் ஆகியோரும் நினைவு உரைகளை ஆற்றினார்கள்.





மேற்படி நிகழ்வை அமரரது குடும்ப உறுப்பினர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

**- சத்தியன்**

# தமிழ்நாட்டில் உயிரிழந்த சாந்தனின் வித்துடல் எள்ளங்குளம் 04 — 03 — 2024 அன்று மாவீரர் துயிலும் இல்ல மயானத்தில் புதைக்கப்பட்டது





சாந்தனின் உடல் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல மயானத்தில் 04-03-2024 அன்று தலைவர் பிரபாகரனின் வீட்டில் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பெருமளவிலான மக்களின் கண்ணீர் கதறலுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்தியாவின் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு முப்பது வருடங்களுக்கு மேலாக சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட போதும் தொடர்ந்து சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு தாயகம் திரும்ப இருந்த நிலையில் உடல் நிலை மோசமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் திடீரென உயிரிழந்திருந்தார்.

சாந்தனின் உயிரிழப்பு தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கொந்தழிப்பையும் ஏற்படுத்தியிருந்த்து.

குறிப்பாக உயிரோடு வருவாரேன எதிர்பார்த்திருந்த நிலையில் உயிரிழந்த நிலையில் தாயகத்திற்கு கொண்டு வரப்பட்டு பல்வேறு இடங்களிலும் அலைகடலெனத் திரண்டு கண்ணீர் மல்க மக்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இந்நிலையில் உடுப்பிட்டியில் உள்ள அவரது சொந்த வீட்டில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தலைவர் பிரபாகரனின் வீட்டில் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பெருமளவிலான மக்கள் புடைசூழ நல்லடக்கத்திற்காக உடல் துயிலும் இல்லத்திற்கு எடுத்து வரப்பட்ட போது வீதிகளில் திரண்டு மக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர்.

இறுதியாக எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல மயானத்தில் உற்றார் உறவினர் நண்பர்கள் போராளிகள் எனப் பெருமளவிலானோரின் கண்ணீர் கதறலுடன் நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்த வடமாகாண மீனவர்கள் இந்தியப் பிரமருக்கு கடிதம்



இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகையும் அவர்களின் இழுவைமடி தொழில் முறையினாலும் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் அதிகாரத்தை பயன்படுத்தி விரைவான நடவடிக்கை எடுக்குமாறு கோரிஇந்திய பிரதமருக்கு வடமாகாண கடற்தொழில் இணையத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கடற்தொழில் இணையத்தின் ஏற்பாட்டில் யாழில் செவ்வாய்கிழமை (05) காலை இடம்பெற்ற கவனயீர்ப்பு பேரணியின் பின்னர் இந்திய பிரதமருக்கான மகஜர் யாழ்பாணத்திலுள்ள



இந்திய துணைத்தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வாறு கையளிக்கப்பட்ட மகஜரிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

“இலங்கையின் வட மாகாணத்தில் சுமார் இரண்டு இலட்சம் மீனவ குடும்பங்கள் மீன்பிடி தொழிலையே நம்பி வாழுகின்றனர்.

மேலும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீன்பிடித் தொழிலை நம்பியே வாழ்வாதார தொழில்களில் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் காரணமாக



அனைத்து வாழ்வாதார கட்டமைப்புக்களும் சீர் குலைந்துள்ள நிலையில், மீன்பிடி ஒன்றே தற்போது நம்பிக்கை தரும் தொழிலாக உள்ளது. இந்த தொழிலிற்கும் இந்திய மீனவர்களின் மீன்பிடி முறைகளினால் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் எமது நாட்டின் கரையோரம் வரை வந்து எமது கடல் வளங்களையும் கடல் வாழ் உயிரினங்களையும் அழிக்கும் இழுவைமடி தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இந்திய மீனவர்களின் இந்த சூழல் விரோத மீன்பிடி முறைமை காரணமாக எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் மீன்பிடி வலைகள் சேதமாக்கப்பட்டு எம் மீனவர்களின் நாளாந்த வருமானத்தினையும் இழந்து வருகின்றனர்.

இரு நாட்டு மீனவர் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக பல கட்டங்களில் இதுவரை பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் 05.11.2016 தங்களின் தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா ஸ்வராஜ் அம்மையார், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மற்றும் இரு நாட்டின் பாதிக்கப்பட்ட மீனவர்களின் பங்கேற்புடன் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த தங்களின் மேலான அதிகாரத்தை பயன்படுத்தி விரைவான நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளையில், இலங்கையின் பொருளாதார மற்றும் பல்வேறு நெருக்கடிகளில் இந்திய தேசம் கரம்கொடுத்து உதவிவரும் சந்தர்ப்பங்களையும் நன்றியுணர்வோடு நினைவு கூறுகின்றோம் என்று குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது”.

இதேவேளை கடந்த ஞாயிறன்று (3) இலங்கையின் வடக்கு மாகாண மீனவர்கள் தமது கடற்பரப்பிற்குள் படகுகளில் கருப்புக் கொடியைக் கட்சி இந்திய அரசிற்கு தமது எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையில் போராட்டையும் ஒன்றையும் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- நடராசா லோகதயாளன் -

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# ஓடாத "நெடுந்தாரகை" படகிற்காக 51 மில்லியனை வழங்கிய வடக்கு மாகாண சபை

**(கனடா உதயனின் பிரத்தியேகச் சிறப்புச் செய்தி)** **- நடராசா லோகதயாளன்**



இலங்கையில் அனைத்து துறைகளிலும் பொறுப்புக்கூறல் இல்லை என்பதும் சிவில் நிர்வாகத்தில் படையினரின் பிரசன்னம் மற்றும் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது என்பதும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கவலைக்குரிய விடயமாக சுட்டிக்காட்டப்படுகிறது.

அதே போன்று நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், சாதாரணம் கிராம நிர்வாக மட்டத்திலிருந்து, கொழும்பிலுள்ள உயர்மட்டம் வரை ஊழல் தலைவிரித்தாடுகிறது என்பது குறித்தும் பன்னாட்டு அமைப்புகள் ஆவணப்படுத்தியுள்ளன.

இந்நிலையில், ஓடாத ஒரு படகிற்கு 51 மில்லியனுக்கு அதிகமாக பணம் கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ள விவகாரம் "கனடா உதயனின்" சிறப்பு புலனாய்வில் தெரியவந்துள்ளது.

வடக்கு மாகாண சபையினால் 2017ஆம் ஆண்டு உலக வங்கியின் "நெல்சிப் திட்டத்தில்" 150 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் கட்டப்பட்ட நெடுந்தாரகை கப்பல் ஓடாது நிறுத்தி வைக்கப்பட்டள்ள போதும் அதன் திருத்தச் செலவிற்காக 51 மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது நமது புலனாய்வில் அம்பலமாகியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முயற்சியினால் கடல் கடந்த தீவக மக்களின் இலவச போக்குவரத்திற்காக 2017 இல் உலக வங்கியின் "நெல்சிப் திட்டத்தில்" அப்போதைய பிரதம செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆகியோரின் முயற்சியில் 150 மில்லியன் ரூபா பணத்தில் கட்டி வழங்கி வைக்கப்பட்ட நெடுந்தாரகை கப்பலை 51 மில்லியன் ரூபா பணமும் வழங்கி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உடமை மாற்றமும் செய்ய வடக்கு மாகாண சபை முடிவு செய்துள்ளது.

பெருநிலப் பிரப்பிற்கும், தீவகப் பகுதிகளுக்கும் இடையே மக்கள் சுலபமாக பயணிக்க, உலக வங்கியின் அனுசரணையில் கட்டப்பட்டு வடக்கு மாகாண சபையிடம் கையளிக்கப்பட்ட கப்பலை எப்படி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உடமை மாற்றம் செய்ய முடியும் என்ற கேள்வியும் இதில் எழுகிறது. அதாவது ஒரு பன்னாட்டு அமைப்பு, போரினால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்திற்காக ஒரு சிறப்பு திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட கப்பலை எப்படி மத்திய அரசு கையகப்படுத்த முடியும் அல்லது மாகாண அரசு மத்திய அரசுக்கு அளிக்க முடியும்?

இதற்கு விடை கிடைக்காத சூழலில், இனிவரும் காலங்களில் படகுகள் அனைத்தும் வீதி அபிவருத்தி அதிகார சபையின் கீழேயே இருக்க வேண்டும் என ஜனாதபதி கூறயுள்ளதோடு அதற்கான அமைச்சரவைப் பத்திரமும் விரைவில் வருகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இதனை 2023-10-26 அன்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டி 4 மாதம் கடந்துவிட்ட போதும் அவ்வாறு எந்த அறவித்தலும் இதுவரை வெளிவரவில்லை.

தெளிவில்லாத இப்பாடியான நிலையில், அந்த கப்பலை செலுத்தும் பராமரிக்கும் சான்றிதழ் பெற்ற பணியாளர்களும் மாகாண சபையில் இல்லை என்பதன் அடிப்படையில் நெடுந்தாரகைப் படகினை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்குமாறு பணிக்கப்பட்டது.

இதனால் நெடுந்தாரகையை வீதி அதிகார சபையிடம் கையளிக்க இணங்கியபோது நெடுந்தாரகை கப்பலானது தற்போது பழுதடைந்த நிலையில் இயங்காமல் உள்ளமையினால் அதனை திருத்தி தந்தாலே படகை பொறுப்பேற்போம் என வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உறுதியாக கூறி கூறிவிட்டனர்.

கப்பலைப் பொறுப்பேற்பதில் இப்படி ஒரு பிரச்சனை எழுந்த நிலையில், அதனை யார் திருத்துவது, அதற்கு எவ்வளவு செலவாகும், அப்படி ஆகும் செலவை யார் ஏற்பது, அந்த நிதி எங்கிருந்து வரப்போகிறது என்ற கேள்விகள் எழுந்த நிலையில் வெளிப்படையான பதில்கள் ஏதுமில்லை.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், குடாநாட்டில் தீவுப் பகுதிகளிற்கான கடல் கடந்த போக்குவரத்துப் பயணத்திற்கு படகுகள் எவையுமே இன்றி மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதனால் அவை தொடர்பில் உடன் மாற்று ஏற்பாடுகள் மேற்கொண்டே ஆக வேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்தது. மக்கள் சந்திக்கும் நாளாந்த பிரச்சனைகளில் ஒன்றான இதற்கு உடனடி தீர்வு வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

"குடாநாட்டின் கடல் கடந்த தீவக போக்குவரத்திற்காக தற்போது "நெடுந்தாரகை, எழுதாரகை, வடதாரகை" என பல தாரகைகள் உண்டு. இதில் ஒரு தாரகையும் இயங்க முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு "குமுதினியும்" இரண்டு ஆண்டுகளாக இயங்கவில்லை. அவ்வாறானால் மக்கள் என்ன செய்வது" என தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அந்த கூட்டத்தில் வினாவினார்.

இதற்குப் பதிலளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் குரூஸ், "வட தாரகையை திருத்துவதற்கு 95 மில்லியன் ரூபாவும், (268,468 டொலர்) நெடுந்தாரகையை திருத்த 59 மில்லியன் ரூபாவும் வேண்டும். எழுதாரகைக்கு 10.3 மில்லியன் ரூபா வேண்டும்" என மாவட்ட அபிரிவிருத்து சபை கூட்டம் நடைபெற்ற அன்று தெரிவித்தார்.

"இத்தனை மில்லியன்கள் செலவு செய்து திருத்திய பின்பும் அந்த கப்பல்கள் சீராக இயங்குமா என்பதனை உறுதி செய்ய முடியவில்லை. அதனால் இந்த தொகைப் பணத்திற்கு ஏன் புதிய படகுகளை கொள்வனவு செய்ய முடியாது?" என அன்றே தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வியும் எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு அன்று பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா "தீவு பயணங்களிற்காக புதிய படகுகளை கொள்வனவு செய்ய உத்தேச செலவு மதிப்பீடு தயார் செய்து தாருங்கள் என்ற போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நெடுந்தாரகையை 6 கோடி ரூபாயில் திருத்தம் செய்ய முடியும் என சங்கம் கோரியும் வழங்காது இத்தனை கோடியில் திருத்த வீதி அபிவிருத்தி அதிகார சபை முயல்கின்றது இதுவே நெடுந்தாரகைக்கும் நிலைமை எனவும் வாதிட்டார்.

இந்நிலையில், நெடுந்தாரகை கப்பலை திருத்தும் பணி இலங்கை கடற்படை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, தற்போது நெடுந்தாரகை கப்பலை திருத்தம் செய்வதற்கான பணமாக 51 மில்லியன் 481 ஆயிரத்து 80 ரூபா 42 சதம், 2024-02-20 அன்று வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இலங்கை கடற்படைத் தளபதியின் உத்தியோக பூர்வ கணக்கிலக்கமான 7041344 இற்கு இலங்கை வங்கி காசோலை மூலம் வழங்கப்பட்டு விட்டது.

உள்ளூராட்சித் திணைக்களத்தை தொடர்புகொண்டு இது தொடர்பில் கேட்டால் இதற்கான பணம் வடக்கு மாகாண சபையினால் இந்தப் படகு திருத்தம் செய்வதற்கு எனக் குறிப்பிட்டே விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

வருடம் ஒன்றிற்கு 5 மில்லியன் ரூபா மாகாண சபையால் எரிபொருளிற்கும் பணியாளர் சம்பளத்திற்குமாக 5 ஆண்டாக செலவு செய்த ஓர் சொத்து தற்போது மாகாண சபையில் இருந்து வெளியேறுவது மட்டுமல்ல அதனை வெளியே வழங்கவும் 51 மில்லியன் 481 ஆயிரத்து 80 ரூபா 42 சதம் பணம் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது மட்டுமின்றி பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது.



இவ்வாறு 2024-02-20ஆம் திகதிய கசோலை வழங்கப்பட்ட போதும் நெடுந்தாரகை என்னவோ நெடுநாளாக நிறுத்தியே வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பணம் கடற்படை வசம் சென்றுவிட்டாலும், அந்த கப்பல் திருத்தப்படும் பணி எப்போது ஆரம்பிக்கும், பழுது பார்த்து இயங்கு நிலைக்கு வருவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதற்கும் இதுவரை பதிலில்லை.

இதேநேரம் இப்படகை மத்திய அரசிடம் வழங்காது மாகாண சபையே தொடர்ந்தும் கொண்டு நடாத்தும் வல்லமை இல்லை எனக் குறிப்பிடப்படுவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது "யுத்த காலத்திலே இதனைவிடப் பெரிய படகுகள், கப்பல்களை இயக்கிய விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்றனர். அவர்களிடம் இந்தக் கப்பலை வழங்கினால் அவர்கள் சர்வ சாதாரணமாக இயக்குவார்கள் ஆனால் அவர்களிடம் இந்த கப்பல்களைச் செலுத்தும் தகமை கொண்ட சான்றிதழ்கள் இல்லை என்ற காரணத்தினால் அரச நிர்வாக இயந்திரம் அவர்களது திறமையை பயன்படுத்த மறுக்கின்றனர். அவர்களை ஓர் தொழில் தகமைச் சான்றிதழிற்கு உட்படுத்தி ஒரு பரிசோதனையின் பின்னர் சான்றிதழ்களுடன் இப்பணியை வழங்கினால. அவர்களின் குடும்பங்களிற்கான வாழ்வாதாரமும் உறுதிப்படுத்தப்படும் என்பதே எமது நிலைப்பாடு" என்றார்.

போர் முடிந்து 15 ஆண்டுகள் ஆகும் நிலையில், புனர்வாழ்வு என்று கூறி அதை அளித்து முடித்த பிறகு சமூகத்தில் ஒருங்கிணைப்பட்ட பல முன்னாள் போராளிகளிடம் திறமைகளும் தொழில்நுட்ப வல்லமைகளும் இருந்தும் போதிய வாய்ப்புகள் இல்லாமல் வாடுகின்றனர். அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏன் மத்திய அரசு ஏற்படுத்தி தரவில்லை அல்லது தர மறுக்கிறது என்பதற்கான பதிலும் இல்லை.

கடற்படையிடன் இந்த கப்பலை மிகப்பெரும் தொகைக்கு திருத்துவதற்கு கையளித்திருப்பது மேலும் பல கேள்விகளை எழுப்புகிறது என்று துறைசார் வல்லுநர்கள் கூறுகின்றனர். இலங்கையின் பொருளாதார நிலை உலகமறிந்தது அத்தோடு போரினால் பாதிக்கபப்ட்ட மக்களுக்கு உதவ பன்னாட்டு அமைப்புகள் தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் நிலையில், இந்த கப்பலை திருத்த ஏன் அப்படியான அமைப்புகளிடமிருந்து பணத்தை வேண்டக் கூடாது என்ற வாதத்தை செயற்பாட்டாளர்கள் வைக்கின்றனர். இந்த கப்பலை திருத்துவதற்கு ஆகும் தொகை என்பது பன்னாட்டு அமைப்புகளுக்கு பெரிதாக இருக்காது என்றும், உலக வங்கியையே மீண்டும் அணுகினால் அவர்கள் தமது சிறப்பு திட்டம் ஏதேனும் ஒன்றின் ஊடாக இதை திருத்தித்தர முன்வரலாம் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், எதுவுமே கொழும்பு அட்சியாளர்களின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. 51 மில்லியனுக்கும் அதிகமான ரூபாவை இலங்கை கடற்படைக்கு வழங்கிய பின்னரும் அந்த கப்பல் உரிய முறையில் திருத்தப்பட்டு பயணம் செய்து தமிழ் மக்களின் அன்றாட பாவனைக்கு உதவுமா அல்லது அந்த பணமும் கடலுக்கு அடியில் சென்று விடுமா என்பதே இப்போதுள்ள கேள்வி.




# இன்றைய நேரம் தான் நேற்றைய நேரம்

## நேற்றைய விலையில் கொண்டோவை இன்று வாங்குங்கள்

## பிக்கரிங் நகரின் சிறந்த பெறுமதி கொண்ட ஒரு புதிய வரவு! வரலாற்றில் புதிய கொண்டோ விலைகளில்!

விலைகள் அதிகரிக்கும் முன்பாகவே நீங்கள் கொண்டோக்களை வாங்கிக் கொள்வதை நாம் விரும்புகின்றோம். அதை நீங்கள் இப்போதே செய்யலாம். ஏனென்றால் Highmark வரலாற்றில் குறைந்த விலைகளில் புதிய வரவாக நவீன கொண்டோக்களை வழங்குகின்றது!

அத்துடன் எமது விசேடமான சேமிப்புத் திட்டம். எமது Highmark இல் புதிய கொண்டோ ஒன்றை வாங்கினால்

**$50,000** வரையில் கழிவைப் பெறலாம்.

வட்டி வீதம் குறையும் போது கொண்டோக்களின் விலைகள் அதிகரிக்கலாம். எனவே தற்போது வாங்கிக் கொள்வதே சரியானதாகும். எமது விற்பனை முகவர் ஒருவரை இன்றே அழைத்து தாங்கள் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

குறைந்த $500களில் இருந்து பிக்கரிங் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள எமது கொண்டோக்கள் 3 படுக்கை அறைகளைக் கொண்டவை.




Off-site Sales Gallery Location and Hours:

633 KINGSTON ROAD, PICKERING

Mon. – Thu. 12pm – 6pm
Friday – Closed
Sat. & Sun. 12pm – 5pm

**TheHighmark.ca**

CALL: 905-831-1755 or EMAIL: info@thehighmark.ca

HIGHMARK

FOLLOW US

* Prices, promotions, and specifications are subject to change without notice. All promotions are subject to terms and conditions. Renderings are artists' concepts. See Sales Representative for details. Exclusive Listing Brokerage Milborne Group Brokerage. Brokers Protected. E. & O.E.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




## NESAN 416-908-5656
Subramaniam

### Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity Line of Credit • Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By

Mortgage Alliance — RightBroker - RightMortgage — Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · National Bank · First National Financial LP · MCAP · Home Trust · Equitable Bank · RFA · radius financial · RMG mortgages

# இலங்கை சபாநாயகரின் "காட்டுத் தர்பார்"

**"அதிக சர்ச்சைகளுக்குள்ளும் கடும் விமர்சனங்கள் கண்டனங்களுக்குள்ளும் சிக்கியவராகவும் அரசு சார்பாக மட்டும் செயற்படுபவர், உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகள், வியாக்கியானங்களைக்கூட புறம்தள்ளி செயற்படுபவர் என்ற குற்றச்சாட்டை சுமப்பவராகவும் அரசின் கையாளாக "காட்டுத் தர்பார்" நடத்தியதன் மூலம் பாராளுமன்ற வரலாற்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொண்ட 4ஆவது சபாநாயகர் என்ற அவப்பெயரை தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பெற்றுக்கொண்டுள்ளார்"**

**- கே. பாலா**



9 ஆவது பாராளுமன்றத்தின் 11 ஆவது சபாநாயகராக 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டு இற்றைவரை அப்பதவியில் இருந்து வரும் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நிகழ்நிலை காப்பு சட்டத்தை நிறைவேற்றும் போது மேற்படி சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரித்துரைகளை சரியாக அமுல்படுத்தாமை, பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறியமை, அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன.

பாராளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் ஷமிந்த குலரத்னவிடம் 05-03-2024 அன்று கையளிக்கப்பட்டுள்ள இந்த சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 44 எம்.பி.க்கள் கையெழுத்திட்டுள்ளனர். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எப்போது விவாதத்திற்கு எடுப்பதென்பது தொடர்பில் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு திகதி தீர்மானிக்கப்பட்ட பின்னர் ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்கப்பட்டு விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும்.

இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் இதுவரையில் 11 சபாநாயகர்கள் பதவி வகித்துள்ளனர். முதலாவது பாராளுமன்றத்தின் 1978 முதல் 1988 வரையான ஆட்சிக்காலத்தில் கலாநிதி ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் 7 செப்டெம்பர் 1978 - 13 செப்டெம்பர் 1978 வரை பதவி வகித்தார். கலாநிதி ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் இராஜினாமா செய்ததையடுத்து பாக்கீர் மாக்கார் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 21 செப்டெம்பர் 1978 முதல் 30 ஆகஸ்ட் 1983 வரை பதவி வகித்தார். பாக்கீர் மாக்கார் இராஜினாமா செய்ததையடுத்து சேனநாயக்க சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 6 செப்டெம்பர் 1983 முதல் 20 டிசம்பர் 1988 வரை பதவி வகித்தார்.

இரண்டாவது பாராளுமன்றத்தின் 1989 - 1994 வரையிலான ஆட்சிக்காலத்தில் எம்.எச். மொஹமட் 9 மார்ச் 1989 முதல் 24 ஜூன் 1994 வரையும் மூன்றாவது பாராளுமன்றத்தின் 1994 - 2000 வரையான ஆட்சிக்காலத்தில் கே. பீ. ரத்நாயக்க 25 ஆகஸ்ட் 1994 - 18 ஆகஸ்ட் 200014 செப்டெம்பர் 2000 - 10 ஒக்டோபர் 2000 வரையும் நான்காவது பாராளுமன்றத்தின் 2000 - 2001 வரையான ஆட்சிக்காலத்தில் சபாநாயகர் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு எதிர்க்கட்சி எம்.பி.யாக அநுர பண்டாரநாயக்க 18 ஒக்டோபர் 2000 - 10 ஒக்டோபர் 2001 வரையும் ஐந்தாவது பாராளுமன்றத்தின் 2001 - 2004 வரையான ஆட்சிக்காலத்தில் ஜோசப் மைக்கல் பெரேரா 19 டிசம்பர் 2001 - 07 பெப்ரவரி 2004 வரையும் பதவி வகித்தனர்.

அதேபோன்று ஆறாவது பாராளுமன்றத்தின் 2004 - 2010 வரையான ஆட்சிக்காலத்தில் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார 22 ஏப்ரல் 2004 - 09 பெப்ரவரி 2010, 9 மார்ச் 2010 - 20 ஏப்ரல் 2010 வரை பதவி வகித்தார். ஐ.தே. மு யைச் சார்ந்த எதிர்க்கட்சி வேட்பாளரான டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார ஐ.ம.சு.மு. வேட்பாளரான டி.யூ. டபிள்யூ. குணசேகர பெற்ற 109 வாக்குகளுக்கெதிராக 110 வாக்குகளைப் பெற்று சபாநாயகர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பெருமையை கொண்டவர். ஏழாவது பாராளுமன்றத்தின் 2010 - 2015 வரையான ஆட்சியில் சமல் ராஜபக்ஸ 22 ஏப்ரல் 2010 முதல் 26 ஜூன் 2015 வரையும் எட்டாவது பாராளுமன்றத்தின் 2015 - 2020 வரையான ஆட்சிக்காலத்தில் கரு ஜயசூரிய 01 செப்டெம்பர் 2015 - 02 மார்ச் 2020 வரையும் பதவி வகித்த நிலையில் எட்டாவது பாராளுமன்றத்தின் 2020 - 2025 வரையான ஆட்சியில் மஹிந்த யாப்பா அபேவர்தன 2020 ஆகஸ்ட் 20 - இன்று வரை சபாநாயகராக உள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் இதுவரையில் 11 சபாநாயகர்கள் பதவி வகித்த நிலையில் 1980-12-23 ஆம் திகதியும் 1990-10-10 ஆம் திகதியும் 1992-06-09 ஆம் திகதியும் அப்போதைய சபாநாயகர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டபோதும் அவை தோற்கடிக்கப்பட்ட வரலாறே உண்டு.

அந்த வகையில் அதிக சர்ச்சைகளுக்குள்ளும் எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனங்கள் கண்டனங்களுக்குள்ளும் சிக்கியவராகவும் அரசு சார்பாக மட்டும் செயற்படுபவர், உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகள், வியாக்கியானங்களைக்கூட புறம்தள்ளி செயற்படுபவர் என்ற குற்றச்சாட்டை சுமப்பவராகவும் அரசின் கையாளாக "காட்டுத் தர்பார்" நடத்தியதன் மூலம் பாராளுமன்ற வரலாற்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொண்ட 4 ஆவது சபாநாயகர் என்ற அவப்பெயரை தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பெற்றுக்கொண்டுள்ளார்.

இன்று எதிர்க்கட்சிகளினால் கடுமையாக குற்றம்சாட்டப்படும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன போட்டியிட்டு சபாநாயகராக தெரிவாகவில்லை. மாறாக அரசு மற்றும் எதிர்க்கட்சிகளினால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட சபாநாயகர். ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு 2020 ஓகஸ்ட் 20 ஆரம்பமான போது சபாநாயகரை தெரிவு செய்யும் விதமாக மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை புதிய சபாநாயகர் பதவிக்கு அப்போதைய சபை முதல்வரான தினேஷ் குணவர்தன முன்மொழிந்தார். அதனை பிரதான எதிர்க் கட்சியாகவிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலரான ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. வழிமொழிந்த நிலையிலேயே மஹிந்த யாப்பா அபேவர்தன போட்டியின்றி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டார். அவ்வாறு ஏக மனதாக தெரிவான சாபாநாயகரே இன்று எதிர்க்கட்சிகளுக்கும் நாட்டுக்கும் எதிராக அரசியலமைப்புக்களை மீறி "காட்டுத் தர்பார்" நடத்துகின்றார்.

அதிலும் அண்மையில் அரசினால் கொண்டு வரப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டத்தை மூலம் நிறை வேற்றப்பட்ட முறை, பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறி செயற்பட்டமை தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எதிர்க்கட்சிகளினாலும் மனித உரிமைகள் அமைப்புக்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளினாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றார்.

நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தைப் பொறுத்தவரையில் 9 சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு முரணாக சபாநாயகர் செயற்பட்டுள்ளார். அரசியலமைப்பின் 123 (4) இன் பிரகாரம், ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாக உள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற விடத்து, அல்லது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு உயர்நீதிமன்றத்தின் தீர்மானிப்பில் கூறப்பட்டுள்ள முறையில் தவிர, நிறைவேற்றப்படுதல் ஆகாது என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மூலம் இச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் அதனை சபாநாயகர் புறம்தள்ளிவிட்டார்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் கூட நாட்டின் உயரிய சட்டத்தை மறந்துவிட்டு தம் இஷ்டம் போல சபாநாயகர் நடந்து கொண்டுள்ளார். நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது சிரமமான விடயம் என்பதனால் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் நோக்கில் அரசியலமைப்புபேரவை உருவாக்கப்பட்டது. இங்கு ஜனாதிபதியால் முன்மொழியப்படும் பெயரை அங்கீகரிக்கவும் நிராகரிக்கவும் பேரவையின் 5 வாக்குகள் தேவை. ஆனால் பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் போது சபாநாயகர் அதனை மீறி விட்டார்.

பொலிஸ் மா அதிபர் நியமனத்திற்கு 4 பேர் ஆதரவாகவும் 2 பேர் எதிராகவும் 2 பேர் வாக்களிக்காமலும் இருந்தனர். சபாநாயகர் தனது அறுதியிடும் வாக்கை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி பொலிஸ் மா அதிபரை நியமித்தார். அதாவது அரசியலமைப்பு பேரவையின் கூட்டம் முடிந்து வீட்டுக்கு சென்றதன் பின்னர் சபாநாயகர் "புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் இரண்டு உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆகவே அவர்கள் குறித்த முன்மொழிவுக்கு எதிராக வாக்களித்துள்ளதாக கருதி எனது தீர்மானமிக்க வாக்கினை வழங்குவதாக "ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார். இது முற்றிலும் அரசியலமைப்புக்கும், அரசியலமைப்பு பேரவையின் வழிமுறைகளுக்கும் எதிரானது.

இவ்வாறான நிலையில்தான் நிகழ்நிலை காப்பு சட்டத்தை நிறைவேற்றும் போது மேற்படி சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரித்துரைகளை சபாநாயகர் சரியாக அமுல்படுத்தாமை, பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் சபாநாயகர் அரசியலமைப்பை மீறியமை, அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கூறுகையில் நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உயர் நீதிமன்றத்தின் கட்டளையைப் புறக்கணிக்கவில்லை, அரசமைப்பை மீறவில்லை, பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறவில்லை. அதனால் பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கு அஞ்சி என் பதவியை இராஜினாமா செய்யமாட்டேன். எவருக்கும் பயந்து ஓடவும் மாட்டேன். நான்பாராளுமன்றத்தில் நடுநிலையுடன் செயற்படுகின்றேன். எனவே, எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நீதியின் பக்கம் நிற்கும் எம்.பிக்களால் தோற்கடிக்கப்பட்டே தீரும் என்று சூளுரைத்துள்ளார்.

இதேபோன்றே எதிர்க்கட்சிகளினால் சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுன தலைவருமான மகிந்த ராஜபக்ஸ சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படும் என உறுதிபடத்தெரிவித்துள்ளார்.

இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் வெற்றி பெற்றதாக வரலாறில்லை. அந்த வகையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும் எதிரான இந்த நம்பிக்கையில்லாத் பிரேரணையும் தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. அப்படித் தோற்கடிக்கப்படும்போது அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறியவர் சபாநாயகராக மட்டுமன்றி நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்த அத்தனை அமைச்சர்களும் எம். பி.க்களும் அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுபவர்களாகவே இருப்பர்.



# பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதிகள் காற்றோடு காற்றாகக் கரைந்துவிட்டன!

(கனடா நக்கீரன்)

மற்றவர்களை குறைகூறுவதற்கும் குற்றம் சாட்டுவதற்கும் பலர் இருக்கிறார்கள். அவை மிகவும் சுலபமானது. ஆனால் வினை செய்வதற்கு மட்டும் யாரும் இல்லை அல்லது மிகச் சொற்பமானவர்களே இருக்கிறார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடரின் போது ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க், இலங்கைபற்றி ஒரு வாய்மொழி அறிக்கையை மட்டும் சமர்ப்பித்துள்ளார். அடுத்து செப்தெம்பர், 2024 இல் நடை-பெறும் கூட்டத் தொடர்பிலேயே இலங்கை பற்றிய தீர்மானத்தை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் முன்வைப்பார்கள்.



உலகத் தமிழர் பேரவை மற்றும் கனேடிய தமிழ் காங்கிரஸ் உட்பட பல அமைப்புகளின் உண்மை முகம் வெளிப்பட்டு அவர்கள் இப்போது 'தமிழர் அதிகம் வாழும் வடக்கு - கிழக்கு பகுதியில் இருந்து ஆயுதப்படையினரை அகற்ற வேண்டாம்' என்று கூறும் பவுத்த மத குருக்களுடன் இணைந்து மக்களைத் தெளிவுபடுத்தும் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றனர்.

இது நாற்காலியில் இருந்து கொண்டு அரசியல் செய்யும் மருத்துவர் வல்லிபுரநாதன் அவர்களது குற்றச்சாட்டு. "உலகத் தமிழர் பேரவை மற்றும் கனடிய தமிழர் பேரவையும் காங்கிரஸ் உட்பட பல அமைப்புகளின் உண்மை முகம் வெளிப்பட்டு அவர்கள் இப்போது "தமிழர் அதிகம் வாழும் வடக்கு - கிழக்கு பகுதியில் இருந்து ஆயுதப்படையினரை அகற்ற வேண்டாம் என்று கூறும் பவுத்த மத குருக்களுடன் இணைந்து மக்களைத் தெளிவுபடுத்தும் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றனர்" என்பது தவறான குற்றச்சாட்டு.

உலகத்தமிழர் பேரவையும் கனடிய தமிழர் பேரவையும் 'கிழக்குப் பகுதியில் இருந்து ஆயுதப்படையினரை அகற்ற வேண்டாம்' என்று கூறும் பவுத்த மத குருமார்களுடன் அல்ல, சிறந்த இலங்கைக்கான பவுத்த சங்கத்தை சார்ந்த பவுத்த தேரர்களோடு சேர்ந்துதான் பயிற்சிப் பட்டறை நடைபெறுகிறது. ஒட்டுமொத்த பவுத்த தேரர்களும் இனவாதிகள் என நினைப்பது தவறு.

தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்கு தீர்வு காண வேண்டும் என்றால் தென் இலங்கை அரசியல்வாதிகள், சிவில் சமூகங்கள், பவுத்தமத பீடாதிபதிகள் போன்ற தரப்புகளுடன்தான் பேசவேண்டும். அரசியலில் அ, ஆ தெரிந்தவர்களுக்கு இது நன்கு விளங்கும். மருத்துவர் வல்லிபுரநாதனுக்கு மட்டும் தெரியாமல் இருக்கிறது. மேற்குலக நாடுகள் சரி, இந்தியா சரி, ஈழத்தமிழர் சார்பாக இலங்கை அரசோடு பேசப் போவதில்லை. தமிழர்கள்தான் தென்னிலங்கையோடு பேச வேண்டும். வேறு வழியில்லை. நாங்கள் நம்பியிருந்த இந்தியா கூட இன்று கைவிரித்து விட்டது. "எங்களால் இலங்கை அரசை வற்புறுத்தத்தான் முடியும். நீங்கள்தான் ஒற்றுமையாக இருந்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்" என கடந்த மாதம் தன்னைச் சந்தித்த தமிழ் அரசியல் தலைவர்களுக்கு இந்திய தூதுவர் சந்தோ் ஜா சொல்லியிருக்கிறார். உண்மையில், சுற்றி வளைக்காமல் இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படையாகச் சொன்ன இந்தியத் தூதுவரைக் கட்டாயம் பாராட்டத்தான் வேண்டும்.



மீண்டும் பெப்ரவரி 16, 2024 அன்று யாழ்ப்பாணத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த இந்திய தூதுவர் "பொருளாதாரச் சிக்கல் தீர்ந்தால் அரசியல் சிக்கலும் தீர்ந்துவிடும்"என்று சொல்லி யிருக்கிறார். பொருளாதாரச் சிக்கல் எப்போது தீரும்? அதை அவர் சொல்லவில்லை.

மார்ச் 14, 2015 அன்று இந்திய நிதியுதவியுடன் யாழ்ப்பாண கலாச்சார மையத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவில் பேசிய பிரதமர் மோடி "ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அமைதி, ஒற்றுமை மற்றும் நல்லெண்ணம் அவசியம்" எனக் குறிப்பிட்டார். மேலும் ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு "கூட்டுறவு கூட்டாட்சி" அவசியம் என்று இலங்கை நாடாளுமன்றத்தில் தான் முன்னர் கூறியதை நினைவு கூர்ந்தார்.

**At the ceremony to lay the foundation stone of the India-funded Jaffna Cultural Centre, Modi said that Peace, Unity and Goodwill are essential for a country's development, and recalled that he told the Lankan parliament that "cooperative federalism" is necessary for the all round development of a country.) (https://www.newindianexpress.com/world/2015/Mar/14/modi-bonds-with-lankan-tamils-with-aplomb-728578.htm)**

08 பெப்ரவரி, 2021 அன்று இலங்கை பிரதமர் மகிந்த இராசபக்ச, அவரது அமைச்சரவை சகாக்கள், அதிகாரிகள் என பத்துப் பேர் அடங்கிய உயர் நிலைக் குழு ஒன்று நான்கு நாள் அரசு முறைப் பயணமாக இந்தியாவுக்கு சென்றிருந்தது. அப்போது "இலங்கையில் உள்ள தமிழர்களுக்குச் சம உரிமை அளித்து அவர்கள் அமைதியாக வாழ வழிவகை செய்திட வேண்டும்" என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி பிரதமர் இராசபக்சவிடம் வலியுறுத்தி இருந்தார். தமிழர்களுக்கு உரிய நீதி மற்றும் மரியாதை வழங்கப்பட வேண்டும். இலங்கை தமிழ் மக்களின் இந்த எதிர்பார்ப்புகளை இலங்கை அரசு உணரும் என நான் நம்புகிறேன்" என்றும் பிரதமர் மோதி குறிப்பிட்டார். **(https://www.bbc.com/tamil/india-51425962)**

மீண்டும் 21 பெப்ரவரி 2021 அன்று சென்னையில் பல்வேறு புதிய திட்டங்களைத் தொடக்கி வைத்துப் பேசிய பிரதமர் மோடி "ஒன்றுபட்ட இலங்கையில் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான இலங்கைத் தமிழ் சமூகம் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் வேட்கைக்கும் இடமளிக்கும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான உங்கள் முயற்சிகளில் நாங்கள் இலங்கை உடன் நிற்கிறோம்.) ஈழத் தமிழர்கள் சமத்துவம், சமநீதி, அமைதி, கண்ணியத்துடன் வாழ மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்" என்றார்.

**"We stand with [Sri Lanka] in your efforts to build a future that accommodates the aspirations of all sections of society, including the Sri Lankan Tamil community, for a life of equality, justice, peace and dignity in a united Sri Lanka." ( Read more at: https://tamil.oneindia.com/news/chennai/centre-ensures-tamils-in-srilanka-live-with-equality-justice-peace-and-dignity-pm-modi-411979.html)**

பெப்ரவரி 10, 2024 இல் கம்பன் விழாவில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் சென்ற தமிழ்நாடு பாஜக இன் மாநிலத் தலைவர் அண்ணாமலை "இலங்கைத் தமிழர்களை மோடி நெஞ்சத்தில் சுமந்து கொண்டிருக்கிறார்" என உறுதிபடக் கூறினார். இந்தப் புகழாரம் இலங்கைத் தமிழர்களை மகிழ்விக்கச் சொல்லப்பட்டதாகும். பிரதமர் மோடி தமிழ்நாட்டில் நடைபெறும் கூட்டங்களில் தமிழில் "வணக்கம்" சொல்வதும் திருக்குறளை மேற்கோள் காட்டிப் பேசுவது பாஜ கட்சியை தமிழ்நாட்டு வாக்காளரிடம் விற்பனை செய்யப் போடப்படும் வேடம் மட்டுமே.

இந்தியாவில் கூட மோடியின் பாஜக ஆட்சிக்கும் ஸ்டாலினின் திமுக ஆட்சிக்கும் அண்மைக் காலமாக அரசியல் மற்றும் சித்தாந்தப் போர் மும்மரமாக நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு வாரத்தில் பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு 4 முறை வந்து போய்விட்டார். ஒன்றிய அரசின் மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடக்கி வைக்க அவர் வருகை தந்தாலும், உண்மையான நோக்கம் இந்தியாவின் 18 ஆவது மக்களவைக்கான தேர்தல் தொடர்பானது. இந்தத் தேர்தல் ஏப்ரல் அல்லது 2024 மாதங்களில் நடைபெறயிருக்கிறது.

தில்லி அரசு திட்டமிட்டு தமிழ்நாடு அரசை வஞ்சிக்கிறது என்ற எதிர்ப்புக் குரல், தமிழ்நாடு மாநில பாஜகட்சி நீங்கலாக, தமிழ்நாடு முழுதும் எதிரொலிக்கிறது. சென்ற ஆண்டு தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப் பெருக்குக் காரணமாக பலத்த இழப்பு ஏற்பட்டது. குறிப்பாக தமிழ்நாட்டு வேளாண்மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இந்த இழப்புக்களைக் காரணம் காட்டி தமிழ்நாடு அரசு ரூபா 37 ஆயிரம் கோடி நிவாரண நிதியுதவியைத் மோடி அரசிடம் கேட்டது. ஆனால் மோடி அரசு தமிழ்நாட்டுக்கு ஒரு ரூபா கூடத் தரமுடியாது என்று கையை விரித்துவிட்டது.

மோடியின் ஆட்சியில் தமிழர்கள் மதிக்கப்படுவதில்லை. திமுக அரசையும் அதன் ஆதரவாளர்களையும் மோடி எதிரிகாயகவே நினைக்கிறார். இதன் நீட்சியாக இலங்கைத் தமிழர்களையும் மோடி அரசு மதிப்பதில்லை. 1987 இல் எழுதப்பட்ட இலங்கை - இந்திய உடன்பாட்டை நடைமுறைப்படுத்த காங்கிரஸ் அரசு போலவே மோடி அரசும் அக்கறை காட்டவில்லை. இலங்கைத் தமிழர்கள் என்ன நடந்தாலும் இந்தியாவோடு நட்புப் பாராட்டுவார்கள் அவர்களுக்கு வேறு தேர்வில்லை என மோடி அரசு நினைக்கிறது. ஒரு கலாசார மண்டபம், யாழ்ப்பாணப் பன்னாட்டு விமான நிலையம், நாகபட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை போன்றவற்றைச் செய்து கொடுத்தால் போதும் என மோடி அரசு நினைக்கிறது.

இன்று மோடியின் நெருங்கிய நண்பர் அதானி இலங்கையில் பல நூறு மில்லியன் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்துள்ளார். தமிழர் நலனைவிட அதானியின் முதலீடுகளை பாதுகாப்பதில் மோடி அதிக அக்கறை கொண்டுள்ளார்.

"ஒன்றுபட்ட இலங்கையில் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான இலங்கைத் தமிழ் சமூகம் உட்பட சமூகத்தின் அனைத்து பிரிவினரின் வேட்கைக்கும் இடமளிக்கும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான உங்கள் முயற்சிகளில் நாங்கள் ஐஇலங்கைஸ உடன் நிற்கிறோம்." என்ற பிரதமர் மோடியின் உறுதி மொழியை இலங்கைத் தமிழர்கள் நம்ப அணியமாக இல்லை. இலங்கைக்கான இந்திய தூதுவர் சொன்ன செய்தியே இந்தியாவின் நிலைப்பாடாகும். பிரதமர் மோடி எம்மை மகிழ்விக்க மீண்டும் மீண்டும் பசப்பு வார்த்தைகளைப் பேசுகிறார்.

இலங்கை தமிழர்கள் சமத்துவம், சமநீதி, அமைதி, கண்ணியத்துடன் வாழ நடவடிக்கை எடுப்போம் என பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதிகள் காற்றோடு காற்றாகக் கரைந்துவிட்டன. இப்படிச் சொல்வதால் நாம் இந்தியாவைப் பகைக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் இந்தியாவோடான உறவு பற்றி நாம் மீளாய்வு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதுதான் இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

## கடந்தவையும் கடப்பவையும் – (102)

*வீடுதிரும்பும் வேளையிலே மந்திகைப் பாதையிலே*
*வீதியோரம் நிறுத்தப்பட்ட வாகனத்தில் இருந்தபோது*

*வழிப்போக்கர் ஒருவரையும் தெரியாது - ஆனால்*
*பெரிதாக வளர்ந்திருந்த மரத்தினைப் பார்த்தபோது*

*இறுதியாக இடம்பெயர்ந்த வேளையிலே - அவ்வழியில்*
*உறுதியாக இருந்த மரங்கள் மனதில்வர*

*அளப்பரிய மரங்களின் பயன்களும் - அங்கு*
*பிரச்சினைக் காலத்திலவை உதவிய விதங்களும்*

*மனம் மறவா பெரும் நினைவாய் இன்றும் - அன்று*
*எம்மிடத்து*

*பனைகளும் தென்னைகளும் வேறுபல வலியமரங்களும்*
*துணையாக இருந்தன பதுங்கு குழியமைக்க*

*அடர்ந்த பெருமரங்கள் ஆகாய ஆபத்துக்களிலிருந்து*
*மறைந்து கொள்ளவும் பறந்துவரும் சன்னங்களின்*

*விரைந்துவரும் வேகத்தைக் குறைத்துக்கொள்ளவும்,*
*சாரைசாரையாய் ஓடிவந்து வீழ்ந்து இருந்தோர்க்கு*

*குளிர்ந்த நிழலைக் கொடுக்கவும் உதவின - அன்றும்*
*செறிந்த இருளை ஊடறுத்து வந்த*

*சிவப்புப் பொறிகளைத் தான்வாங்கி*
*கனக்கப்பேரைக் காத்த மரம் நினைவில் வர*

*மறுபுறத்தில் எரிபொருளுக்காய் வரிசையிலே காத்திருந்தோர்*
*வரிசையையும் பார்த்தபோதும் அன்று போகுமிடம் அறியாது*

*சிறியவரும் பெரியவரும் வயது முதிர்ந்தவரும்*
*பதறியடித்துப் பலவிடத்தில் திரிந்ததுவும்*

*வன்னிக்குப் போகவென வழிகாட்டி வந்தவரின்*
*பின்னுக்குச் சென்றதுவும் இன்றுபோல்*

*கும்மிருட்டில் ஓடோடி வந்தவரை - நிதானமாய்*
*நின்றுகொள்ள விடாமல் குண்டுகள் துரத்தின*

*வழமைபோல் வலிகாமம் போகவில்லை - அங்கெல்லாம்*
*ஒருநாள் இடப்பெயர்வால் மக்களெல்லாம் இடம்பெயர்ந்தார்*

*வடமராட்சி மக்களை நோக்கிய தாக்குதல் உக்கிரம் - போக*
*இடமின்றி இருந்தபோது வாகனம் ஒன்று*

*மாலிசந்தி வீதியில் வந்து நின்று இனி இங்கு இருக்கேலாது*
*ஏறச்சொல்லி இடங்கொடுக்க போகுமிடம் தெரியாது*

*ஏறுதற்குத் தயங்கிடவே "கிளாலிவரை போகலாம்*
*ஏறுங்கள்" என்று சொல்ல ஆளையாள் பார்க்கின்றோம்*

*"கிளாலியும் தெரியாது வன்னியும் தெரியாது*
*பிழையாகிப் போடும்" என்று சொன்னார் பாட்டி*

*"இடுக்கண் களையும் நட்பொன்று உண்டங்கு வன்னியிலே - வந்த*
*நெருக்கடிக்கு வழியிதுதான்" என்று சொல்ல*

*பாட்டியின் கதையைப் புறம்தள்ளி ஏறியாச்சு*
*கூட்டிச்செல்வோர் வாகனத்தில் நெருக்கடிதான் - ஆனாலும்*

*வடிவாகத் தெரியாத வழிகளிலே வளைந்துநெளிந்து*
*கவனமாகப் போகிறது வாகனம்........(தொடரும்)*

*-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --*

# பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டிக் கொள்ளுமா என்பதை காலம் தான் பதில் சொல்ல வேண்டும்

(கட்டுரையாளர்: வி.எஸ். சிவகரன்)






தமிழரசுக் கட்சியின் நீதிமன்ற விவகாரம் மேலும் சில காலம் நீடிக்கும் நிலை காணப்படுகிறது. எந்த விடயமாக இருந்தாலும் சங்கதிகள் சந்திக்கு வந்து விட்டால் சதா நெருக்கடி தான் இவற்றை அறிவார்ந்து அணுகுதலே நிலையான தீர்வை நோக்கி நகர முடியும்.

அவை சாத்தியமா வழிப் போக்கர்களாலும் சந்தர்ப்ப வாதிகளாலும் தான் அரசியல் சாக்கடை எப்போதும் சூழ்ந்து கிடக்கும். என்பது மரபற்ற விதி.

29ம் திகதி வழக்கு விவகாரம் இரக்கத்தின் அடிப்படையில். வழக்காளிகள் மூலம் வழக்கை மீள பெற்றிருக்க வேண்டும். அது தான் கட்சி நலனுக்கு உகந்த தாக அமைந்திருக்கும். 21 மற்றும் 27 ஆம் திகதிகளில் நடைபெற்ற மாநாட்டு தீர்மானத்தை நடைமுறைப்படுத்த கோரியுள்ளனர். வழக்காளிகள் அதில் என்ன தவறு எல்லோரும் "ஒரே கட்சிக்காரர்கள் தானே" என்ற எண்ணம் தேர்தல் நிறைவடைந்த மறு நிமிடமே வந்திருக்க வேண்டும். எதிரியாகவோ துரோகியாகவோ நோக்குவது விமர்சிப்பது, இணைந்து பயணிப்பதற்கு சங்கடத்தை ஏற்படுத்தும்.

சிறிதரனுக்கு வாக்களித்தவர்கள் தேசியவாதிகள் அல்லது தியாகிகள் என்றும் சுமந்திரனுக்கு வாக்களித்தவர்கள் துரோகிகள் அல்லது கட்சிக்கு எதிரானவர்கள் என்றும் ஒரு விமர்சன விம்பம் திட்டமிட்டு கட்டமைக்கப்படுகிறது. அண்மையில் ஒரு துயர் பகிர்வு நிகழ்வில் சுமந்திரனுக்கு வாக்களித்த ஒரு முன்னாள் போராளி மிகவும் வேதனைப்பட்டார்.தாங்கள் இப்போது துரோகி பட்டியலில் இருப்பதாக இந்த நிலை எல்லா மாவட்டங்களிலும் தொடர்கிறது.

அறிஞர் அண்ணா இறந்த பின்னர் தலைமை போட்டியில் சூழ்ச்சிகரமாக வெற்றி பெற்ற கருணாநிதியை மிக கடுமையாக எதிர்த்த பேராசிரியர் அன்பழகன் பின்னர் நான் ஏன் கருணாநிதியை தலைவராக ஏற்றேன் என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதை இவர்கள் முதலில் படிக்க வேண்டும்.

"தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியமும் அவற்றை விரைவில் திருத்திக் கொள்வதற்கான வலிமையும் தான் வெற்றி பெறுவதற்கான குணங்களாகும்" என்கிறார் லெனின். ஆகவே உள்வீட்டுப் பிரச்சினையை பேசி தீர்ப்பது தான் உகந்தது.

இரண்டு தரப்பின் ஏட்டிக்குப் போட்டி வாதங்களும் இரண்டக செயலும் ஒருபோதும் கட்சிக்கும் இனத்திற்கும் நன்மை பயக்காது. என்பதை அவர்களும் புரியாமல் இல்லை. ஆனால் அவர்களின் வீறாப்பு விடாப்பிடி தன் நிலை வாத மேட்டிமை போக்கு இன உரிமைக்குள் சிந்திக்க விடாமல் சினம் கொண்டு அலைகிறது. அது பெரும் விளைவை ஏற்படுத்தும்.

எனவே கட்சியில் மீண்டும் புதிய தெரிவை கோருவது என்பது பெரிய விளைவை ஏற்படுத்தலாம். அதை அவர்கள் ஏன் புரிந்து கொள்ளவில்லை என்பது தான் பெரிய ஆச்சரியம்.

இரண்டு துருவங்களாக கட்சி உள்ளபோது எப்படி மீள் தெரிவை கோருவது தற்போது உள்ள மாவட்ட. தொகுதி கிளைகளையா அல்லது வட்டார கிளைகளில் இருந்தா பொதுக்குழுக்கு தெரிவு செய்வது எனும் வாதம் எழலாம் சிறிதரன் தரப்பு வட்டார கிளைகளில் இருந்து தெரிவு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தலாம்.

ஏனெனில் பல கிளைகள் தெரிவு செய்த முறை தவறு என விமர்சனங்கள் உண்டு திருகோணமலை, கொழும்பு, காங்கேசன்துறை தொகுதி இதில் யாழ்ப்பாணம், தொகுதி மானிப்பாய். மானிப்பாய் தொகுதிகள் பல வருடங்களாக தெரிவு செய்யப்படாமலே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்ல ஏலவே பொதுக்குழுவில் உறுப்புரிமை அற்றவர்கள் உறுப்புரிமை புதுப்பிக்காதவர்கள் எல்லாம் வாக்களித்துள்ளனர் இந்த விவகாரம் உட்கட்சி தேர்தலில் மேலெழும் ஆகவே சகல உறுப்புரிமை சீர் செய்யப்பட்டு இலகுவாக தேர்தல் நடாத்த முடியுமா?

தற்போது நீதிமன்றம் நாடியது போல் இலகுவாக வட்டார அளவிலே நீதிமன்றம் போகக்கூடிய ஆபத்து எழலாம்.

இதைவிட இன்னொரு பேராபத்து உண்டு நீதிமன்றில் இந்த விவகாரங்களை முடித்து வெளியேறிய பின்னர் யாப்பின் படி கடந்த ஐந்து ஆண்டுகளாக உட்கட்சி தேர்தல் நடைபெறவில்லை என்று யாராவது தேர்தல் ஆணைக்குழுக்கு போனால் கட்சியின் நிலை என்னவாகும். வரும் தேர்தலில் போட்டியிட சின்னமும் இல்லாமல் போகலாம். பெயரளவில் சனாதிபதி சட்டத்தரணிகளாக இருப்பதில் அர்த்தமில்லை. இந்த ஆபத்துக்களை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஏனெனில் யாப்புக்கு எதிராக நீதிமன்றம் போனவர்கள் தேர்தல் ஆணைக்குழுக்கு போகமாட்டார்கள் என்று சொல்லமுடியாது.

வெறுமனே ஊடகச் செய்திகளுக்காக உணர்ச்சிவசப்பட்டு வழக்கை உடைத்தெறிவோம் என்று கூறுவதும் கடந்த 23ம் திகதி கிளிநொச்சியில் நடந்த கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் மிகவும் கோபப்பட்டு எடுத்தெறிந்து வார்த்தைகளை அளவற்று அள்ளி வீசியதாக கலந்து கொண்ட ஒரு மூத்த உறுப்பினர் கவலை தெரிவித்தார். இவை தலைமைக்குரிய உயர்ந்த பண்பல்ல "அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கியல்பு" என்கிறார் வள்ளுவர். இக்கூற்றில் இவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஆகவே இவ்விதமான முரண்பாடுகள் எல்லாம் வருவதை தவிர்க்க வேண்டும் என்று உட்கட்சி தேர்தலிலுக்கு முன்னதாகவே எமது சிவில் அமைப்பின் ஊடாக ஒரு முயற்சி எடுத்தோம். கடந்த வாரம் பத்தி எழுத்தாளர் நிலாந்தன் அவர்கள் சிவில் சமூகத்தின் வகிபங்கின்மை பற்றி எழுமானமாக எழுதியிருந்தார்.

அது உண்மையில்லை இவர்களது. உட்கட்சி தேர்தலால் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டு தோல்வியடைந்தார் கட்சியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் என சிறிதரன் சுமந்திரன் ஆகிய இருவரிடமும் மிகத்தெளிவாக தெரிவித்தோம் ஒரு கூட்டு கலந்துரையாடலுக்கு வருமாறு அழைத்தோம் அதில் சுமந்திரன் உரையாட வருவதற்கு சம்மதம் தெரிவித்தார் சிறிதரன் சம்மதம் தெரிவிக்கவில்லை.

இந்த முயற்சியை யாழில் உள்ள ஒரு பேராசிரியர் ஊடாகவும் முன்னெடுத்தோம் பயன் தரவில்ல்லை.

இவ்விதமான முயற்சியை முன்னெடுக்குமாறு மாவை சேனாதிராஜா உட்பட பலர் எம்மை கேட்டிருந்தனர் ஏனெனில் கடந்த பத்து ஆண்டுகளாக இவ்விதமான ஒருங்கிணைப்பு முயற்சியில் ஈடுபட்டு வருவதனால் வேட்பாளர்கள் மட்டும் இன்றி கட்சியின் வேறுபல முக்கியஸ்தர்களுடனும் உரையாடியும் எதுவும் பயன் தரவில்லை. ஆகவே நாங்கள் இந்த விளைவை ஏலவே புரிந்து கொண்டு தான் இந்த முயற்சியை எடுத்தோம் என்பது நிலாந்தனும் அறியாமல் இல்லை.

தற்போது திருகோணமலை ஆயரால் எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்திய தூதரகம், நல்லை ஆதீனம், எடுத்த முயற்சிகளும் காலம் கடந்த வையே ஏறக்குறைய அதிமுகவின் ஓபிஎஸ், ஈபிஎஸ் அணிகள் போல் உருவாகிவிட்டன கட்சிக்குள் அணிகள் உருவாகினால் ஒருபோதும் உருப்பட வாய்ப்பில்லை இந்த உட்கட்சி விமர்சனங்கள் எதிர்காலத்திலும் அதிகரிக்கலாம் அவை வரும் தேர்தலில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

தமிழரசுக்கட்சியின் குழு முரண்பாடுகள் தமிழ் மக்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். ஏனெனில் தமிழ்மக்களுக்கு மாற்றுத் தெரிவுக்கு வேறு கட்சிகள் இல்லை. உள்ள கட்சிகளும் வட்டார சிந்தனையில் உள்ள கட்சிகளே அவர்களால் வடகிழக்கை பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. என்பது யாவரும் அறிந்ததே தேர்தல் களத்தில் தொண்டர்கள் ஒருமித்த கருத்துடன் இணைந்து செயற்படக்கூடிய ஏது நிலை காணப்படுவதாக தெரியவில்லை.

எனவே இந்த உள்ளக விவகாரத்தால். அரச ஆதரவு கட்சிகளுக்கும் பிரதேசவாதம் பேசும் அணிகளுக்கும் வாய்ப்பாக அமையலாம்.

இந்த முரண்பாட்டை கட்சிக்கு வெளியே இருந்து ஊக்குவிக்கும் சில ஊடக தரப்புக்களும் சில வெளிநாட்டு அமைப்புக்கள் தனி நபர்கள் ஆகியோர் இந்த சித்து விளையாட்டை நிறுத்திக் கொள்வது நல்லது இதனால் பாதிக்கப்படுவது சுமந்திரன் சிறீதரன் அல்ல தமிழினம் என்பதை பண முதலீட்டாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டிக் கொள்ளுமா என்பதை காலம் தான் பதில் சொல்ல வேண்டும். ஆனாலும் காலம் இடை வெளியை நிரப்பும். தேசம் தன் தலைமையை தீர்மானிக்கும்.

தொகுப்பு: -எஸ்.றொசேரியன் லெம்பேட்

# அன்பின் தொனி - 723

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை -** Grace of God

**நீதிமான்களோ சிங்கத்தைப்போலே தைரியமாயிருக்கிறார்கள்.**

ஒருவனும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப்போகிறார்கள்; நீதிமான்களோ சிங்கத்தைப்போலே தைரியமாயிருக்கிறார்கள். தேசத்தின் பாவத்தினிமித்தம் அதின் அதிகாரிகள் அநேகராயிருக்கிறார்கள்; புத்தியும் அறிவுமுள்ள மனுஷனாலோ அதின் நற்சீர் நீடித்திருக்கும். ஏழைகளை ஒடுக்குகிற தரித்திரன் ஆகாரம் விளையாதபடி வெள்ளமாய் அடித்துக்கொண்டுபோகிற மழையைப்போலிருக்கிறான். வேதப்பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் துன்மார்க்கரைப் புகழுகிறார்கள்; வேதப்பிர மாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களோ அவர்களோடே போராடுகிறார்கள். துஷ்டர் நியாயத்தை அறியார்கள் கர்த்தரைத் தேடுகிறவர்களோ சகலத்தையும் அறிவார்கள். இருவழிகளில் நடக்கிற திரியாவரக்காரன் ஐசுவரியவானாயிருந்தாலும், நேர்மையாய் நடக்கிற தரித்திரன் அவனிலும் வாசி. வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவன் விவேகமுள்ள புத்திரன்; போஜனப்பிரியருக்குத் தோழனாயிருக்கிறவனோ தன் தகப்பனை அவமானப்படுத்துகிறான். அநியாய வட்டியினாலும் ஆதாயத்தினாலும் தன் ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறவன், தரித்திரர்பேரில் இரங்குகிறவனுக்காக அதைச் சேகரிக்கிறான். வேதத்தைக் கேளாதபடி தன்செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது. உத்தமர்களை மோசப்படுத்தி, பொல்லாத வழியிலே நடத்துகிறவன் தான் வெட்டின குழியில் தானே விழுவான்; உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள்.

**நீதிமான்கள் களிகூரும்போது மகா கொண்டாட்டம் உண்டாகும்.**

ஐசுவரியவான் தன் பார்வைக்கு ஞானவான்; புத்தியுள்ள தரித்திரனோ அவனைப் பரிசோதிக்கிறான். நீதிமான்கள் களிகூரும்போது மகா கொண்டாட்டம் உண்டாகும்; துன்மார்க்கர் எழும்பும்போதோ மனுஷர் மறைந்துகொள்ளுகிறார்கள். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்; தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான். ஏழை ஜனங்களை ஆளும் துஷ்ட அதிகாரி கெர்ச்சிக்கும் சிங்கத்துக்கும் அலைந்துதிரிகிற கரடிக்கும் ஒப்பாயிருக்கிறான். பிரபு புத்தியீனனாயிருந்தால் அவன் செய்யும் இடுக்கண் மிகுதி; பொருளாசையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான். இரத்தப்பழிக்காக ஒடுக்கப்பட்டவன் குழியில் ஒளிக்க ஓடிவந்தால், அவனை ஆதரிக்கவேண்டாம். உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்; மாறுபாடான இருவழியில் நடக் கிறவனோ அவற்றில் ஒன்றிலே விழுவான். உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்; மாறு பாடான இருவழியில் நடக்கிறவனோ அவற்றில் ஒன்றிலே விழுவான். தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தால் திருப்தியாவான்; வீணரைப் பின்பற்றுகிறவனோ வறுமையால் நிறைந்திருப்பான். உண் மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்.

**கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்**

முகதாட்சிணியம் நல்லதல்ல, முகதாட்சிணியமுள்ளவன் ஒரு துண்டு அப்பத்துக்காக அநியாயஞ்செய்வான். வன்கண்ணன் செல்வனாகிறதற்குப் பதறுகிறான், வறுமை தனக்கு வருமென்று அறியாதிருக்கிறான். தன் நாவினால் முகஸ்துதி பேசுகிறவனைப்பார்க்கிலும், கடிந்துகொள்ளுகிறவன் முடிவில் அங்கீகாரம் பெறுவான். தன் தகப்பனையும் தன் தாயையும் கொள்ளையிட்டு, அது துரோகமல்ல என்பவன் பாழ்க்கடிக்கிற மனுஷனுக்குத் தோழன். பெருநெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான்; கர்த்தரை நம் புகிறவனோ செழிப்பான். தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான். தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்; தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும். துன்மார்க்கர் எழும்பும்போது மனுஷர் மறைந்து கொள்ளுகிறார்கள்; அவர்கள் அழியும்போதோ நீதிமான்கள் பெருகுகிறார்கள். **- நீதிமொழிகள் 28: 1-28**

தொடரும்...

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு சர்வதேச நீதிபதிகள், முன்னிலையில், அல்லது சர்வதேச கண்காணிப்பில் மீள் விசாரணை வேண்டும் - அரசியல் ஆய்வாளர், சட்டத்தணி சி.அ.யோதிலிங்கம் கோரிக்கை

**ரா**ஜீவ் காந்தி கொலை வழக்கு சர்வதேச நீதிபதிகள், முன்னிலையில், அல்லது சர்வதேச கண்காணிப்பில் மீள் விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என அரசியல் ஆய்வாளரும் சட்டத்தணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய்ய இயக்குநருமன சி.அ. யோதிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் அவர் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

சாந்தனின் மரணச் சடங்கு சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. இதனை சிறப்பாக செய்வதற்கு மூன்று தரப்புகள் சிறப்பாக பங்களிப்பு செய்திருக்கின்றன.

ஒன்று மரண நிகழ்வைப் பொறுப்பெடுத்த குரலற்றவர்களின் குரல் அமைப்பு. இரண்டாவது குடும்பத்தவர்கள், மூன்றாவது சாந்தன் அவர்களுடைய சட்டத்தரணி ஆகிய புகழேந்தி. உண்மையில் இந்த மூன்று தரப்பும் தான் சாந்தன் அவர்களுடைய மரண சடங்குகள் சிறப்பாக நடப்பதற்கது பிரதானமாக பங்களித்தவர்கள் என்று கூறலாம்.

சாந்தன் அவர்களுடைய மரணம் ஒரு இயற்கை மரணம் என்று கூறி விட முடியாது. அது ஒரு செயற்கையான மரணம் அது தவிர்த்து இருக்க வேண்டிய மரணம். அதுவும் சிறையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தவர்.

சிறையில் படாத கஸ்டங்கள் இல்லை. சிறையில் சுகதேகியாக இருந்தவர் பின்னர் சிறப்பு முகாமில் மரணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த மரணத்தைப் பொறுத்த வரையிலே நான்கு தரப்புகள் பொறுப்பாளிகள்.

முதலாவது இந்திய மத்திய அரசு. இந்திய மத்திய அரசு நீதிமன்றம் விடுதலை செய்தத பின்னர் அவர்களை விரைவாக இலங்கைக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்க வேண்டும்.

இந்தியாவினுடைய வெளிநாட்டு அமைசினுடைய உத்தியோகஸதர்கள், வெளிநாட்டு அமைச்சினுடைய செயலாளர், வெளிநாட்டு அமைச்சருக்கும் இலங்கைக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உண்டு. அடிக்கடி அவர்கள் வந்து போகின்ற நிலைமைகளும் உண்டு.

இதனைப் பேசிய தீர்ப்பதற்கு அவர்களுக்கு ஒரு நாளும் நேரம் கிடைத்திருக்காது என்று நாங்கள் ஒருநாளும் கூறி விட முடியாது.

அவர்களுக்கு அங்கே விருப்பம் இருக்கவில்லை என்பதுதான் உண்மை என நான் நினைக்கிறேன்.

சாந்தன் அவர்கள் உயிருடன் இலங்கைக்கு செல்வதை இந்திய மத்திய அரசு விரும்பியிருக்கவில்லை ஏன்பதுதான் இதற்க்கு பின்னால் இருந்திருக்குன்ற செய்தி என்று நான் நினைக்கிறேன்.

இரண்டாவது பொறுப்பு தமிழ்நாடு மாநில அரசு. தமிழ்நாட்டு மாநில அரசை பொறுத்தவரையில அதற்க்கு இரண்டு பொறுப்புகள் இருந்தன.

ஒன்று இந்தியா மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து சாந்தனை விரைவாக இலங்கைக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது.

சிறப்பு முகாம் தமிழ்நாடு அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற முகாம்.

ஆகவே அங்கே சாந்தன் அவர்களை கவனமாக பேணுகின்ற செயற்பாட்டை அவர்கள் செய்திருக்க வேண்டும்.

இந்த இரண்டு பொறுப்புகளிலிருந்தும் தமிழ்நாடு அரசு தவறியிருக்கிறது என்று தான் கூற வேண்டும்.

ஈழத் தமிழர்களது போராட்டத்தோடு தங்களை தொடர்பு படுத்துகின்ற கட்சி என்று தங்களை அடையாளப் படுத்துகின்ற, திமுக கட்சி ஆட்சியில் இருக்கின்ற ஒரு அரசாங்கம்.

இந்த விடயத்தில் கவனம் செலுத்தாதது மிகவும் கவலைக்குரியது என்பது எங்களுடைய அபிப்பிராயம்.

அங்கே சிறையை விட மோசமாக சிறப்பு முகம் இருந்தது என்று சொல்லி கூறப்படுகிறது.

சிறையிலாவது அங்கு ஒரு ஒழுங்கு விதிகள் இருக்கும். அந்த ஒழுங்கு விதிகளின் படி தெரிந்தவர்கள், உறவினர்கள் சென்று பார்க்கக்கூடிய வசதிகள் அங்கு இருக்கும்.

உடற்பயிற்சி செய்வதற்கான வசதிகள் இருக்கும் மருத்துவ கவனிப்பு இருக்கும்.

ஏதாவது தவறு நடந்தாலும் அரசு தலையிடக் கூடிய சூழல் அங்கு இருக்கும்.

இவ்வாறான ஒழுங்கு விதிகள் எதுவும். சிறப்பு முகாமில் இருக்கவில்லை.

சிறப்பு முகாமில் நாள் முழுதும் அறைக்குள் அடைக்கப்பட்ட நிலமைதான் காணப்பட்டிருக்கிறது.

மருத்துவ கவனிப்பு என்பது அங்கு. கொஞ்சமும் இருக்கவில்லை.



அதைவிட உடற்பயிற்சி செய்வதற்கான வாய்ப்புகள் எதுவும் கொடுக்கப்படவில்லை.

தெரிந்தவர்கள் உறவினர்கள் வந்து சந்திப்பதற்கான ஒழுங்குகள் கூட அங்கு செய்து கொடுக்கப்படவில்லை. மிக மோசமான ஒரு வதை முகமாகவே சிறப்பு முகாம் இருந்திருக்கிறது.

சிறப்பு முகாமில் அவர்களை. ஒழுங்ங கவனிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது.

அதைவிட போதைவஸ்து காரர்களுடன் அவர்களை ஒன்றில் வைத்திருந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

சாந்தன் அவர்களைப் பொறுத்தவரையிலே அவர் ஒரு அரசியல் கைதி.

அரசியல் கைதி என்ற வகையிலே அவரை சிறப்பாக வேறு இடத்தில் வைத்து கவனிக்க வேண்டிய பொறுப்பு ஒன்று அவர்களுக்கு இருந்தது. அந்தப் பொறுப்பை அது செய்யவில்லை.

ஆகவே இந்த விடயத்தில் தமிழ்நாடு மாநில அரசுக்கும் பாரிய பொறுப்பு இருக்கிறது என்றே நான் நினைக்கின்றேன்.

மூன்றாவது தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் அரசியல் தலைமகளுக்கு மத்திய அரசோடும் தொடர்பு இருக்கிறது மாநில அரசோடும் தொடர்பு இருக்கிறது. இலங்கை அரசோடும் தொடர்பு இருக்கிறது.

இந்த மூன்று தரப்புகளுடனும் கதைத்து அவர்களுக்கான அழுத்தங்களைக் கொடுத்து சாந்தனை இலங்கைக்கு கொண்டு வருவதற்க்கான செயற்பாடுகளை செய்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் அது தொடர்பாக இந்த செயற்பாட்டையும் முன்னெடுக்கவில்லை.

இது தொடர்ச்சியாக செய்ய வேண்டிய ஒரு செயல்பாடு.

அவர்கள் அது தொடர்பாக எந்தவித அக்கறையும் செலுத்தவில்லை.

கடைசியாக. சாந்தனுடைய குடும்பத்தவர்கள் டக்ளஸ் தேவானந்தாவிடம் சென்ற பின்னர் தான் ஸ்ரீதரன் மனோகணேசனை அழைத்துச் சென்று ரனில் விக்கிரமசிங்காவை சந்தித்து பேசி இருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே அதற்கான சம்மதத்தை தெரிவித்திருக்கின்றார்.

இதனை முன் கூட்டியே செய்திருந்தால் சாந்தன் அவர்களை உயிரோடு இலங்கைக்கு கொண்டு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்திருக்கும்.

இங்கு வந்ததன் பின்னர் இறந்திருந்தால் பெற்றோர்களோடு இருந்து இறந்திருக்கின்றார் என்ற நிம்மதியாவது சாந்தனுக்கு கிடைத்திருக்கும்.

அது கூட கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கவில்லை.

அந்த வகையிலே நான்காவது பொறுப்பு இலங்கை அரசாங்கத்தினுடையது.

இலங்கை அரசாங்கம் சாந்தன் இலங்கை பிரஜை என்ற வகையிலே நீதி மன்றத்தால் விடுதலை செய்த பின்னர் சாந்தனை இலங்கைக்கு கொண்டு வர வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் இதில் அக்கறை செலுத்தவில்ல ஆகவே இந்த நான்கு தரப்பும் சேர்ந்துதான் சாந்தனை கொலை செய்து விட்டார்கள் என்றுதான் குறிப்பிட வேண்டும் என நான் நினைக்கிறேன்.

உண்மையிலேயே சாந்தன் வந்த இந்த கொலை குற்றத்தோடு தொடர்புடையவரும் அல்ல.

அவர் வேண்டுமென்றே அந்த. அதிலே சேர்க்கப்பட்டவர்.

இதனை விசாரித்த நீதிபதிகளே இப்போது மன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள்.

நேரடியாக தொடர்பு படாத நபர்கள்.

அந்த விடுதலை இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்ற வகையிலே கைது செய்யப்பட்டு.

இவ்வளவு காலம் சிறையில் வைத்து மோசமான சித்திரவதை எல்லாம் அனுபவித்து.

கடைசியிலே இறக்க வேண்டிய சூழ்நிலைகளையும் உருவாக்கி இருக்கிறார்கள்.

ஆகவே இந்திய அரசாங்கம் பொறுப்பு சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

ஆகவே இந்த கொலைக் குற்ற மீள் விசாரணையை சர்வதேச மத்தியஸ்தத்துடன் அல்லது சர்வதேசம் நீதியாளர்கள் முன்னிலையில் நடாத்தப்பட வேண்டும் என்கின்ற பிரேரணையை நாங்கள் முன் வைக்கலாமா என்கின்ற ஒரு யோசனையையும் நாங்கள் இங்கே கவனத்தில் எடுக்க வேண்டிய வேண்டியது அவசியமானது என்று நான் நினைக்கிறேன். இப்போது சாந்தன் இறந்துவிட்டார்.

ஆனால் மீதி மூன்று பேர் அங்கு இருக்கிறார்கள். அந்த மூன்று பேரை யாவது பாதுகாப்பாக இங்கே கொண்டுவர வேண்டிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவைகள் இருக்கின்றன.

ஆகவே தமிழ் அரசியல் தலைவர்கள் இதிலே மிகுந்த கவனம் எடுத்து.

பொறுப்போடு இந்த விடயத்தை கையாள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது தொடர்பாக இங்கே பூதவுடலோடு இங்கே வந்த புகழேந்தியும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார். நீங்கள் வந்து சிறப்பு முகாமை பாருங்கள் அது எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை பாருங்கள். நநீங்கள் அரசாங்கத்தோடு பேசுங்கள். மற்ற மூவரையும் இங்கே கொண்டு வருவதற்க்கான முயற்சிகளை செய்யுங்கள், அவர்கள் இங்கு வரும்வரை அந்த சிறப்பு முகாமிலிருந்து தெரிந்தவர்கள் வீட்டிலேயோ அல்லது நண்பர்கள் வீட்டிலேயோ சுதந்திரமாக இருப்பதற்க்கான ஒழுங்குகளை செய்யுள்கள் என்று சொல்லி அவர் கேட்டிருக்கிறார். ஆகவே இந்த விடயங்களை கவனத்தில் எடுக்கவேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல் அரசியல் தலைவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் உண்டு என நான் நினைக்கின்றேன் என்றார்.


---

## பழம் சோற்றுக் குழையல்

முதல் நாள் இரவு ஊறவைத்த
குத்தரிசிச் சோறும் குரக்கன் பிட்டும்
மரவள்ளிக் கறியும் மீன் குழம்பும்
பாட்டி குழைத்துப் பதமாய்த் தந்ததை
பூவரசம் இலையில் வாங்கி நாங்கள்
பாணிப் பனாட்டுடன்
பக்குவமாய்ப் புசித்ததை
பாரில் உள்ளவரை மறக்கத்தான்
முடியுமா?
மரக்கறிக் குழையல் என்றால்
சோற்றில் ஒரு கவளமும்
சின்ன வெண்காயம் ஒரு கடியும்
தொட்டுக்கொள்ள
உவப்பாய் ஊறுகாயும்
சேர்த்தே உண்டுவிட்டால்
அரை நாள் துலா மிதிப்போம்
அறுநூறு கண்டுத் தறை கொத்துவோம்
ஒடியல்மாப் பிட்டும் ஊறவைத்த சோறும்
ஓரா மீன் குழம்பும்
ஒன்றாய்க் கலந்தே
ஒரு பிடி பிடித்தால்
ஒருநாள் பொழுதை
ஒட்டகம் போல்
தாங்குமன்றோ?
கனடா வந்து நாங்கள்
கால் பதித்து விட்டதாலே
பாட்டியும் இல்லை
பழம் சோறும் இங்கில்லை
ஒரு வாரச் சோற்றை ஒருமித்து
ஆக்கியே!
பிரிட்ஜில் வைத்துப் பிரேதமாக்கி
சூடாக்கிச் சூடாக்கி உண்ணுகின்றோம்
சத்துணவு உண்ட நாங்கள்
இப்போ
செத்த உணவு உண்ணுகின்றோம்.

---

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453



# Santhan's lawyer fears for the safety of his other inmates in a "Special camp" in India

**- Siva Parameswaran**

The lawyer for the deceased Santhan has expressed fears about the safety of three other inmates convicted and released in the Rajiv Gandhi assassination case, lodged in the Special Camp in Tiruchy, Tamil Nadu.

Pandian Pugalenthi, late Santhan's lawyer from Chennai also appealed to the Tamil MPs from Sri Lanka to visit the camp and meet the trio of Murugan, Robert Payas and Jayakumar.

Addressing media persons at the Jaffna Press Club on Tuesday (5), Pugalenthi said the trio was still detained in Trichy Special Camp even after being released by the Indian Supreme Court in November 2022.

"Now, the three others in the Trichy Special Camp are afraid to return to Sri Lanka. They are seeking to go to a country of their choice. In case there is a delay in the arrangements to travel to a country of their choice and if they continue to be in the Trichy Camo their lives could be in danger".

He further alleged the death of Santhan was a "planned act of revenge by the Indian government. It was to take revenge for Rajiv Gandhi's murder".

Commenting on late Santhan's detention even after his release by the top court, Pugalenthi said there was no reason to detain him in the Special camp.

"Restraining Santhan in a detention centre violates the directive of the Supreme Court to release him. Moreover, the lapses by the government could amount to the officers being culpable for his death".

Pugalenthi further alleged the District Collector (similar to the GA in Sri Lanka) and the Police officials of deliberately concealing information for Santhan as well as him thereby preventing his departure to Sri Lanka.

Speaking to reporters in Jaffna he questioned the motive of the Indian government in delaying his departure to Sri Lanka, despite the travel documents being ready.

"We will be approaching the courts again to seek an explanation on the failure of the State and Central governments in allowing his return back to his home country and the reason for the delay".

However, the doctors at the Rajiv Gandhi Government General Hospital said his health condition was not fit enough to travel back to his native country since he was in the Intensive Care Unit due to his liver failure.

According to him, the deceased body was not packed properly and "was sent back without any respect for the dead".

Santhan's mother Thilambalam Maheswari made fervent appeals to the Indian and Sri Lankan governments and in particular to the Indian Prime Minister Narendra Mode seeking his son's return to be with her during her sunset years, a video of which went viral.

Pugalenthi invited Tamil political leaders to visit the Trichy camp and meet other Sri Lankan Tamils from Eelam whose cases are over and those released from the cases who are there.

"People including those allegedly attempted to flee abroad are detained there. Listen to their demands also. After that, you try to organize a dialogue between the Sri Lankan and Indian governments" he added while addressing reporters at the Jaffna Press Club.

Santhan's body was buried in the Ellankulam "Maaveerar cemetery" close to his home town of Udupidy in Jaffna district. Thousands of Tamils including political and religious leaders, Civil society activists, University students, the Women-led Association of the Relatives of the Enforced Disappeared and lawyers among others paid tribute to him at various places as the cortege travelled from Vavuniya to Udupidy.

A mild scuffle erupted in Vavuniya between the organizers and the Police. While brief arrangements were made to pay respects to his body at the bus stand, the police objected to it being a public place.

Subsequently, the cortege travelled through the war-torn districts of Mullaitivu, Killinochi and entered Jaffna halting at various places where mourners were waiting to pay their tributes.


கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

**கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்**
**சர்க்கரைப் பொங்கல் விழா - 2024**
**சமய, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்**

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: April 27, 2024 (Saturday) 9.00 AM

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள் :**

மழலைகள் (JK) : 01-01-2019 இற்குப் பின் பிறந்தோர்
ஆரம்பப் பிரிவு (SK) : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 1 (Gr.1) : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 2 (Gr.2) : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 3 (Gr.3) : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 4 (Gr.4) : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 5 (Gr.5) : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 6 (Gr.6) : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 7 (Gr.7) : 2011 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 8 (Gr.8) : 2010 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர்

• மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

**ஏப்பிரல் 05, 2024க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..........
குடும்பப் பெயர்: ..........
பிரிவு: ..........
பிறந்த திகதி: ..........
தொலைபேசி எண், email: ..........

பங்குகொள்ளும் போட்டிகள்:
☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

குறிப்பு:
1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4ஆவது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email : canadahindumaamantram@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.451.8427,
647.620.5171 / 416.532.7897
416.356.7323, 416.497.4741
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: ஏப்பிரல் 05, 2024**

# இந்திய மத்திய மாநில அரசுகளின் நீதி அற்ற செயற்பாடு சாந்தனின் மரணத்திற்கு காரணம் — தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் அறிக்கை

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக்கப்பட்டு 32 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துவந்த நிலையில் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தனை சிறப்பு முகாமில் ஒன்றரை ஆண்டுகள் அடைத்து வைத்தது இந்திய மத்திய, மாநில அரசுகளின் நீதிக்கு புறம்பான செயல் என்றும் இதுவே அவரின் மரணத்துக்கு மூலகாரணமாக அமைந்ததாகவும் குற்றம் சாட்டியிருக்கும் அனைத்துலக தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் சாந்தனின் மரணத்திற்கு இந்திய மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவை பொறுப்புக் கூற வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறது.

போராளி சாந்தனுக்கு புகழ் வணக்கம் என அனைத்துலக தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவதானிப்புமையம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

ராஜீவ் காந்தி கொலையில் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவராக 1991 யூலை 22 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இலங்கையின் யாழ் மாவட்டம் வடமராட்சியைச் சேர்ந்த சாந்தன் என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராஜா 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தார். எனினும் சாந்தனோடு விடுதலை செய்யப்பட்டவர்களில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவர் இந்தியர்கள் என்பதால் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் ஏனைய நான்கு பேரும் இலங்கையர்கள் என்பதால் அவர்களை விடுவிக்காது சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். கடந்த ஒன்றரை வருடங்களாக சிறை வாழ்க்கையை விட கடுமையான நெருக்கடியான வாழ்க்கையை சிறப்பு முகாமில் சந்தித்து வந்த சாந்தன் நாடு திரும்புவதற்கு பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்த போதும் அவரது கோரிக்கையை விரைந்து முன்னெடுக்கத் தவறிய இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகள் அவரை நோயாளியாக்கிக் கொன்றுவிட்டன. இப் படுபாதகச் செயலை அவதானிப்பு மையம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட வெளிநாட்டு பிரஜை ஒருவரை அவரது சொந்த நாட்டிற்கு அனுப்பிவைக்க வேண்டியது. ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறான நிலையில் 2022 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 11 ஆம் திகதி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சாந்தனை 2023 பெப்ரவரி மாத இறுதிவாரம் அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு வேறு வழியின்றி மருத்துவனைக்கு கொண்டு சென்றே ஆகவேண்டும் என்ற நிலைவரை அவரை சிறப்பு முகாமிலேயே தடுத்து வைத்திருந்தது சாந்தனை சிறப்பு முகாமிலேயே வைத்து சாகவிடுவதற்கான சதித்திட்டமா என அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியிருக்கிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கே பல மர்மங்கள் நிறைந்தது. கொலை வழக்கினைக் கையாண்ட பல பொலிஸ் உயர் அதிகாரிகள் தங்கள் ஓய்வுக்காலத்தில் எழுவருக்கு வழங்கப்பட்ட தண்டனை நீதிக்கு அப்பாற்பட்டது என அவர்கள் வேறு வழியின்றி திட்டமிட்டு குற்றவாளிகளாக்கப்பட்டனர் என ஊடகங்களில் கூறிவந்திருக்கின்றனர். அவ்வாறிருக்க 32 வருடங்கள் சிறைவாழ்க்கையை அனுபவித்த ஒருவரை நீதிமன்றம் விடுதலை செய்தபின் சிறைச்சாலையை விட கொடுமையான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட கொடும் சிறப்பு முகாமில் அடைத்து வைத்து ஒழுங்கான உணவோ சீரான மருத்துவ வசதியோ கொடுக்காது உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் கடுமையான துன்பங்களைச் சந்திக்கும் அளவிற்கு அவர்களை ஒன்றரை வருடங்கள் சிறப்பு முகாமில் இந்திய மத்திய மாநில அரசுகள் இணைந்து தடுத்துவைத்திருந்ததன் உள்நோக்கம் என்ன?

சாந்தன் தான் நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும், தனது தாய் நிலத்திலே வயது முதுமையுற்றிருக்கும் தனது தாயுடன் இறுதிக் காலத்தைக் களிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு நீதிமன்றத்தை நாடியபோது நீதிமன்றமும் உடனடியாக சாந்தனை இலங்கைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டும் அவரை இலங்கைக்கு அனுப்பாது கால தாமதப்படுத்தியதன் உள்நோக்கம் என்ன?

2024 பெப்ரவரி 29 ஆம் திகதிக்கு முன்னர் சாந்தனை இலங்கைக்கு அனுப்புமாறு முன்னர் உத்தரவிட்டிருந்த சென்னை உச்ச நீதிமன்றம் திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் சாந்தனை பெப்ரவரி 21 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு அனுப்புமாறு அதாவது சாந்தன் தீவிர நோய்வாய்ப்பட்டு சென்னை ராஜீவ்காந்த அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப் படமுன்னர் உத்தரவிட்டிருந்தும் அதனை பெப்ரவரி 27 ஆம் திகதி வரை சாந்தனுக்கோ சாந்தனின் வழக்கறிஞருக்கோ தெரியப்படுத்தாது மாவட்ட ஆட்சியர் மறைத்து வைத்ததன் பின்னணி என்ன? என்ற கேள்விகளுக்கு இந்திய மத்திய மற்றும் ஆளும் மாநில அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு பதிலளிக்கவேண்டும்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை சாந்தனை பழிவாங்குவதற்காக இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து அவரை படுகொலை செய்துவிட்டதாகவே கருதுகின்றனர். ஈழத்தமிழர்கள் சாந்தனைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற குற்ற உணர்வோடு தங்களுக்குள் விம்மி வெடித்து நிற்கின்றனர். இந்த விடயத்தில் தீவிர தமிழ்த்தேசிய அரசியல் பேசும் அரசியல் தரப்புக்கள் சாந்தனையும் ஏனைய விடுதலை செய்யப்பட்ட வர்களையும் மீட்பதற்கு எந்தவித நகர்வினையும் வெற்று அறிக்கைகள் மற்றும் சந்திப்புகளுக்கு அப்பால் மேற்கொண்டிருக்கவில்லை என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

மேலும் சாந்தன் மரணமடைந்திருக்கக்கூடிய நிலையில் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற மற்றைய மூவரையும் உடனடியாக விடுதலை செய்வதற்கும் அவர்களை இலங்கைக்கோ அவர்கள் விரும்பிய நாட்டிற்கோ அனுப்புவதற்குமான நடவடிக்கைகளில் மத்திய,மாநில அரசுகள் உடனடியாக ஈடுபட வேண்டும்.

தீவிர தமிழ்த் தேசிய அரசியல் வாதிகள் சாந்தன் விடயத்தில் அதிகம் பொறுப்புணர்ந்து செயல்படவில்லை.

விடுவிக்கப்பட்ட சாந்தன் நாட்டுக்குத் திரும்பினால் இலங்கைச் சட்டங்களின் பிரகாரம் அவருக்கும் அவரை விடுவிக்க உதவும் தங்களுக்கும் ஆபத்து ஏற்படுமா என்ற ஒரு பயம் அரசியல்வாதிகளிடம் இருந்திருக்கிறது. ஒரு சிலர் அதனை வெளியில் சிலரிடம் கூறியுமிருக்கிறார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியோ அல்லது உரிய அமைச்சரிடம் உத்தியோக பூர்வமாக ஒரு பதிலை பெற்றிருக்க முடியும். ஆனால் அவர்கள் எமக்கு ஏன் வீண் வேலை என்பதுபோல் கள்ள மௌனம் காத்தார்கள். ஒரு சிலரோ அரசியல் ஆதாயத்திற்காக சாந்தனின் தாயாருடன் படம் எடுத்து தாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என பிரச்சாரம் மட்டும் செய்தார்கள். இந்த விடயத்தில் சாந்தனுக்கோ, சாந்தனது குடும்பத்திற்கோ ஒரு துளி அளவேனும் உதவவோ அலோசனை வழங்கவோ தீவிர தமிழ்த் தேசிய தரப்புக்கள் முன்வரவில்லை என்பதையும் தமிழ்த் தேசிய அவதானிப்புமையம் அழுத்தமாக பதிவு செய்கின்றது.

இவ்வாறு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தனை இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டேனும் விடுவிப்பதற்கும், 32 வருடம் சிறைவாசம் அனுபவித்த ஒருவரை அவரது தாயின் முன் நிறுத்த வாய்ப்பு இருந்தும் அதனை தமிழ்ச் சமூகம் தவறிவிட்டடதோடு மட்டுமல்லாது சாந்தனை விடுவிப்பதற்காக குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அறவழியிலான போராட்டம் எதையும் கூட தாயகத்திலும் புலத்திலும் உள்ள எமது அரசியல் மற்றும் சிவில் ஆளுமைகள் அழுத்தமாக முன்னெடுத்திருக்கவில்லை. மாறாக சாந்தனது குடும்பத்தினரை விரக்தியடையவே வைத்தது.

இதன் மூலம் சாந்தனின் மரணத்திற்கு இந்திய மத்திய மாநில அரசுகள் மாத்திரமின்றி தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்களும் ஏன் நாமும் கூட சாந்தனுக்காய் ஒரு அடையாளப் போராட்டத்தைக் கூட நடத்த முடியாதவர்களாகிவிட்டடோம் என்ற குற்ற உணர்வோடு சாந்தனின் புகழுடல் மீது இருகரம் கூப்பி வணக்கம் செலுத்துகின்றோம். - என்று சாந்தனின் திடீர் மரணம் குறித்து இன்று அனைத்துலக தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## சிந்தனைக் களம் (இசை — நடனம்) அமைப்பு நடத்தும் இணையவெளி உரைநிகழ்வும் கலந்துரையாடலும்

சிந்தனைக் களம் (இசை - நடனம்) அமைப்பு நடத்தும் கனடா நேரம் 08-03-2024 வெள்ளிக்கிழமையன்று மாலை இரவு 8.00 மணி தொடக்கம் 10.30 வரை நடைபெறும் இந்த உரை நிகழ்வில் இசை மரபில் "பஜனை சம்பிரதாயம்" என்னும் தலைப்பில் சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் லலிதா ஜவஹர் அவர்கள் உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வில் இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து கலந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்கள் சனிக்கிழமை காலை 6.30-8.30 நேரத்தில் கலந்துகொள்ளலாம்.

***ZOOM ID: 82804682775***
***PASSCODE: 636484***



# Mass Killing in Ottawa : 6 dead including 4 children and their mother. Murderer is a 19 year old Sri Lankan International student , Febrio De-Zoysa.

## கனடாவின் ஒட்டாவா தலைநகரில். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உட்பட 6 இலங்கையர்களை கொலை செய்த இலங்கையிலிருந்து வந்திருந்த சர்வதேச மாணவன்









கனடாவின் ஒட்டாவா தலை நகரில் 06-03-2024 புதன்கிழமை அன்று இடம்பெற்ற பயங்கரமான கொலைச் சம்பவம் ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் அவரது நான்கு குழந்தைகள் உட்பட ஆறாம் நபரான ஆண் ஒருவரும் 19 வயதான இலங்கை சர்வதேச மாணவர் **Febrio De-Zoysa** என்பவரால் கொலை செய்யப்பட்டார்கள் என்ற நெஞ்சை உருக்கும் சம்பவம் தொடர்பாக அந்த இளம் கொலையாளை கைது செய்யப்பட்டுள்ளதாக ஒட்டாவா பொலிஸ் பிரிவு அறிவித்துளளது.

இந்த துயரம் தரும் சம்பவத்தில் இளம் தாயின் கணவரும் கொல்லப்பட்ட நான்கு பிள்ளைகளின் தந்தையுமான தனுஸ்கா விக்ரமசிங்க என்பவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி பயங்கரம் நிறைந்த கொலைக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள 19வயது சர்வதேச மாணவனினால் கொல்லப்பட்டவர்கள் விபரம் பின்வருமாறு-

35 வயதான தாய் தர்ஷனி பன்பரநாயக்க கம வல்வே தர்ஷனி டிலந்திகா ஏகன்யகே.
ஏழு வயது மகன் இனுகா விக்கிரமசிங்க.
நான்கு வயது மகள் அஷ்வினி விக்ரமசிங்க.
இரண்டு வயது மகள் ரினியானா விக்கிரமசிங்க.
இரண்டு மாத பெண் குழந்தை கெல்லி விக்கிரமசிங்க.

மேலும் 40 வயதான அமரகோன்முபியான்சேலா ஜீ காமினி அமரகோன் என்னும் இலங்கையரும் கொல்லப்பட்டார் என்றும் அவருக்கும் கொலைகளுக்குள்ளான குடும்பத்திற்கும் என்ன உறவு என்பதை அறிய முடியவில்லை என்றும் பொலிஸ் பிரிவு அறிவித்துள்ளது.

ஒட்டாவா பொலிஸ் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் புதன்கிழமையன்று 6ம் திகதி
911 க்கு அழைப்புகள் இரவு மார் 10:50 க்கு வரத் தொடங்கியதாகவும் இரண்டு பிரதான பாடசாலைகளுக்கு அருகில் அமைந்திருந்த மேற்படி குடியிருப்பு பகுதி.க்கு பொலிசாரும் அவரச உதவியாளர்களும் சென்றபோது. ஆறு பேர் இறந்து கிடப்பதைக் கண்டறிந்தனர் மற்றும் அங்கு காணப்பட்ட காயமடைந்த ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

உயிரிழந்தவர்களின் அடையாளங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், விசாரணைகள் தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



தனது பெயர் குறிப்பிட விரும்பாத இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் ஒருவர் ஊடீஊ தொலைக்காட்சி செய்தியாளரிடம் தகவல் தெரிவிக்கையில், உயிரிழந்தவர்களில் இலங்கைப் பெண் ஒருவரும் அவரது நான்கு பிள்ளைகளும் உள்ளடங்குவதாகவும், தந்தை இலங்கையர் உயிர் பிழைத்த போதிலும் மோசமான காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த அறுவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் கனடாவிலும் இலங்கையிலும் அதிர்ச்சியினால் உறவினர்களும் நண்பர்களும் உறைந்து போயுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# கனடா– ஸ்காபுறோவில் அமைந்துள்ள 'மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஏற்பாட்டில் பங்காரு அடிகளாரின் 84வது பிறந்த தினம்





கனடா- ஸ்காபுறோவில் நாஸ்டின் வீதியில் அமைந்துள்ள "மேல்மருவத்தூர்ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஏற்பாட்டில் பங்காரு அடிகளாரின் 84வது பிறந்த தினம் கடந்த 03-03-2024 ஞாயிற்றுக்கிழமையன்று மன்றத்தின் ஆலயத்தில் விசேட அபிசேகங்கள் மற்றும் வழிபாடுகள் ஆகியவற்றோடு ஆரம்பமாகிய தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றது.

மன்றத்தின் ஸ்தாபகர் "சக்தி" ஞானம்மா திருநாவுக்கரவு அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவின் உபயகாரராக திரு. திருமதி உமாகாந்த்-விஜி தம்பதியினர் விளங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
தொடர்ந்து, "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் மன்றத்தின் முக்கிய "சக்தி"களில் ஒருவரான கந்தையா யோகநாதன் ஆகியோர் பங்காரு அடிகளாரின் சிறப்புக்களையும் அவர் ஆற்றிய சமூக மற்றும் சமயத் தொண்டுகளைகளையும் தொடர்ச்சியாக அந்த மேல்மருவத்தூர் ஆலயம் அடைந்த வளர்ச்சி மற்றும் ஆற்றிய சேவைகள் ஆகியவற்றையும் எடுத்துரைத்தார்கள்.



அன்றை தினம் "சக்தி நர்ததனாலயா" நடனப் பயிற்சி நிலையத்தின் ஆசிரியை திருமதி ஜனனி ரவிசங்கரின் மாணவி செல்வி தியானா ரவிசங்கரின் பரதநாட்டியம் இடம்பெற்றது. நடனச் செல்வியை அனைவரும் பாராட்டினார்கள்.
தொடர்ந்து அங்கு வருகை தந்திருந்த ஆன்மீகத் தொடண்டரும் வீடு விற்பனை முகவருமான பாஸ்கரன் சின்னத்துரை அவர்களின் பிரசன்னத்தோடு அடிகளாருக்குரிய பிறந்த நாள் "கேக்" வெட்டப்பட்டு பின்னர் ஸ்தாபகர் "சக்தி" ஞானம்மா திருநாவுக்கரவு அவர்கள் சகிதம் பிறந்த நாள் கொண்டாடப்பெற்றது.
தொடர்ந்து பாஸ்கரன் சின்னத்துரை அவர்கள் "சக்தி" ஞானம்மா திருநாவுக்கரவு அவர்களுக்கு "கைலாசா இந்து தேசத்தின் வரலாறு மற்றும் நிர்வாகம் ஆகிய விபரங்கள் அடங்கிய ஆங்கில நூல் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்.
அன்றைய விழாவை சிறப்புற நடத்த உதவிய அனைத்து தொண்டர்கள் மற்றும் "சக்தி"கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பெற்று பிரசாதம் வழங்கப்பெற்றது.

------------

சத்தியன்

## ஓம் சாந்தி



# சிவராத்திரியின் ஆன்மீக இரகசியங்கள்

**சி**ரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க! என சிவனைக் குறித்துப் பாடும் பக்தர்களால் அனுட்டிக்கப்படும் விரதங்களில் சிவனின் இந்த விரதம் மகாசிவராத்திரி என அழைக்கப்படுகிறது. அத்துடன் இந்த விரதத்தை நாள் முழுவதும் உபவாசம் இருந்து இரவு முழுவதும் கண் விழித்து உள்ளன்போடு அனுட்டிக்கின்றனர். இத்தகைய பக்தியின் சம்பிரதாயம் தாம் தேடிய சிவனைச் சந்தித்து பலன் பெற்ற மனிதர் மீண்டும் துன்பம் வரும் போது தம் மனதில் ஏற்படுத்திய பதிவினால் உருவாக்கியதே ஆகும். தாம் தேடும் சிவனைச் சந்தித்து முத்தி பெறுவோம் என்ற நம்பிக்கையுடனேயே பக்தி செய்கின்றனர். அவ்வாறான இந்த சிவராத்திரி பக்தருக்கு கூறும் ஆன்மீக இரகசியங்கள் என்ன? என்பது பற்றிப் பார்ப்போம்.

### மகா சிவராத்திரி

இன்றைய மனிதர் அறியாமையால் பஞ்சவிகாரங்களின் ஆதிக்கத்தில் பாவம் செய்பவர்களாகி துன்பத்தை அனுபவிக்கின்றனர். இந்நிலையில் சிவன் அவதரித்து அத்தீயகுணங்களிலிருந்து விடுவித்து மாறாக அன்பு அமைதி ஆனந்தம் நிறைந்த வாழ்வு வாழ வைப்பதால் இவ்விரதம் மகா சிவராத்திரி என்பதாயிற்று.

### மூன்றாம் கண் விழித்தல்

கை கூப்பி வழிபடும் தம்மை மேன்மையாக்க தந்தையான கடவுள் வருவார் எனப் பாடினாலும் கூட அவர் பெயர் ரூபத்திற்கு அப்பாற்பட்டவர் எனவும் எங்கும் இருக்கிறார் எனவும் அறியாமையுடன் கூறிக்கொண்டு இருப்பவர்களை மூன்றாம் கண் எனும் ஞானத்தை வழங்கி தெய்வீகபுத்தி எனும் அறிவுக்கண்ணை விழிப்படையச் செய்வதையே கண் விழித்தல் என்பதாகும்.

### உபவாசம் அனுட்டித்தல்

உபவாசம் என்பது அருகாமையில் வாசம் செய்தல் என்பதாகும். அதாவது சரீரம் எடுக்காதவரான பரமதந்தை சிவனை மனதால் நினைப்பதால் மட்டுமே அவரின் அருகாமையை அணுகவும் சக்தியை பெறுவதன் மூலம் தூய்மையாகவும் சக்திசாலியாகவும் ஆகமுடியும். இவ்வாறு மனதால் தந்தை சிவனுடன் கொள்ளும் தொடர்பே தியானம் எனப்படும். இறைவனை தேடினாலும் அவரை அறியாமல் அங்குமிங்கும் அலையும் குழந்தைகளுக்கு தியானத்தின் மூலமான வழிகாட்டலைக் கற்பத்து தூய்மையாக்கவே சிவனின் அவதாரம் நிகழ்கிறது. அந்த அவதாரத்தின் ஞாபகார்த்த சம்பிரதாயமே சிவராத்திரி ஆக கொண்டாடப்படுகிறது.

### சிவலிங்க வழிபாடு

5000 வருடங்கள் கொண்ட மனித ஆத்மாக்களின் வாழ்க்கைச்சக்கரத்தில் துன்பத்தின் அதிஉச்ச நேரமான இறுதி யுகமான கலியுக இறுதியில் ஒரேயொரு முறையே சிவன் அவதரிக்கிறார். தூய்மையாக்குகிறார். அதற்காக பிரம்மாவின் சரீர ஆதாரத்தைப் பெற்று மாற்றத்திற்கான கல்வியைக் கற்பிக்கின்றார். ஒவ்வொரு கல்பத்திலும் தரும் இக்கல்வியை தந்தை சிவன் தற்போதும் வழங்கிக் கொண்டிருக்கிறார். இவ்வாறு பிரம்மாவின் ஆதாரத்தை பெற்றதையே சிவலிங்கத்தின் அடிப்பகுதி பிரம்மாவையும் மேல்ப்பகுதியில் இருக்கும் ஒளிப்புள்ளியே சிவனைக் குறிப்பதாகவும் மனிதர்களாலேயே உருவாக்கப்பட்டது. ஆனாலும் காலப்போக்கில் எல்லோரும் தாம் ஆத்மா என்பதை மறந்ததால் சிவன் யார்? என்பதையும் தியானத்தின் மூலமே தொடர்பைப் பெறமுடியும் என்பதையும் மறந்துவிட்டனர். அவரது நினைவு எனும் தியானமே நாம் பாவத்திலிருந்தும் துன்பத்திலிருந்தும் விடுபடுவதற்கான ஒரே வழியாகும்.

### இராஜயோகம்

எல்லாப் புகழும் ஒருவருக்கே எனும் பெருமைக்குரியவரான அதிமேன்மையானவரான அதாவது இராஜவான சிவனுடன் தொடர்பு கொள்ளும் தியானமே இராஜயோகம் எனப்படுகிறது. மனஅமைதியையும் உடல் ஆரோக்கியத்தையும் தரும் இத்தியானம் மனம் புத்தி மூலமாக தந்தை சிவனுடன் ஏற்படுத்தும் அன்பான நினைவேயாகும். தந்தையின் பிரம்மா மூலமாக 1936ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி உலகெங்குமுள்ள பிரம்மா குமாரிகள் ஆன்மீகப் பல்கலைக் கழகத்தினூடாக 136 க்கும் மேற்பட்ட நாடுகளில் 9000 க்கும் மேற்பட்ட நிலையங்களில் இலவசமாக கற்பிக்கப்படுகிறது.

மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கான இத்தியானக்கல்விக்கான மேலதிக விபரங்களுக்கும் தியானத்தை பயில விரும்புவோரும் தொடர்புக்கான.

இலக்கம் (416) 439-9001

*ஓம் சாந்தி*

**திருமதி. ஞானா. தனபாலசுந்தரம்**
**பிரம்மா குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக் கழகம்**
**ஸ்காபறோ கிளை**

# சித்தத்தை சிவமாக்கும் சித்த மருத்துவம்

**சாம் - ரமேஸ்குமார்**

சுவர் இருந்தால்தான் சித்திரத்தை தீட்ட முடியும். அந்த சித்திரம் ஒருபோதும் சிதைந்து போகாமலும் பிறரை கவரும் தன்மையுடனும் என்றும் அழகானதாக இருக்க வேண்டுமானால், சுவர் எப்போதும் பலமானதாக இருக்க வேண்டும்.

இந்த சித்திரத்தை பிரதிபலிக்கும் சுவரைப் போல்தான் உடலும் மனதும் பலமானதாகவும் நோயற்றதாகவும் இருந்தால்தான். அதற்குள் குடிகொண்டு எங்கும் பரந்து இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்து இருக்கும் ஆன்மாவை ஒரு மனிதனால் பரிபூரணமாக உணர்ந்து கொள்ள முடியும்.

சித்த மருத்துவம் என்பது ஒரு மனிதன் தன் ஆன்மாவை உணர்வதற்கான அகம் புறம் சார்ந்த ஒரு வாழ்வியல் முறையாகும். அந்த முறையின்படி ஒருவன் தன் வாழ் நாளில் பயணித்தால் தன்னுடைய இயல்பான சுதந்திரத்தை அல்லது விடுதலையை பரிபூரணமாக உணர்ந்து கொள்ள முடியும்.

இப்பிரபஞ்சத்தில் வாழும் ஒரு மனிதன் தன் வாழ் நாளில் தன் சுயத்தை உணர்வதற்கு பெரும் தடைக் கல்லாக இருப்பது வறுமையும் நோயும்தான். அந்த இரண்டையும் இல்லாமல் செய்வது இறைவனின் மிகப் பெரும் கடமையாகும்.

அதனால் தான் தன்னை தனக்குள் உணர முற்படும் மனிதனின் சரீர நோயை குணப்படுத்துவதற்கும். அவன் அகத்தை ஞானத்தால் குளிரச் செய்வதற்கும். சித்தர்கள் மூலமாக சித்த மருத்துவத்தை இவ்வுலகுக்கு இறைவன் தோற்றுவித்தான்.

சித்தத்தை சிவன்பால் வைத்த ஒரு சித்த மருத்துவனால் மட்டும்தான் சித்தர்களின் சித்த மருத்துவ ஞானத்தை முழுமையாக பயின்று இவ்வுலகில் நடைமுறைப்படுத்த முடியும். இல்லையேல் அந்த மருத்துவம் வெறும் கானல் நீரேயாகும்.

சித்த மருத்துவத்தை கொடுக்க நினைப்பவனும் அதைப் பெற்று பயன் பெற நினைப்பவனும் அகங்காரமற்று ஒரு புள்ளியில் சந்தித்தால் மட்டுமே நூறு விதமான வெற்றியை பெற முடியும். இல்லையேல் இருவரில் ஒருவராவது சித்தம் கலங்கும் நிலைக்கு தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். இதுவே யதார்த்த பூர்வமான உண்மையாகும்.

மேலைத்தேச மருத்துவம் புறத்திலே வெற்றி பெருகின்றது. ஆனால் சித்த மருத்துவமோ புறமாகிய சரீரத்தையும்



குணமாக்கி அகமாகிய மனத்தையும் வளப்படுத்தி ஒருவனை தன் தெளிந்த நிலைக்கு அழைத்துச் செல்கின்றது. அதனால்தான் அது சித்த மருத்துவம் எனப் போற்றப்படுகின்றது.

வெறும் மூலிகைகளைப் பற்றியும் தைலங்களைப் பற்றியும் சூரணங்களைப் பற்றியும் கற்பதனால் ஒருவன் சித்த மருத்துவத்தில் வெற்றி பெற முடியாது. தன் அகங்காரத்தை துறந்தவன் எவனோ..? தன் ஆசைகளை குறைத்தவன் எவனோ..? புகழை விரும்பாதவன் எவனோ..? அவனே சித்த மருத்துவத்தில் ஒரு தெளிந்த நிலையை அடைந்து வெற்றி பெறுகின்றான்.

சித்தன் போக்கு சிவன் போக்கு என்பது எம் முன்னோர்களின் வாக்கு. அப்படிப்பட்ட சித்தர்களின் மருத்துவத்தை கொழுத்த ஊதியத்திற்காகவும் எண்ணற்ற அரசாங்க சலுகைகளுக்காகவும் வெறும் ஏட்டுப் படிப்பில் முழுவதுமாக கற்றுணர்ந்து விட முடியாது. அதுவும் ஒரு அறியாமையே.

மனதை செம்மையாக வைத்து சித்தத்தை தெளிவாக்கிய ஒரு சித்த மருத்துவனால் மட்டுமே பெரும் அற்புதங்களையும் அதிசயங்களையும் சித்த வாழ்வியலில் நிகழ்த்த முடியும்.

இலங்கை சிவபூமி என அழைக்கப்பட்டாலும் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகமே எப்போதும் சிவபூமிக்குரிய அனைத்து கலாச்சாரங்களையும், பண்பாடுகளையும் அதன் விழுமியங்களையும் கடைப்பிடித்து வருகின்றது. அங்கும் சித்த மருத்துவத்தில் அது பாரிய பின்டைவையே சந்தித்து வருகின்றது. மருத்துவர்களுக்கு இடையிலான புரிந்துணர்வு இல்லாமையும் பதவி போட்டியும் தெளிவற்ற மருத்துவ முறையுமே இதற்கு முழுக் காரணமென புத்திஜீவிகளாலும் மக்களாலும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு என்பதை சித்த மருத்துவர்கள் அனைவரும் உணர்ந்தால் மட்டுமே மக்களிடம் சித்த மருத்துவத்தை ஒரு வாழ்வியலாக மாற்ற முடியும். ஏனென்றால் தமிழனின் மருத்துவமே சித்த மருத்துவம் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல் காலப்போக்கில் தோல்வியை சந்திக்கும் ஒரு மருத்துவமாக அது மாற்றம் காண முற்படும் என்பதில் எந்த ஐயமும் கிடையாது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# "ஜனாதிபதி செயலக பிரதானிசாகல இந்தியா செல்ல முன் மீனவர்களுடன் பேச வேண்டும்"

**பு. கஜிந்தன்**

## கடற் தொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் தலைவர் நற்குணம் தெரிவிப்பு

ஜனாதிபதி செயலக பிரதானி சாகல ரட்நாயக்க இந்தியா சென்று மீனவர் பிரச்சனை தொடர்பில் பேச முன்னர் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும் என யாழ் மாவட்ட கடற் தொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் தலைவர் செல்லத்துரை நற்குணம் வேண்டுகோள் விடுத்தார்.

06-03-2024 புதன்கிழமை யாழ்ப்பாண மாவட்ட கடத்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களையும் சம்பளத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய எல்லை தாண்டிய மீனவர்களினால் நாம் பல்வேறு அசோகரிகங்களை அனுபவித்துக் கொண்டு வரும் வகையில் தொடர்ச்சியாக பல்வேறுபட்ட போராட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

அண்மையில் கடலில் கறுப்புக் கொடிகளை தாங்கியவாறு இலங்கை கடல் எல்லை வரை எமது போராட்டம் சென்றது அதன் விளைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்தியாவுடன் பேசுமாறு ஜனாதிபதி செயலகப்பிரதானி சாலக ரட்நாயக்கவுக்கு பணிப்புரை வழங்கியிருந்தார்.

அதை நாம் வரவேற்கின்றோம் ஆனால் இந்தியா மத்திய அரசுடனோ தமிழ்நாட்டு அரசுடனோ இலங்கை மீனவர் பிரச்சனை தொடர்பில் எண்ணத்தை பேச போகிறோம் என பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் கேட்க வேண்டும்.

அல்லது பேச்சுவார்த்தைக்கு செல்லும்போது மீனவ பிரதிநிதிகளையும் அழைத்துச் செல்ல வேண்டும்.

அவ்வாறில்லாமல் வெறுமனே அரசியல் நீதியான பேச்சு வார்த்தைகளை நடத்திவிட்டு மீனவர்களை ஏமாற்றக்கூடாது.

ஏற்கனவே இவ்வாறு பல பேச்சுவார்த்தைகள் உறுதிமொழிகள் வழங்கப்பட்டு இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆகவே இந்திய அரசாங்கத்துடன் மீனவர் விவகாரம் தொடர்பில் பேசுவதற்கு முன்னர் நல்லெண்ண அடிப்படையாக இந்திய மீனவர்கள் யாழ் கடற் பகுதிக்கு வருவதை நிறுத்துவதை இந்தியா மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் பூசகர் சிவத்திரு மதிமுக ராசா கைது – அகில இலங்கை சைவ மகா சபை கண்டனம்

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் மகா சிவராத்திரி பூசை ஏற்பாடுகளுக்கு சென்ற பூசகர் சிவத்திரு மதிமுக ராசாவை கைது செய்தமை மிகப் பாரதூரமான சைவத்தமிழர்களின் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயல் என அகில இலங்கை சைவ மகாசபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அக் கண்டன அறிக்கை வருமாறு உலகம் பூராகவும் உள்ள சைவர்களின் மிக உன்னதமான முதன்மையான விரதம் சிவராத்திரி ஆகும்.

அந்த வகையில் வன்னி சிவப் பிராந்தியத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டு வரும் ஆதி சிவன் கோவிலின் மகா சிவராத்திரி வழிபாடுகளுக்கு சென்ற பூசகர் மிக மோசமான முறையில் கைது செய்யப்பட்டமையையும் பக்தர்களின் வழிபாடுகளிற்கு ஆலய பரிபாலன சபையினரின் பூசை ஏற்பாடுகளுக்கு பலத்த இடையூறு விளைவிக்கப்பட்டு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டமை சைவசமயிகளிற்கு தாங்கொணாத வலியை ஏற்படுத்தி உள்ளது.

இது இலங்கையின் சைவசமயிகளின் வழிபாட்டு உரிமைக்கு விடுவக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலும் அதே நேரம் சைவ சமய மதகுருவை மோசமாக நடாத்தி கைது செய்தமை மன்னிக்க முடியாத பாரதூரமான சம்பவமாகும்.

உடனடியாக பூசகர் சிவத்திரு மதிமுகராசாவை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்துவதுடன் நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி தன்னிச்சையாக செயற்பட்ட நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிசார் மீது அரசு உரிய ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ள வலியுறுத்தி நிற்கின்றோம்.

அதேநேரம் இன்றைய மகா சிவராத்திரி வழிபாடுகளிற்கு எந்தவித இடையூறுகளையும் மேற்கொள்ளாமல் இருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்பதை இலங்கை தழுவிய சைவசமயிகள் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபை வலியுறுத்தி நிற்கின்றது.

மிகுந்த இன்னல்களை தொடர்ச்சியாக சந்தித்து எமது பூர்வீக வழிபாட்டு உரிமையை விட்டுக்கொடுக்காத அதற்க்காக இத்துணை தியாகங்களை செய்து வரும் வெடுக்குநாறி மலை ஆதி சிவனின் தமிழ்ச்சைவக் குடிகளிற்கு தலைமைப் பூசகர் மற்றும் பரிபாலன சபைக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

இந்த உன்னத சைவர்களின் வழிபாட்டு மகா சிவராத்திரி தினத்திலே ஏற்பட்டுள்ள அனைத்து துன்பங்களையும் தீர்த்து அருள் புரிய முழுமுதற் பரம்பொருள் ஆதி சிவனை மனமுருகிப் பிராத்திக்கின்றோம்.


- அகில இலங்கை சைவ மகா சபை

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1090



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## மட்டக்களப்பு நரசிங்க வைரவசுவாமி கோயில் மட்டக்களப்பு

கந்தர் கதிர்காமர் என்பவர் வன்னிநாட்டிலிருந்து 1815 ஆம் ஆண்டளவில், நரசிங்கவைரவர் விக்கிரகத்தை மட்டக்களப்பிற்குக் கொண்டு வந்தார். இவ்விக்கிரகத்தை ஒரு மரநிழலிலேவைத்து வணங்கி வந்தார். தொடர்ந்து மரத்தடியில் நரசிங்க பைரவசுவாமியை வைத்து வழிபடமுடியாதநிலை காணப்பட்டது. இதனால் மட்டக்களப்பின் வடபாகத்தே சந்தையை அடுத்துள்ள அரசடிப்பிள்ளையார் வீதியைச் சார்ந்த பகுதியில், கோயிலைநிறுவ எண்ணங் கொண்டார். இப்பகுதியில் கந்தன் கதிர்காமரின் சமூகத்தைச் சேர்ந்தவர்களும், உறவினர்களும் வசித்துவந்தனர். இவ்விடமே நரசிங்கபைரவ சுவாமிக்குக் கோயில் அமைக்க உகந்த இடமெனத் தேர்ந்து கொண்டார்.

இங்கு வயிரவியார் என்பவருக்குச் சொந்தமான நிலத்திலே, அங்கு காணப்பட்ட பெரியகூழா மரத்தடியில், சிறுமேடை அமைத்து அம்மேடையிலே விக்கிரகத்தை எழுந்தருளச் செய்து, கந்தர் கதிர்காமரும் அவரது சமூகத்தைச் சேர்ந்தவர்களும் வழிபாடியற்றி வந்தனர். ஆரம்பகாலத்தில் சலம், பூவொடு, தீபம் ஏற்றி, ஆத்மார்த்தபூசையே நிகழ்ந்தது. மேடைமீது காணப்பட்ட திருவுருவத்திற்கு திருக்கோயில் அமைக்கவேண்டிய நியதியை காலம் தோற்றுவித்தது.

இவ்வாறான நிலையிலே ஒருநாள் கந்தர் கதிர்காமர் நித்திரையிலிருந்தபோது திடீரென, ஆவேசம் வந்தவர் போல சத்தமிட்டவாறு ஓடத்தொடங்கினார். இவரது உறவினர்களும், ஊரவர்களும் இவரைப் பிடிக்கும் நோக்கத்தோடு, கந்தர் கதிர்காமரைத் தொடர்ந்து ஓடினர். யாரையும் பொருட்படுத்தாது வடக்குப்பக்கமாக காடுகளுக்கூடாக ஓடிய கதிர்காமர், தற்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் இடம்வரை ஓடிச்சென்றார். பின்னர் அவ்விடத்திலே காணப்பட்ட தேற்றாமரத்தைச் சுற்றிச் சுற்றி ஆடிக் கொண்டிருந்தார். இவரைப் பின்தொடர்ந்துசென்ற உறவினர்களும், ஊரவர்களும் அவரை நோக்கி விசாரித்தனர். அப்பொழுது கந்தர் கதிர்காமர், இன்றுமுதல் நரசிங்கவைரவசுவாமி, குறிப்பிட்ட தேற்றாமரத்தடியிலேயே கோயில்கொண்டருளச் சித்தங்கொண்டுள்ளார். அங்கு கோயில் அமைத்து அவ்விடத்திலே நரசிங்கபைரவ சுவாமி எழுந்தருள, ஊரவர்கள் உதவவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இதனால் ஊருக்கு நல்லது நடக்கும் என்றும், அனைவரையும் நரசிங்கபைரவசுவாமி காப்பாற்றி அருளுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அருள்நிலையில் கந்தர் கதிர்காமர் கூறியதைக் கேட்ட அவ்வூர் மக்கள் அதனை நிறைவேற்றினர்.

ஆரம்பகாலத்தில் தேற்றாமரநிழலைச் சுற்றியுள்ள சிறுபகுதியே ஆலயமாகக் கருதப்பட்டது. தேற்றாமரத்தின்கீழ் சிறு குடில் அமைத்து, அங்கு நரசிங்க பைரவசுவாமியை எழுந்தருளச் செய்தனர். வருடத்திற்கொருமுறை ஏழுநாட்களுக்கு சடங்கு நடைபெறும். இறுதிநாளன்று ஆடு, கோழி ஆகியவற்றைப் பலியிட்டு பூசையை நிறைவேற்றி வந்தனர். இந்நிலையில் கந்தர் கதிர்காமரின் உறவினரான சின்னாவியார் என்பவர், இவ்வாலயத்திற்கு அருகிலேயே சிறு குடில் அமைத்து, நரசிங்கபைரவ சுவாமிக்குத் தொண்டுகள் செய்து வந்தார்.

இவ்வாறு தொண்டு செய்து வரும்காலத்திலே, சின்னாவியார் பெரியம்மை நோயினால் தாக்கப்பட்டார். அக்காலத்தில் பெரியம்மைபோன்ற நோய் வயப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இவரை சென்று பார்க்க உறவினர்கள் அஞ்சினர். ஊரவர்கள் ஒதுக்கி வைத்தனர். தமக்கும் இந்நோய் பரவி விடுமோ என்ற அச்சமே இதறகுக் காரணமாகக் காணப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்ட சின்னாவியார். நரசிங்கபைரவசுவாமியையும், முத்துமாரித் தாயாரையும் வேண்டி, தனது மனதிலேபட்டவற்றை இருவர்மீதும் பாடித் துதித்தவாறு தனிமையிலே வாழ்ந்தார்.

இவர் பெரியம்மை நோயின் தாக்கத்திலிருந்து விடுபட்டாராயினும் இரண்டு கண்களும் பார்வையிழந்த நிலையிலே தட்டுத்தடுமாறி வாழ்ந்து கொண்டிருந்தார். இவரது நிலையறிந்தஊரவர்களும், உறவினர்களும் அவரைப் பார்க்கச் சென்றபோது, நோயின் கொடுமையால் தனது கண்பார்பை போனதைக் குறிப்பிட்டு, நரசிங்கபைரவசுவாமிமீதும், அன்னை முத்துமாரிமீதும் மனமுருகிப் பல பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் பக்திச்சுவையும், நயமும் கொண்டு காணப்பட்டன.

சின்னாவியார் பாடிய பாடல்களை ஊரவர்கள் தொகுக்க ஆரம்பித்தார்கள். பிற்காலத்தில் இவரது பாடல்கள் மாரியம்மன் குளுத்திப் பாடல்களாகவும், நரசிங்க பைரவர் காவியம், மற்றும் வைரவர் ஊஞ்சல் பாடல்களாகவும் தொகுக்கப்பட்டது. இவ்வாலயத்தில் சடங்கு நடைபெறுங் காலங்களில், சின்னாவியாரால் பாடப்பட்ட பக்தித்சுவை கொண்ட பாடல்களே பாடப்படுகின்றது.

சின்னாவியார் காலமானபின் இவரது சமூகத்தைச் சேர்ந்தவர்கள், நரசிங்கசுவாமிக்கு தேற்றாமரத்தடியில் ஆலயதொன்றை அமைக்கத் தீர்மானித்தனர். அப்போது ஆலயம் அமைந்திருந்த இடம் அரச காணியாகக் காணப்பட்டது. அரசிற்கு விண்ணப்பித்து நிலத்திற்குரிய பணத்தைக் கொடுத்து அதனை வாங்கினர். இந்நிலத்தை திருவாளர்கள், வயிரவியார் நாகப்பரும், விநாயகர் வேலாயுதருமாகச் சேர்ந்து கி.பி 1866 ஆம் ஆண்டில் வாங்கினர். தேற்றாமரநிழலில் நரசிங்கவைரவ சுவாமிக்கு ஆலயமும், மாரியம்மாளுக்கு அதனருகில் ஒரு ஆலயமும் சிறு குடில்களாக அமைக்கப்பட்டது.

*வளரும்...*





OM NAMO NARAYANA

125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**08-03-2024 வெள்ளி தொடக்கம் 14-03-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** தனவரவுகள் பெருகும் வாரம். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தேக பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். தொட்ட காரியம் ஜெயமாகும். முயற்சியில் வளர்ச்சி அடையும். இரகசியம் காப்பது நல்லது. உதவிகள் குவியும். புதிய சிந்தனை உதயமாகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். பொருள்வரவு ஏற்படும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். தெய்வப்பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி மேம்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். நல்ல செய்திகள் நாடி வரும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். திடீர் பயணம் ஏற்படும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வீடு மனை யோகம் உண்டு. எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். பங்குச்சந்தை லாபம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4*
*அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* N,P




**ரிஷபம்:** வேண்டாத நபர்கள் விலகும் வாரம். விவாதம் வாக்கு வாதங்களாக மாறும். தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். உடல்நலம் சீராகும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கடன் தொல்லை தீரும். மன அமைதி அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். அலைச்சல் ஆதாயம் தரும். பால் தானம் பாவம் போக்கும். வெற்றி எட்டும் காலம். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பணதேவைகள் அதிகரிக்கும். பதவி உயர்வு ஏற்படும். நல்லச்செய்திகள் நாடி வரும். இடையூறு அகலும். பிரார்த்தனை நன்மை தரும். கருத்து வேறுபாடுகள் விலகும். தொழில் வளர்ச்சி பெருகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். பூமியால் நன்மை உண்டு. நட்டமில்லாத திட்டங்கள் நிறைவேறும். மகிழ்ச்சியான செய்திகள் தேடி வரும். சுபச்செலவு அதிகரிக்கும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். அவமானங்கள் அகலும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு.

*வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,9,6,2*
*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Q,U




**மிதுனம்:** குடும்ப பாசம் அதிகரிக்கும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. ஆனந்தம் குடிகொள்ளும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். வணிகத்தொழில் வளம் கூடும். உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். பொருளாதார நிலை உயரும். வெகுமதி பெருகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். தொழில் லாபம் கூடும். நன்மைகள் தொடரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் தரும். எதிரிகள் பலம் குறையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. மிகவும் சுதந்திரமாக செயல்படுவீர்கள். காதல் கசக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,1,4*
*அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* M,I




**கடகம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். பணப்பற்றாக்குறை நீங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் கூடும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமி'ன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். பணிவான பேச்சுக்கள் மன நிம்மதியை தரும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும் தனவரவு உண்டு. திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத்துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பயணம் தவிர்ப்பது நல்லது. அரசு வகையில் ஆதாயம் சேரும். கடன் சுமை குறையும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். வீண் வம்புகள் விலகும். மெத்தனப் போக்கு மாறும். போட்டிகள் உருவாகி மறையும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஆதாயம் பெருகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 2,5,9,4*
*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* F,J




**சிம்மம்:** எண்ணிய காரியத்தில் வெற்றி கிட்டும் வாரம். வாழ்த்துக்கள் கிடைக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோ தைரியம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வீண் வம்பு விலகும். உடல்நலம் சீராகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். செயல்களில் நிதானம் தேவை. புதிய முயற்சி பலிதமாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும்.



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் "ராஜயோகம்"
"ஜோதிட மகரிஷி" Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 9940431377

மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நெருக்கடிகள் குறையும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்புகள் வரும். நட்பு வட்டம் விரிவடையும். அற்புதமான காலம்.

*வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 1,5,7,9*
*அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Q,R




**கன்னி:** பெருமைகள் கிடைக்கும் வாரம். பதற்றம் குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சி வெற்றி தரும். வழக்குகள் சாதகமாகும். விவசாயம் பலன் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விரோதங்கள் அகலும். உத்தியோக மாற்றம் ஏற்படும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெருகும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். தாய்வழி ஆதரவு பெருகும். கல்வியில் பெருமை சேரும். நன்மதிப்பு கூடும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். காரிய வெற்றி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. பகை மாறும். கௌரவம் உயரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* V,Y





**துலாம்:** அருமையான வாய்ப்புக்கள் அமையும் வாரம். நினைவாற்றல் பெருகும். பணமும், பாராட்டுக்களும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனை அகலும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். செயல்பாட்டில் கவனம் தேவை. கடன் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். மருத்துவச் செலவு குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மனச்சுமை குறையும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேச பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கை உண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். இலக்கிய ஆர்வம் கூடும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 8,5,5,4*
*அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* H,K




**விருச்சிகம்:** இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சியை தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலைகள் காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. வெகுமதி தேடி வரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பெற்றோரின் அன்பு கூடும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தாய் தந்தை உதவி உண்டு. மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 2,4,3,1*
*அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* H,L




**தனுசு:** அசையா சொத்துக்கள் சேரும் வாரம். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். போட்டிகள் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வு நல்லது. முயற்சி பலன் தரும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. கடன் பிரச்சனை தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். பயணம் தவிர்ப்பது நல்லது. கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். பணப்புழக்கம் சரளமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய்கள் அகலும். செல்வாக்கு உயரும். பெயர், புகழ் கௌரவம் உயரும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். மனஅமைதியும் மகிழ்ச்சியும் கிட்டும். பணிவான பேச்சுக்கள் தேவை. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிர்ப்புகள் அடங்கும். இடமாற்றம் நன்மை தரும். முன்கோபத்தை தவிர்க்கவும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். மனப்பாங்கு ஏற்படும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். உணவு பிரியம் அதிகரிக்கும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். எதிர்ப்புகள் விலகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 1,9,7,3*
*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* F,K

(தொடர்ச்சி 29 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் நாவிதன்வெளி பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(7-03-2024)

நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நான்காம் கிராமத்தில் உள்ள கமு/ சது வேம்படி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கொப்பிகள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன் தலைமையில் நடைபெற்ற கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்.






# சாய்ந்தமருது மத்ரஸா ஒன்றில்மத்ரஸா மாணவனின் மர்ம மரணம். 4 பேருக்கு கடும் நிபந்தனையுடன் பிணை — மௌலவிக்கு விளக்கமறியல்

(07-03-2024)

மத்ரஸா மாணவனின் மர்ம மரணம் தொடர்பாக சிசிடிவி காட்சி உள்ளடக்கிய முக்கிய தடயப் பொருட்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் கைதான 4 சந்தேக நபர்களை கடும் நிபந்தனையின் கீழ் பிணையில் விடுவித்தது கல்முனை நீதிவான் நீதிமன்றம்.

குறித்த வழக்கு புதன்கிழமை (6) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மௌலவி உட்பட சிசிடிவி காணொளிகளை அழித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர்களும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிசிடிவி காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப் பொருட்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் கைதான 4 சந்தேக நபர்களை கடும் நிபந்தனையின் கீழ் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்ட நீதிவான் மற்றுமொரு சந்தேக நபரான மௌலவியை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த சம்பவத்தில் கைதான 30,26,22,23 வயது மதிக்கத்தக்க 4 சந்தேக நபர்களை பிணையில் விடுவித்தல் தொடர்பாக சமர்ப்பணம் மற்றும் குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் நீண்ட சமரப்பணத்தின் பின்னர் மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் சிசிடிவி காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப்பொருட்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் கைதான 4 சந்தேக நபர்களை தலா 10 இலட்சம் ரூபா சரீர பிணை, மாதம் இறுதியில் வரும் ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடுதல், வெளிநாட்டு பயணத்தடை, கடவுச்சீட்டு நீதிமன்றில் பாரப்படுத்தல், குறித்த வழக்கு தவணைகளில் தவறாது ஆஜராகுதல், உள்ளிட்ட பிணை நிபந்தனை விதிக்கப்பட்டு மற்றுமொரு சந்தேக நபரான மௌலவிக்கு விளக்கமறியல் நீடிக்கபட்டு எதிர்வரும் மார்ச் மாதம் 20 திகதி வரை வழக்கினை ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.



செய்தியின் பின்னணி

13 வயது சிறுவன் சடலமாக மீட்பு-குர்ஆன் மதரஸா நிர்வாகி கைது-சாய்ந்தமருது பகுதியில் சம்பவம்.
13 வயது மாணவன் தூக்கில் தொங்கிய நிலையில் மலசல கூடத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தை வீதியில் அமைந்துள்ள 3 மாடி கட்டடம் ஒன்றில் நடாத்தப்படும் மத்ரஸா ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை (5) மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியை சேர்ந்த எம்.எஸ். முஸ்அப் (வயது-13) எனும் கல்வி கற்று வந்த மாணவனே தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மத்ரஸாவில் மஹ்ரீப் தொழுகைக்கு ஏனைய மாணவர்கள் கலந்து கொண்ட நிலையில் மரணமடைந்த மாணவன் அங்கு காணப்படாததன் காரணமாக சில மாணவர்கள் தேடிய நிலையில் மலசல கூடத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் அம்மாணவன் மீட்கப்பட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.இதே வேளை மரணமடைந்த மாணவனின் பெற்றோர் உறவினர்கள் தூக்கில் தொங்குவதற்கு எமது பிள்ளை கோழையல்ல எனவும் ஏதோ ஒன்று நடைபெற்றுள்ளதை ஊகிக்க முடிவதாகவும் முறையான விசாரணை அவசியம் என கேட்டுக்கொண்டனர்.

இதனை அடுத்து மத்ரஸா மாணவனின் மரணத்தில் சந்தேகம் என குறித்த மத்ரஸாவினை சுற்றி பொதுமக்கள் குவிந்தமையினால் சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று நிலமையை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.



மேலும் குறித்த மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பொதுமக்கள் ஒன்று கூடி குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது தாக்குதல் மேற்கொள்ள தயாராகிய வேளை மேலதிக பொலிஸார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்ட நிலையில் சாய்ந்தமருது பொலிஸாரால் மதரஸா நிர்வாகியாகிய மௌலவி கைது செய்யப்பட்டு அழைத்து செல்லப்பட்டார்.

இது தவிர குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது ஏற்கனவே பல பொலிஸ் முறைப்பாடுகள் இருப்பதாகவும் மாணவனின் மரணம் தற்கொலையல்ல என கூறி பொதுமக்கள் குழப்பத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## இவ்வார ராசிபலன்

*(28 பக்கத் தொடர்ச்சி)*




**மகரம்:** திருப்புமுனையைச் சந்திக்கும் வாரம். சச்சரவுகள் அகலும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். காதலில் வெற்றிக் காண்பீர்கள். உடல்நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளியூர் பயணம் உண்டு. இனிப்பான செய்திகள் வரும். வியாபாரம் வெற்றித் தரும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீட்டுத்தொல்லைகள் தீரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். புதுமையை விரும்புவீர்கள். சகோதர வழியில் கவனம் தேவை. மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தந்திரமாக செயல்படுவீர்கள். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வம்பு வழக்குகள் தீரும். வேலைப்பளு கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும்.பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். தெய்வ நம்பிக்கைக் கூடும். முயற்சிகள் தாமதம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3
அதிர்ஷ்டநிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




**கும்பம்:** உறவும், வரவும் கிடைக்கும் வாரம். பதவி உயர்வு கிட்டும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். பயணம் உற்சாகம் தரும். நண்பர்கள் பாராட்டு கிடைக்கும். உத்தியோக உயர்வு உண்டு. மங்களச் செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். பழைய பகை தீரும். பெருமிதம் நிறைந்த காலம். கலவரமான சூழ்நிலைகள் ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். ஆரோக்கியம் சீராகும். இனிய தகவல் வந்து சேரும். சாதனை படைக்கும் காலம். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு இனிக்கும். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பிள்ளைகளால் தன வரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் ஆதிக்கம் உயரும். தீர்த்த யாத்திரை உண்டு. பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மன பயம் ஏற்படும். உடம்பில் வலி வந்து நீங்கும். திடீர் பயணம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவி உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**மீனம்:** ஆரோக்கியம் சீராகும் வாரம். திருமகள் கிருபைகள் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். முயற்சிகள் வெற்றி தரும். வேலைப்பளு குறையும். பதவி உயர்வு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். திக்கற்ற நிலை மாறும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவுகள் கூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத்தடை நீங்கும். வீண் வம்பு அகலும். காதல் கை கூடும். விவேக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. நலமே விளையும் வாரமாகும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். பங்குச்சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. உங்களின் தனித்தன்மை வெளிப்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக்கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Z

# "குடிநீரை இழக்கத் தயாரில்லை" அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிராக கிளர்ந்த தோட்ட மக்கள்

- பார்த்திபன் சண்முகநாதன்



பல வருடங்களாக தாம் பயன்படுத்தும் நீரை இல்லாமல் செய்யும் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுப்பதாக தலவாக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தோட்ட தமிழ் மக்கள் குழுவொன்று குற்றம் சாட்டுகின்றது.

தலவாக்கலை நகருக்கான குடிநீரை விநியோகத் திட்டத்தை விரிவாக்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டினால், தாம் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் சிக்கலை எதிர்நோக்க நேரிடும் என தலவாக்கலை, கல்கந்தை தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கல்கந்த தோட்ட மக்கள் நீரைப் பெற்றுக்கொள்ளும் கல்லாறு ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள அணையை மேலும் உயர்த்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை காரணமாக தோட்ட மக்களுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்படும் என கல்கந்த தோட்டத்தைச் சேர்ந்த ப்'பநாதன் மோகன் தெரிவிக்கின்றார்.

"ஆரம்பத்தில் பழைய அணைக்கட்டுக்கு அருகில் கல் ஒன்றை உடைப்பதாக தெரிவித்தே பணிகளை ஆரம்பித்தார்கள். எனினும் பின்னர் ஒரு அடி உயரத்தில் இருக்கும் பழைய அணையை சுமார் ஐந்து அடிக்கு உயர்த்தி தோட்டத்திற்கு வரும் நீரை முழுமையாக இல்லாமல் செய்யும் வகையில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த தோட்டத்தில் சுமார் 250 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 700 பேர் வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரும் இதனால் பாதிக்கப்படப்போகிறார்கள்."

தலவாக்கலை, லிந்துலை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் - கல்கந்த தோட்டத்தில் சுமார் 250ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வதோடு, இவர்களில் சுமார் 30 குடும்பங்கள் விவசாயத்திலும் ஈடுபடுகின்றனர். ஒரு சில குடும்பங்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் கல்கந்தவத்தை மலை அடிவாரத்தில் ஆரம்பமாகும் (கல்லாறு) ஆற்று நீரையே இந்த தோட்ட மக்கள் குடிப்பதற்கும் விவசாய நடவடிக்கை உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

தோட்ட நிர்வாகத்தினால் அமைக்கப்பட்டுள்ள இரண்டு நீர்த்தாங்கிகள் ஊடாக நீர் விநியோகம் இடம்பெறுவதாகவும் தோட்ட மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் குறித்த கல்லாறில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள அணையை உயர்த்தி, தலவாக்கலை நகருக்கான குடிநீர்த் திட்டத்தை விரிவுப்படுத்தும் பணிகளுக்கு தோட்ட மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதுத் தொடர்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்பீடம் மற்றும் தோட்ட அதிகாரிக்கு அறிவித்தபோதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மோகன் தெரிவிக்கின்றார்.

"இந்த பிரச்சினை குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ ின் தலைவர்களுக்கு எமது தோட்டத் தலைவர்கள் அறிவித்தனர். தோட்ட அதிகாரிக்கும் இதுத் தொடர்பில் தோட்ட மக்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால் யாரும் கண்டுக்கொள்ளவில்லை."



தமக்கான குடிநீர் விநியோகம் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து கல்கந்த தோட்ட்ட மக்கள் பெப்ரவரி 27ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

"போராடுவோம் போராடுவோம் தண்ணீர் கிடைக்கும் வரை போராடுவோம்," "வேண்டும் வேண்டும் தண்ணீர் வேண்டும்." "மறிக்காதே மறிக்காதே தண்ணீரை மறிக்காதே" போன்ற கோசங்களை எழுப்பியவாறு தோட்ட மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2002ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் தலவாக்கலை நகர நீர் விநியோக வேலைத்திட்டம் என்ற பெயரில் கல்லாறு ஆற்றின் ஒரு பகுதியை மறித்து அணையிட்டு அங்கிருந்து குழாய்கள் ஊடாக தலவாக்கலை நகருக்கு குடிநீர் வழங்கப்பட்டது.

எனினும் இந்தத் திட்டத்தினால் கல்கந்தவத்தை தோட்ட மக்களுக்கான நீர் விநியோகத்தில் எவ்வித சிக்கல்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கும் தோட்ட மக்கள், கடந்த இரு தசாப்தங்களாக தடையின்றி தமக்கு நீரைப் பெற்றுக்கொள்ள முடிவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

எனினும், தற்போது தலவாக்கலை நகரின் நீர்த்தேவை அதிகரித்துள்ள நிலையில், மேலதிகமாக தண்ணீரை பெற்றுக்கொள்ளும் நோக்குடன், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினூடாக ஆற்றின் அணையை மேலும் உயர்த்தி குழாய்களை பொருத்தும் திட்டம் ஒன்றுஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறும், முதலில் கல்கந்தவத்தை தோட்டத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்தத் திடடத்தினால் தமக்கு குடிநீரைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் என தோட்ட மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குடிநீராகவும், விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் கல்லாறு ஆற்றின் நீரையே இத்தனை காலமும் கல்கந்தவத்தை தோட்ட மக்கள் பயன்படுத்தி வந்துள்ளதோடு, நீரைப் பெற்றுக்கொள்ள வேறு வழிகள் ஏதும் அந்த மக்களுக்கு இல்லை என பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கனடிய செய்திகள்
Canadian News

## கனடா வாழ் இலங்கையர்கள் மத்தியில் இலங்கை தேசிய மக்கள் சக்தி கட்சின் அநுர திசாநாயக்க

இலங்கையின் தென்னிலங்கை அரசியலில் பலமிக்க ஒரு எதிர்க்கட்சியாகவும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ச சகோதரர்கள் ஆகியோரின் அரசியல் செல்வாக்கை முறியடிக்கும் வகையில் தீவிரமாக செயற்பட்டு வருபவரும் அண்மையில் இந்தியா மற்றும் அமெரிக்க அரசுகளினால் அழைக்கப்பெற்று கலந்துரையாடல்களை நடத்தியவருமான அநுர திசாநாயக்கா அவர்கள் கனடாவிற்கு வரவுள்ளார்.

கனடா வாழ் இலங்கையர்கள் மத்தியில் இலங்கை தேசிய மக்கள் சக்தி கட்சின் அநுர திசாநாயக்க அவர்கள் இம்மாதம் (மார்ச்) 23ம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ரொறன்ரொ மாநகரில் உள்ள Toronto Pavilion (190 Railside Road, North York) மண்டபத்தில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட மக்கள் மத்தியில் "தீர்வு நோக்கிய மக்கள் சத்தியை கட்டியெழுப்ப" என்னும் கருப்பொருளில் உரையாற்றவுள்ளார்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் தமிழ் மொழி பெயர்ப்பு வசதிகளும் செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக்கூட்டம் தொடர்பான விபரங்களுக்கு: (647) 210-8771 அல்லது (647) 767-4781 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.



*(சென்ற வார தொடர்ச்சி)*

# "13"ஐ சாகடிக்கும் "22"

இதன் ஒரு கட்டமாக மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் 22 ஆவது அரசியலமைப்பு திருத்த தனிநபர் சட்டமூலத்தை உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் கடந்த 21 ஆம் திகதி சமர்ப்பித்தார். பாராளுமன்றம் அன்று காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸ தலைமையில் கூடியபோதே மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் 22 ஆவது அரசியலமைப்பு திருத்த தனிநபர் சட்டமூலத்தை கம்மன்பில சமர்ப்பித்த போது இன்னொரு பேரினவாதியான விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி எம்.பி.யான மொஹமட் முஸம்மில் அதனை வழிமொழிந்தார்.

இதற்கமையவே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் வகையிலான 22 ஆவது திருத்த தனிநபர் சட்டமூலம் கடந்த 12ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு தற்போது பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

52 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், உதய கம்மன் பிலவின் இந்த மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் வகையிலான 22 ஆவது திருத்த தனிநபர் சட்டமூலம் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டவுடன் 52(3) ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் அச்சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணாணதா மற்றும் பதின்மூன்றாம் திருத்தத்தின் ஏற்பாடுகளிற்குட்படுகின்றதாவென்பது தொடர்பாகச் சட்டமா அதிபரின் கருத்தை அறிந்துகொள்வதற்காக அச்சட்டமூலத்தினை சட்டமா அதிபருக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றது. 52(3) ஆ நிலையியற் கட்டளையின் பிரகாரம் ச சட்டமா அதிபர் தனது அவதானிப்புக்களை ஆறு வாரங்களிற்குள் பாராளுமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

அச்சட்ட மூலத்திற்கான சட்டமா அதிபரின் அவதானிப்பினை பெற்றுக்கொண்டதன் பின்னர் 52(4) ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் மூன்று மொழிகளிலும் மீண்டும் வர்த்தமானி அச்சிடப்படுகின்றது. இந்நிலையில் இந்த சட்டமூலம் தொடர்பில் எதிர்ப்புக்கள் இருந்தால் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்கள், தனி நபர்கள், கட்சிகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய முடியும்.

வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதியில் இருந்து 7 நாட்கள் கழிந்ததன் பின், சட்டமூலமானது, முதலாம் மதிப்பீட்டிற்காக 52(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஒழுங்குப் பத்திரத்திலே சேர்க்கப்படுகின்றது. பாராளுமன்றமானது தனிநபர் சட்டமூலத்தின் முதலாம் மதிப்பீட்டினை அங்கீகரிக்க வேண்டும்.

பிரேரணை ஒன்று சபைக்கு விடப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதும் அல்லது சபையால் அனுமதி வழங்கப்படாதபோது இருபதிற்கும் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரின் பிரேரணையை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால், 52(6) ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் அச்சட்டமூலம் முதலாம் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்கு கட்டளையிடுவதாகக் கருதப்படும்.

முதலாம் மதிப்பீட்டின் பின்பு குறிப்பிட்ட சட்டமூலத்தை அச்சிடுவதற்கான கட்டளை வழங்கப்படும் பட்சத்தில், அதனை அச்சிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் 52(6) நிலையியற் கட்டளையின் பிரகாரம் அறிக்கையிடும் பொருட்டுப் பொருத்தமான அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

அமைச்சரின் அறிக்கையானது, அரசியலமைப்பின் உறுப்புரை 77 இற்கு அமைய, சட்ட மாஅதிபரின் குறிப்புரைகளுடனும் அமைச்சரவை அங்கீகாரத்துடனும் பாராளுமன்றத்திற்குக் கிடைக்கப் பெற்றதன் பின்பு,சட்டமூலமானது ஓர் அறிக்கை வடிவிலே அச்சிடப்பட்டுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அமைச்சர் சட்டமூலத்தின் சட்டவாக்கத்தினை அங்கீகரிக்காதவிடத்து சட்டமா அதிபரின் சான்றிதழ் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் என்பன அவசியமற்றதாகும்.

அமைச்சரின் அறிக்கை ஆறு மாதத்திற்குள் கிடைக்காதவிடத்து, சட்டமூல அலுவலகமானது, 52(7) ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம், அதற்குப் பொறுப்பான உறுப்பினர் விரும்பும் தினத்தில் இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுவதற்காக அச்சட்டமூலம் ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அமைச்சரின் அறிக்கையானது பாராளுமன்றச் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமூலத்தின் மீது இரண்டாம் மதிப்பீடு நடத்தப்பட்டதன் பின் சட்டமூலமானது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றது. சட்டமூலமானது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டதன் பின்பு 72 ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டமூலத்தின் மீது மூன்றாம் மதிப்பீடு நடத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்றது.

மூன்றாம் மதிப்பீட்டின் பின், 73 ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் செய்யப்படுகின்ற முன்னறிவித்தலுக்கிணங்க, வார்த்தைகள் அல்லது வரைவு தொடர்பான திருத்தங்களை அதில் செய்யலாமென்பதோடு 74 ஆம் இலக்க நிலையியற் கட்டளையினதும் அரசியலமைப்பின் 79 மற்றும் 80 ஆம் உறுப்புரைகளினதும் கீழ் சபாநாயகரின் சான்றுரைக்காக சமர்ப்பிக்கப்படும்.

தற்போது உதய கம்மன் பிலவின் இந்த மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் வகையிலான 22 ஆவது திருத்த தனிநபர் சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கு எதிராக தமிழ் தரப்புக்கள் உயர் நீதிமன்றத்தை நாடவுள்ளன.இதற்கு உயர் நீதிமன்றம் தனது பரிந்துரைகள், வியாக்கியானத்தை வழங்கும். அதில் பொலிஸ் அதிகாரத்தை நீக்க சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என உயர் நீதிமன்றம் வலியுறுத்தாது விட்டால் தனிநபர் சட்டமூலம் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு வாக்களிப்புக்கு விடப்படும். அவ்வாறு வாக்களிப்புக்கு விடப்பட்டால் அது நிச்சயம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும்.

ஏனெனில் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஒழிக்க வேண்டுமென்பதில் சிங்களத்தரப்புக்கள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டிலேயே உள்ளன. 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக இதனை அவர்கள் நீக்க எடுத்த முயற்சிகள் கை கூடாத நிலையில் தற்போது 22 ஆவது அரசியலமைப்புத் திருத்த தனி நபர் சட்டமூலம் ஊடாக தமது நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றுவதில் உறுதியாகவுள்ளனர். அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறும் ஒருவரே சபாநாயகராக இருப்பதும் இந்த மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரத்தை நீக்கும் தனிநபர் சட்டமூலத்தை நிறைவேற்ற உதவியாகவே இருக்கும்.



மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
·Loans
·Cash
·Debt Consolidation
·1st & 2nd Mortgage
·Home Renovation Loan
·Equity Loans
No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1457 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 8, 2024

# ஸ்காபுறோவில் அமைந்துள்ள "மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஏற்பாட்டில் பங்காரு அடிகளாரின் 84வது பிறந்த தினம்



கனடா- ஸ்காபுறோவில் நாஸ்டின் வீதியில் அமைந்துள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஏற்பாட்டில் பங்காரு அடிகளாரின் 84வது பிறந்த தினம் கடந்த 03-03-2024 ஞாயிற்றுக்கிழமையன்று மன்றத்தின் ஆலயத்தில் விசேட அபிசேகங்கள் மற்றும் வழிபாடுகள் ஆகியவற்றோடு ஆரம்பமாகிய தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றது.

மன்றத்தின் ஸ்தாபகர் 'சக்தி' ஞானம்மா திருநாவுக்கரவு அவர்கள் தலைமை-யில் நடைபெற்ற இந்த விழாவின் உபயகாரராக திரு. திருமதி உமாகாந்த்-விஜி தம்பதியினர் விளங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உள்ளே விபரமான செய்தி 25ம் பக்கத்தில்)

# ஓடாத "நெடுந்தாரகை" படகிற்காக 51 மில்லியனை வழங்கிய வடக்கு மாகாண சபை

-----நடராசா லோகதயாளன்-----



இலங்கையில் அனைத்து துறைகளிலும் பொறுப்புக்கூறல் இல்லை என்பதும் சிவில் நிர்வாகத்தில் படையினரின் பிரசன்னம் மற்றும் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது என்பதும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கவலைக்குரிய விடயமாக சுட்டிக்காட்டப்படுகிறது.

அதே போன்று நாடு கடுமையான பொருளா-தார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், சாதாரணம் கிராம நிர்வாக மட்டத்திலிருந்து, கொழும்பிலுள்ள உயர்மட்டம் வரை ஊழல் தலைவிரித்தாடுகிறது என்பது குறித்தும் பன்னாட்டு அமைப்புகள் ஆவணப்படுத்தியுள்ளன.

இந்நிலையில், ஓடாத ஒரு படகிற்கு 51 மில்லியனுக்கு அதிகமாக பணம் கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ள விவகாரம் 'கனடா உதயனின்' சிறப்பு புலனாய்வில் தெரியவந்துள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 15ம் பக்கத்தில்)


# கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் யாழ்ப்பாணம் கந்தர் மடம் மக்கள் ஒன்றியத்தின் இவ்வருடத்தின் ஒன்றுகூடல்




நூற்றுக்கணக்கான அங்கத்தவர்களைக் கொண்டு நெருக்கமான ஒற்றுமையுடன் ஒன்று பட்ட நோக்கங்களோடு கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் யாழ்ப்பாணம் கந்தர் மடம் மக்கள் ஒன்றியத்தின் இவ்வருடத்தின் ஒன்றுகூடல் கடந்த 24-02-- 2024 அன்று மாலை 7 மணியளவில் 2648 **Eglinton Ave E** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **East Town banquet** மண்டபத்தில் இடம்பெற்றது.

(உள்ளே செய்தி 13ம் பக்கத்தில்)

# கனடா வாழ் "தமிழழகன் மதியழகனின் "சொற்கோ வி.என். மதிஅழகன் – தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப்பதிவு" நூல் அறிமுக விழா




கனடா வாழ் 'தமிழழகன் மதியழகன் அவர்களின் "சொற்கோ வி.என். மதிஅழகன்- தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப்பதிவு" நூல் அறிமுக விழா கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் ஸ்காபறோ நகரசபை மண்டபத்தில் எதிர்வரும் இருபத்திமூன்றாம் திகதி சனிக்கிழமை நண்பகல் ஒன்று முப்பதுக்கு (1.30) தேநீர் விருந்துடன் விழா ஆரம்பமாகும்.

பல்கலை வித்தகர் அகணி சுரேஷ் அவர்கள் விழாவுக்கு தலைமை தாங்குவார்.

இலங்கை சுயாதீன பத்திரிகா சமாஜம்,இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,இலங்கை சுயாதீன தொலைக்காட்சிச் சேவை, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,கனடா ரி.வி.ஐ தொலைக்காட்சி ஆகியவற்றில் 50 ஆண்டு காலத்துக்கும் மேலான சேவைக்காலஅனுபவமுள்ளர் "சொல்லாயன்' வி.என்,மதிஅழகன்.

(உள்ளே செய்தி 13ம் பக்கத்தில்)

# சாந்தனின் ஆன்மா எப்பொழுது அமைதியுறும்?

## யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

சாந்தனின் உடல் இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும். திராவிட கட்சிகளுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான பகையுணர்வை மேலும் அதிகப்படுத்தியிருக்கிறது. சாந்தன் உயிரோடு நாடு திரும்பி அதன் பின் உயிர் நீத்திருந்திருந்தால் அவருடைய சாவு இவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்காது. ஆனால் அவர் உயிரிழந்த பின் தன் தாயி-டம் ஒப்படைக்கப்பட்டமை என்பது பரவலாக உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. 33 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டுத் தன் தா-யைக் காண வந்த கடை-



சி நாட்களில் அவர் உயிர் நீத்தமை அவர் மீ-தான அனுதாபத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக திரண்ட மக்கள் கூட்டம் அதை உணர்த்துகின்றது.

(உள்ளே செய்தி 10ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker

உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சரவதேச
விருது விழா-2024
Uthayan International
Awards Festival – 2024
For Tickets and information:
416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet
& Event Centre
430 Nugget Ave,
Scarborough, ON M1S 4A4
26th May, 2024
Sunday,
at 6.00 PM